உ

கணபதி துணை.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீஜ்ஞானசம்பந்தகுருப்யோநம:

# திருவுறந்தை இரங்கன்மாலை
# திருவுறந்தை இரட்டைமணிமாலை
# திருவுறந்தைகாந்திமதியம்மை
# கட்டளைக் கலித்துறை

181

இவை

உறையூர் வித்வான்

மகா-ள-ள-ஸ்ரீ

சி. வாஞ்சைலிங்கவைத்தியநாதசெட்டியாரவர்களை

மாணாக்கருளொருவராகிய

க. பெரியசாமிபிள்ளையாலியற்றப்பட்டு

ஓவர்சியர்

மகா-ள-ள-ஸ்ரீ

உறையூர்

சி. வீரப்பிள்ளையவர்களால்

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR, MADRAS

திருச்சி டாட்ஸன் அச்சாபீசில் பதிப்பிக்கப்பட்டன.

1901

உ

கணபதிதுணை.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீஜ்ஞானசம்பந்தகுருப்யோநம

# திருவுறந்தையிரங்கன்மாலை
# திருவுறந்தையிரட்டைமணிமாலை
# திருவுறந்தைகாந்திமதியம்மை
# கட்டளைக் கலித்துறை.

181

இவை

உறையூர் வித்வான்

மகா-ள-ள-ஸ்ரீ

சிவலிங்கவைத்தியநாதசெட்டியாரவர்கள்

மாணாக்கருளொருவராகிய

தே. பெரியசாமிபிள்ளையாலியற்றப்பட்டு

ஓவாசியா

மகா-ள-ள-ஸ்ரீ

உறையூர்

சி. வீரப்பிள்ளையவர்களால்

திருச்சி டாட்ஸன் அச்சாபீசில் பதிப்பிக்கப்பட்டன.

1901

உ

சிவமயம்.

சாற்றுக்கவிகள்.

# இப்பிரபந்தஞ்செய்தார்க்கு

ஆசிரியராகிய

உறையூர்

வித்வான்

## சி. வாஞ்சைலிங்கவைத்தியநாதசெட்டியாரவர்

இயற்றியது.

### வெண்பா.

சீருறையுந்தெய்வத்திருவுறையூர் வாழ்பதியை
யேருறையுநற்பாவாலேததினான்—நாருறையும்
உள்ளமொடு வந்துதினமோவாப்பணிபுரியும்
எள்ளவிலாவென்மாணவன்.

திருப்பரங்குன்றம் அ. நாராயணசரணரவர்கள்
இயற்றியது.

மங்கையர்தனங்கணவயவனிகராவழக்கினாற் கமலத்தின்மருவிச்
சங்கையுற்றன்னந் துறந்தொருதாளிற்றவமுஞற்றிடுமரைத்தடஞ்சே
துங்கநீண்மாடவரிசை சூழுறந்தைத்தூயநற்கடவுள் சேவடியிற்
றங்கநன்மாலையணிந்தனன் பெரியசாமி நன்னாவலன்மாதோ.

இப்பிரபந்தஞ் செய்தவரோடு கல்விபயின்றவராகிய

உறையூர்

செ. சாமிநாதபிள்ளையவர்கள் இயற்றியது.

கமலங்குழையக்கயல்பாயுங் கடிகொள்தடஞ்சூழுறந்தைநகர்
விமலனடியிற்பாமாலை வியப்பவணிந்தேபுகழ்பெற்றான்
அமலசைவசித்தாந்த சமயநன்னூலாய்ந்துகொடுஞ்
சமலமுருக்கும் புலவர்புகழ்பெரியசாமித்தமிழ்வலனே.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீஜ்ஞானசம்பந்தகுருப்யோநம:

# திருவுறந்தை

# இரங்கன்மாலை.

### காப்பு

திங்களணி சடையானைத் திகழ்நான்கு புயத்தானைத்தீதிலாத
வங்கருணை வடிவானையருமறைபின் பொருளானையமரரேத்தும்
பொங்கடியின் முகத்தானைப் புலவர்தமக்கெளியானைப் புகழ்மிக்கானை
மங்கலநற்பெயரானை மாவுறந்தைப்பதியானை மனத்திற்சேர்ப்பாம்.

### சமயாசாரியர் துதி.

நிலம்பூத்தபரசமயக்குழுவேங்கவருட்சைவ நிலவியோங்க
அலம்பூத்தவுயிர்த் தொகுதிபிருணீங்க வடியருளத்தன்பு தேங்கப்
பொலம்பூத்ததமிழ் மறையைப்புகன்றருள் புத்தமுதனைய புனிதராய
நலப்பூத்த நால்வர்கட னளினமலர்ச்சேவடியை நண்ணி வாழ்வாம்.

### நூல்

சீரார் மறைபின் பொருளுணர்ந்த செய்யவுதங்கமுனிவன் முன
மேரார் நினது தளியடைய விலங்கு சித்தசுத்தியொடு
பேராருயர் நற்றிருவருளாம் பேற்றைபளித்த பெருந்தகையே
பாரார் பழனஞ்சூழுறந்தைப்பரமாவடியேற்கிரங்காயே. (க)

கமலமீதில் விழிவளருங் கதிர்கொள் திகரிப்படையானுங்
கமலமேவு நான்முகனுங் காண்டற்கரிய கழலினையென்
சமலம் போக்கியருள்வை யெனச்சழக்கனேனின் றுனை யடைந்தேன்
அமலம் பொலியுந்திருவுறந்தையர சேவடியேற்கிரங்காயே. (உ)

மூவாமுதலே முப்புரத்தை முளரிகதுவப்புரிந்தவனே
கோவாமணியே குணக்கடலே கோதிலாத தெள்ளமுதே
சேவார்கொடியையுடையவனே சேணார்மன்றினடிப்பவனே
மாவார் நளினிசூழுறந்தைவாண வடியேற்கிறங்காயே.

கண்டார்கிளவியொரு பாகாகதியார் தெய்வச்சிவலோகா
பண்டார் கலியின்விடஆணைபைவாளரவப்பணிப்பூண
கண்டாருளத்தைக் கவர்தூயாகருதார் புரங்களெரிவாயா
வண்டார்கழனி சூழுறந்தைவாணவடி யேற்கிரங்காயே.

தினமேகொலைகண் முதலானதீய தொழிலே செய்வதற்கு
மனமே துணிந்து மங்கையர் பால் வாணாள் கழிக்கமேவாது
தனமேபுரையுமிணையடியென்றலையிற் சூட்டியாண்டருள
வனமேலோங்குந்திருவுறந்தை வள்ளாலடியேற்கிரங்காயே

உன்னற்கரிய பரம்பொருளே யுண்ருமடியரகத்தொளியே
கன்னறகரிய தேனு மொழியாள் கலந்த வாமத்திறையவனே
மன்னர்க்கரிய வாழ்வுதனை வழங்குங்கருணைக்கற்பகமே
பன்னற்கரிய புகழுறந்தைப்பதியே யடியேற்கிரங்காயே

காவிநிகருங்கருங் கண்ணார் கடியவலையிலகப்பட்டே
வாவியிழந்து மதியினொடு வன்புமிழந்துமகிலமெலாம்
பாவியெனவே பகர்வதனைப் பாராதருள்வை யெனவடைந்தேன்
வாவிசூழுந்திருவுறந்தை வாழ்வே யடியேற்கிரங்காயே

ஆவாநினக்குவுதங்களைப் போலன்பு புரிவாரிலையதனாற்
காவாதொழிதன் மற்றவரைக்கருணைக் கழகோகார் மேகம்
தாவாமருத நிலத்தன்றித்தண்ணந்தாழையுவர் நிலத்து
மோவாதளிக்கு மேவுறந்தை யுடையாயடியேற்கிரங்காயே

ஆழிபுடை சூழுலகினினதடி நாண்மலரையன்றியொரு
பாழியமையாக்கடவுள ர்தம்பதவியடைய மனந்துணியேன்
வீழிநலங்கொளிதழுமையாள் விழிகள் களிக்கநடம்புரியும்
வாழிவளங்கொடி ருவுறந்தை வரதாவடியேற் கிரங்காயே

செயலார் சைவச்செந்நெறியோர் சிந்தைகளிக்க நடம்புரிந்து
மயலார் மற்றைமதியிலர்பான் மருவாதொளிரு மாமணியே
கயலார் கண்ணியொரு பாகங்கலந்தகருணைப் பெருங்கடலே
புயலார் மாடமோங்குறந்தைப் புனிதாவடி யேற்கிரங்காயே

வள்ளாலுன்றன்றிரு நீற்றை வாங்கிவணிகன் முனந்தரித்துக்
கொள்ளாதிகழ்ந்த தீங்கதனாற் கொண்டவன்றி வடிவுதனை
யெள்ளாதகற்றி யருளளித்த வேசில்கருணை குறித்தடைந்தேன்
புள்ளார் சோலை சூழுறந்தைப் பொருளே யடியேற்கிரங்காயே (௰௧)

நெல்லிற்குமியுஞ் செம்பினுக்கு நிகழுங்களிம்பன்றேயுளபோல்
அல்லிற் கிணையாமலமாயாகன்ம மணுவிற்குண்டெனினும்
எல்லிற்பிறங்கு நின்கருணை யெதிரினவைகணிலையுளவோ
இல்லிற்கமலையுறையுறந்தை யீசாவடியேற்கிரங்காயே (௰௨)

கங்கைதிகழுஞ்சடையுடையாய் கருதற்கரிய திருவுடையாய்
மங்கை திகழும் பாலுடையாய் மதித்தற்கரிய பேருடையாய்
அங்கை திகழுஞ்சிரமுடையாயழித்தற்கரியவறவிடையாய்
சங்கைதிகழாச் சபையுறந்தைச் சாமியடியேற்கிரங்காயே (௰௩)

பரவுநமது பெருங்கருணை பத்தருக்கினல்லாது
விரவுமோ மற்றையர்க் கென்னின் வீறுவெள்ளமுததியன்றி
யுரவுவிழந்த வெறும்பளையு முறுதலறிதி யுயர்சிவமே
புரவுமலி நற்றிருவுறந்தைப் புனிதாவடியேற்கிரங்காயே (௰௪)

கலவுமொற்றை மலமுடையார் களிக்கவறிவுக்கறிவாயு
முலவுவிடை மேலிருமலத்தாருள்ளங் குளிரவந்து முயர்
குலவு முருவமானுடர் போற்கொண்டு சகலர் தமக்குமரு
ணிலவுதவள் மாளிகையுறந்தை நிமலாவடியேற்கிரங்காயே (௰௫)

ஐயவிழைத்த பிழைகளெலாமளவிற் கரியதாயினுநின்
றுய்யகருணையணு குறுமேற்றொலைந்து புநிதமருவாதோ
வெய்யவாளும் பரிசனஞ்சேர் வேதிதீண்டப் பொன்னாமே
தொய்யின் முலையார் சூழுறந்தைத் தோன்றாவடியேற் கிரங்காயே (௰௬)

வஞ்சநமனார் வாதனைக்கும் வலிய பிறவி வேதனைக்குங்
கஞ்சமனைய முகமடவார் கருங்கட் சரங்கள் பாய்தற்கு
மஞ்சி நினது திருவடியே யபயமெனவின்றடைந்தனனா
லிஞ்சியைந்து சூழுறந்தை யிறைவாவடியேற் கிரங்காயே (௰௭)

அன்றுமல கேவலத்தினிடையழுந்திக் கிடந்தநாயேற்கு
நன்று சகலம் வருவித்த நன்மையதனையுணர்ந்தெளியே
னின்றுசுத்தம் பெறுவதற்கே யெண்ணினேன் மற்றவையருள
துன்றுவளங்கள் சூழுறந்தைத் தூயாவடியேற்கிரங்காயே (௰௮)

தவத்திற்பயிலு மடியவர்க்கேதாராநிற்கு மலரடியை
யவத்திற்பயிலுமரிவையர்க்கே யாசைபுரிந்து கழிதுயர் செய்
பவத்திற்பயிலு மெளியேற்குப்பாலிப் பாயென்றுனையடைந்தேன்
நவத்திற்பயிலுந்திருவுறந்தை நாதாவடியேற்கிரங்காயே (௰௯)

வேலைக்காட்டும் விழிகாட்டி விளங்குமறிவினிலை குலைய
மாலைக்காட்டு மங்கையர்க்கே மனதைக்காட்டி மாளாமற்
காலைக்காட்டியாள்வை யெனக்களிப்பைக்காட்டி யுனையடைந்தேன்
சேலைக்காட்டும் வயலுறந்தை தேவே யடியேற்கிரங்காயே (௨௰)

துணியார்மன்றினடிப்பவனே தூய்மைமிகு நல்லுயர் சிவமே
மணிபார் கூந்தற்காந்திமதி மங்கை மகிழும் வான்பொருளே (தேன்
பிணியார் மலத்தைப்போக்கியொளிர் பேற்றையளிப்பையெனவடைந்
னணியார்சிகரிமலி யுறந்தையமலாவடியேற்கிரங்காயே (௨௧)

எண்ணிலாதவுயிர்கடொறு மெள்ளிலெண்ணைபோல்மருவிப்
பண்ணுமவைகள் வினைக்கேற்ற பயனையளிக்கும் பரசிவமே
யெண்ணற்கரியவுலகமெலா மீன்றாளுறையுமொரு பாகா
தண்ணங்கமலத்தடமுறந்தைத்தலை வாவடியேற்கிரங்காயே (௨௨)

தும்பிபாடுமலர்க்கணையோன் தொலையவிழித்த நுதல்விழியை
நம்பியுனதுமலரடியை நயந்தவெளியேன்மலமடைய
வம்புநிகருங்குழன் மாதராசையொழித்தவறிவினர்சூழ்
கம்புபயிலும் வயலுறந்தைக் கடவுளடியேற்கிரங்காயே (௨௩)

முன்செய்வினையின் வழிபோந்தமூடனேனைவருந்தாது
கொன்செய்நினது திருவடியைக்கொடுத்துப்பிறவித்துயர்போக்க
மின்செயிடைசேர் காந்திமதிவிழையுங்கருணைக்கற்பகமே
பொன்செய்மாடஞ் சூழுறந்தைப்புனிதாவடியேற்கிரங்காயே (௨௪)

துன்பக்கடலைக்கடந்தெளியேன் துலங்குநினதுதிருவருளா
மின்பக்கடலைத்திளைப்பதற்கே யெண்ணியடைந்தேனவைதீர்ந்த
வன்பர்மனமாந்தளியதனினகலா தொளிருமரசேவீண்
வன்பர்மருவாத்திருவுறந்தை வரதாவடியேற்கிரங்காயே (௨௫)

சேலின்மிளிருங்கண்ணிணை கொள்செல்விமருவுநிறமுடைய
மாலின்வாழ்வுமருமலரோன் வாழ்வுமற்றைவானவர்தம்
பாலினுடையவாழ்வனைத்தும் பற்றேனினதுவாழ்வன்றி
சாலிவளரும்வயலுறந்தைச் சாமியடியேற்கிரங்காயே (௨௬)

கொடியகொலைகண்முதலாகக் கூறுமனந்தவினைகளையே
படியிற்புரிந்துமிகவலுத்த பாவியெனினுமரைமலர்ச்சே
வடியிலிறுத்துவாயென வின்றாசையுடனேவந்தடைந்தேன்
மடிவில்கழதஞ்சூழுறந்தை மன்னுவடியேற்கிறங்காயே (உஎ)

அறையும்வினையின்வழியே போந்தமைந்தவுடலையானெனவே
மிறைகொள்பிறவிப்புணரியிடை வீழ்ந்துவருந்தாவகைபுரிந்து
நறையின்மிகுந்தமலர்க்கரசா நளினமலர்ச்சேவடியருளத்
தறையிற்பொலியுந் திருவுறந்தைத்தலைவாவடியேற்கிரங்காயே (உஅ)

அருப்பமலியிப்பிறவியெனு மகன்றகடலினுழலாது
கருப்பமுடையகாரெனவே கருணைமழையைப்பொழிந்தருள
மருப்பேயகிற்சந்தனக்குறட்டை வாரியெறியுங்காவிரிபாய்
கருப்பங்கழனிசூழுறந்தைக் கடவுளடியேற்கிரங்காயே (உகூ)

விண்டுவயன்மான்முதலாய விண்ணுளோர்தம் வாழ்க்கையெலா
பண்டார்கலியினெழுவிடத்தைப் பருகிக்கருணைபுரியாயே
லுண்டோவதனையுணர்ந்தே நின்னுபயமலர்த்தாள்வந்தடைந்தேன்
கண்டுமொழியார்பயிலுறந்தைக் கடவுளடியேற்கிரங்காயே (௩௰)

திருவுறந்தையிரங்கன்மாலை முற்றுப்பெற்றது.

ஸ்ரீ மெய்கண்டதேசிகன்றிருவடி வாழ்க

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீஜ்ஞானசம்பந்தகுருப்யோநம:

# திருவுறந்தை

# இரட்டைமணிமாலை

---

### காப்பு.

பொன்னுருங்கொன்றயினன் புரிசடையின்வாழ்பிறையை
மின்னுருமுமை நுதலாம் விளங்குபிறையோடிணைத்துத்
தென்னுருக்கலைநிறைந்த செழித்தமுழுமதியமென
வுன்னுமிக்குளமகிழும் பன்முகனடிதொழுவாம்

### சமயாசாரியர் துதி.

பங்கமிக்கபவக்கடனின்றெமைத்
துங்கமுத்தித்துறையினிற்சேர்ப்பன
பொங்குசைவம்புவியினிறுவிய
நங்கணால்வர்களினப் பொற்பாதமே

## நூல்.

### வெண்பா.

சீர்மேவுசெல்வத்திருவுறையூர்வாழ்சிவமே
பேர்மேவுமின்பப்பெருக்கே—யேர்மேவு
கண்டங்கரியானேகம்மூன்றுநான்காணுங்
கண்டங்கறியானே கா (க)

## கட்டளைக்கலித்துறை.

காசார்முலையவர்மையலையே மிகக்காதலித்து
மாசார்பிறவிப்புணரியிலாழ்ந்து வருந்துமெனக்
கீசாவடியவர்நேசா வொளிருமியலுறந்தை
வாசாகருணைபுரிந்திடல் வேண்டுமனமுவந்தே (௨)

## வெண்பா.

தேடுகிலேனின்னடியைத் தென்னுறந்தையாயுனையே
பாடுகிலேனின்னுருவைப் பார்க்கிலேன்—கூடுகிலே
னன்பருயர்கூட்டமதையானலு மென்பிறவித்
துன்பகலத்தோன்றியருள்செய் (௩)

## கட்டளைக்கலித்துறை.

அருள்வாயெனதுமலமாயை கன்மமதையகற்றித்
தெருள்வாயுனது திருவருளாகியதெள்ளமுதை
யிருள்வாய்நிறத்தவனோடயன் போற்றுமெழின்மிகுந்த
பொருள்வாயுறந்தைப்பதிவயின் மேயவெம்புண்ணியனே (௪)

## வெண்பா.

புண்ணாகநெஞ்சம் புலம்புகின்றநாயேனை
யெண்ணாதிருப்பதுவுமேற்குமோ—தண்ணார்
கமலத்தடமுறந்தைக் கற்பகமேயுன்கழலாங்
கமலத்தடக்கியினிக்கா (௫)

காவாதிருக்கிலரசேகரியகடலுலகி
லாவாவடியனையாதரிப்பாரெவராதலினற்
றூவாநினதருட்னையின்றீந்துதமியனையா
ளோவாவளமைமலியுறையூரமருத்தமனே (௬)

## வெண்பா.

மனமேதிருவுறந்தை மாநகரின்மேவியவெங்
கனமேயனையகளக்கண்ணுதலைத்—தினமேநீ
சென்றுபணிந்தேத்தியவன் சீரருளைநாடாதே
பொன்றுவதென்வீணேபுகல்

## கட்டளைக்கலித்துரை.

புகலுமுறந்தையெம்புண்ணியனே நின்பொலன்கழலே
புகலெனவின்றடைந்தேனதனாற் புறம்போக்கலின்றி
யிகலுமெனதுமலவிருடன்னை யிரித்துனது
வகலற்கரியவருடனை யூட்டியின்றண்டருளே (அ)

## வெண்பா.

அருளேயுருவாயமைந்தடியருள்ளத்
திருளேதநீக்குமிறைவா—பொருளேயு
நான்மறையுமேத்துறந்தைநாதாவுனதடியி
ஞன்மறையுநாளெந்தநாள் (௯)

## கட்டளைக்கலித்துறை.

நாரணனோடயன்றனறியாத நவிலுமுன
தாரணமாம் வண்டரற்றரவிந்தவடியிணையே
தாரணமாமென்றடைந்த விவ்வேழைதனக்கருள்வாய்
தேரணவுந் தெருவோங்குறந்தைப்பதித்தெள்ளமுதே. (௰)

## வெண்பா.

முத்தரெலாம்போற்றுறந்தை முன்னவனே யுன்னடியைச்
சித்தமிசை வைத்தேத்துஞ் செந்நெறியோர்—முத்தி பெறு
மாறுடையாயென்றுனையேவந்தடைந்த நாயேன்றன்
மாறுடையாயென்னோ வலி. (௰க)

## கட்டளைக்கலித்துறை.

வண்டார் பொழிலுறந்தைப்பதியானை மருவிதழி
வண்டார் புனைந்த படர் சடையானை மலையுயிர்த்த
வண்டார்கரத்தவள் பாகனையன்றிப்புன் வானவரை
வண்டார் கடற்புவிதன்னிலென்ஞான்றும் வணங்கிலனே (௰௨)

## வெண்பா.

வணங்கடியாரன்றியுன்றன் வார்கழலைப்பூமேன்
வணங்கரியார் காணும் வசமோ—கணங்கொடுயர்
மாமாலையாய் முரலும் வண்பொழில்கள் சூழுறந்தை
மாமலையாகுமுருவா (௰௩)

### கட்டளைக்கலித்துறை.

வாரணம்வாவி தொறுமலர் மீதின் வதியுமுயர்
வாரணமாநகர் மேயவனன்றியிம்மாநிலத்தின்
வாரணமாகிப்பிறந்திறந்தான் முதன்வானவரோ
வாரணமாகும் பிறவியைப்போககும் வலியினரே (௰௪)

### வெண்பா.

வண்டறையும் வானகமும் வந்தேத்த வாழ்வருளும்
வண்டறையுஞ் சோலை மருங்குடுத்த—மண்டுபுகழ
பண்ணுறந்தையீசனடிப் பங்கயத்தினென்மனமே
நண்ணுவதற்கென்றோ நவில். (௰௫)

### கட்டளைக்கலித்துறை.

வில்லார்கலன் களணி மடவார்கடம் வேட்கையினாற்
பொல்லா நரகத்திடையேயழுந்தும் பொறியிலியாங்
கல்லாமனத்துக்கடையவனேற்தங் கதியருள் வாய்
செல்லார் பொழிலுறந்தைப் பதிமேய செழுஞ்சுடரே (௰௬)

### வெண்பா.

சுடர்தவழு மாமதில்சூழ் தொல்லுறந்தை வாழ்பரமே
அடர் விடையொன்றூருமமலா—படர்பவளச்
செஞ்சடையாயென்பாற் கண்தென்றிசையோன்றன் பாசம்
பஞ்சடையாவண்ணமெனைப்பார் (௰௭)

### கட்டளைக்கலித்துறை.

பார்வையினான்மதன் மேனியை நீற்றபரமனிடம்
ஏர்மிகு கூனலுயிர்த்தவெண் முத்தத்தினை யெகின
மார்தருதங்கள் கருவெனவுன்னியடை கிடக்குஞ்
சீர்கெழு பண்ணைகள் சூழ்ந்தொளிர் கோழித்திருநகரே (௰௮)

### வெண்பா

திருவுறந்தை வாழுஞ் சிவன்மிடற்றினஞ்சை
மருவவைத்திலானேல் வயங்கு-மருமலர்சேர்
பொன்னுரு மார்பானும்-போல்வார்தம் வாழ்வனைத்தும்
பின்னுகாதுண்டோ பிற (௰௯)

கட்டளைக்கலித்துறை

பிறந்திறவாத பெருநெறியானைப்பிரமரங்கள்
பறந்திசை பாடும் படலையினானைப் பராபரனை
யுறந்தையிலேயமரும்பர்தங் கோனையுவந்திறைஞ்சிற்
சிறந்தொளிர் பூமகணுமகளோக்குடன் சீர்வருமே (உ௰)

திருவுறந்தையிரட்டைமணி மாலை
முற்றிற்று
ஸ்ரீ மெய்கண்ட தேசிகன்றிருவடிவாழ்க.
திருச்சிற்றம்பலம்

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீஜ்ஞானசம்பந்தகுருப்யோநம:

திருவுறந்தை

ஸ்ரீ காந்திமதியம்மை

# கட்டளைக் கலித்துறை.

காப்பு.

சீருலவுமொருகோட்டுச் சிவக்களிற்றின் மலரனைய
யேருலவுமிணையடியை யிறைஞ்சுதுமின் றுளமுவந்தே
காருலவும் பசுத்துவமாங்கரிசறவுங்கருதவொணாப்
பேருலவும்பதித்துவமாம் பெற்றியினிதெய்தவுமே.

## சமயாசாரியர் துதி.

பாடிழந்த பரசமயக்குழா
மோடுமாறு முலகினிற்சைவமே
நீடுமாறு நிகழ்த்திய நால்வர்தாள்
பாடுவாரடிபாடிப் பணிவமால்.

## நூல்.

சீரார்புகலித்திருநகர் தன்னிற்றிகழுமரு
ளேரார்சிவசமயந்தழைத் தோங்கிடவெண்ணியழும்
பேரார்கவுணியக்கோவெனுந் தெய்வப்பெருந்தகைக்கே
வாரார்திருமுலைப்பாலருள் காந்திமதியம்மையே (௧)

அனையேயுயிர்களனைத்தையு மீன்றங்கவைதனக்கேய்
வினையேயளித்துப்பின் மெய்யானவீட்டின்மிகவிறுத்து
முனையேயலதிங்கெவருளரின்றெனக்குற்றவரே
வனையேய்திருவடிதந்தருள் காந்திமதியம்மையே (௨)

மானேர்விழிகொளுமாதே மலையரையன்மகிழுந்
தேனேயடியவர்சிந்தையிலே யொளிர்தெள்ளமுதே
யானேரமலனிடத்தினிற்பூத்தவருட்கொடியே
வானேபொருவவெனக்கருள் காந்திமதியம்மையே (௩)

அந்தரியேயகிலாண்ட மனைத்தையுமன்றளித்த
சுந்தரியேசுயஞ்சோதியின் பாலுறைதூமயிலே
வந்தரியேத்துமலரடி தந்தெனைவாழ்வித்திட
மந்தரமின்றியருள்புரி காந்திமதியம்மையே (௪)

உன்னுந்திருவுறந்தைப்பதிமேய வொருவனிடந்
துன்னுங்கருணைத்திருவுருவாகியதொன்மயிலே
பன்னுங்கலசமுலையை யுடையபசுங்கொடியே
மன்னும்பதத்தையெனக்கருள் காந்திமதியம்மையே (௫

ஆனையினீருரிபோர்த்தவழகனிடத்தமர்ந்த
தேனைமருவுமளகமுடைய நற்றெய்வமின்னே
யூனைத்தின்றானைவளர்ப் பதகற்றியுனதருள்தா
மானையனையவிழிகொளுங் காந்திமதியம்மையே (௬)

பேயேன்மிகவும்பிழை யுடையேனெனப்பேசிவிட்டேற்
சேயேபுரியுங்கொடு வினையாவுஞ்செகத்திலுள
தாயேபொறுத்துத் தலையளித்தாளுந்தகைமையுமோர்
வாயேகருணைவடிவெனுங் காந்திமதியம்மையே (௭)

பீடாரனநடைமாதே யுனதுபிறங்கருளை
நாடாதொழிந்தவெளியேன் றனையுநறையொழுகு
மேடார்கமலமலரடி தன்னிலிருத்திவைத்தே
வாடாதிருக்கும்வரமருள் காந்திமதியம்மையே (௮)

நீர்கொளும்வேணியிறைவனிடத்துநிலவுறுநல்
லேர்கொளும்பச்சையிளங்கொடி யென்னுமெழிலனமே
தார்கொளுங்கூந்தலுடைய கருணைத்தடங்கண்ணே
வார்கொளுங்கொங்கை மருவியகாந்திமதியம்மையே (௯)

துப்போதுமேனிப் பெருமானுடையதுணைவியெனுஞ்
செப்போதிளமுலையாளே யெனதுசெறிமலத்தை
யெப்போதகற்றியளிப்பை கொலோவுனதின்னருளை
மைப்போதனையகண்மாதெனுங் காந்திமதியம்மையே (௰)

அளவிலுயிர்களைப்பெற்றருணின்னையருமறைக
ளிளமுலைக்கன்னியென வொழியாமலியம்பலென்னே
பளகிலுறந்தைப்பரனிடங் கொண்டபசுங்கொடியே
வளமலிதிங்களெனுமுகக் காந்திமதியம்மையே (௰௧)

சிலையாமெனப்புகன்வன்னெஞ்சனையசிறுவிதிசெய்
தொலையாக்குறையைத் தொலைப்பதற்கேவந்துதோன்றினையான்
மலைடான்மகளெனமற்றிவன்செய்தவருத்தமென்னே
வலையான்மகளெனவந்தனைகாந்திமதியம்மையே (௰௨)

செங்கையின்மானைத்தரித்தருள்செய்யசிவனிடத்து
பங்கிலெஞ்ஞான்றுமிருக்குமுனக்குப்பசுமயில்போ
லங்கம்பசுமைநிறத்தைமிகவுமடைந்ததென்னே
மங்கயர்தங்களரசெனுங்காந்திமதியம்மையே (௰௩)

தலையிலிருப்பவளா ரெனிலுன்றன் றலைவனங்காய்
அலை புனலென்பனவையலவுண்மைபறைதவென்யான்
தொலைவிலுனது மலரடியென்றலை சூட்டுவையேன்
மலையின் வளர்ந்த மருந்தெனுங் காந்திமதியம்மையே (௰௪)

தாய்தனைப்போலவே பிள்ளையிருக்குமெனத்தகையோ
ரோய்தலிலாமலுரைப்பரது நிற்கவுன்னிரண்டு
சேய்தனக்கானையோடாறு முகமுஞ் சிறந்ததென்னே
மாய்தலில் கோழிப்பதியுறை காந்திமதி யம்மையே (௰௫)

ஆதரவோடு நீ பெற்றவுயிர்களனைத்தினுளு
மாதவன் றனுமொருவனன்றே மன்னு மற்றவனைத்
தீதகலுன்னுடை முன்னவனென்பர் சிலர்களென்னே
மாதர்க்கணிகலமாகிய காந்திமதியம்மையே (௰௬)

முன்னுமிறைவன முதமகவுக்கு முன்னமிழ்த
மென்னுங்கடலைய ளித்தன ளீயுமெழிற்புகலித்
துன்னு மகவுக்களித்தனை கொங்கைச துலங்கிவற்றன்
மன்னும் புகழுடைந்தாரெவர் காந்திமதியம்மையே (௰௭)

குன்றினைவென்றகுவி முலையாளெனுங் கோற்றொடியே
யென்றினைக் கண்ட பனிபோலவே யென்னிருவினைக
ணன்றினைக்கொண்டவுனதருள் கண்டு நலிதற்கென்னே
மன்றினைமானு மிடைகொளுங்காந்திமதியம்மையே (௰௮)

ஒட்டார் புரமெரி நின்னுடை நாயகனேதுகந்தை
தட்டாதணிந்துரகந்தனைப்பூணுவன்றற்பரை நீ
பட்டாடை சுற்றிப்பலபணி பூண்டிடும் பான்மையென்னே
மட்டாரியன்மணங் கொண்டொளிர் காந்திமதியம்மையே (௰௯)

திருமாலுஞ் செல்வத்திருமலர்மேவுந் திசைமுகனுங்
கருமாலுடையவனென்றிந்த நேமி கருதுதற்கோ
பெருமானுருவையுணர்த்தாதிருந்தனை பெண்ணரசே
மருமாமலையரையன் மகிழ்காந்திமதியம்மையே (௨௰)

ஸ்ரீ காந்திமதியம்மை
கட்டளைக்கலித்துறை
முற்றுபெற்றது.
ஸ்ரீமெய்கண்ட தேசிகன் திருவடி வாழ்க
திருச்சிற்றம்பலம்.

உறையூர் வித்வான் சி. வாஞ்சைலிங்க வைத்தியநாத செட்டி
யாரவர்கள் மாணாக்கருளொருவராகிய கீழப்பழுவூ
ரில்வசிக்கும் தவத்துறை சு. அப்பாவு
பிள்ளையவர்களியற்றியது.

## ஆசிரியப்பா.

சொல்வளருலகஞ் சூழ்ந்து துதிக்கும், நல்வளச்சாலியுநறுஞ்சுவைக்கன்னலும், பொன்னுலகோரும் புகழும்வளமுள, பன்னரும்புவியிற் பருமணிகொழிக்கும், நன்னாடிதுவென நாடெலாங்குலவும், பொன்னிநாட்டிற் பொலிந்துவிளங்கும், மாடமாளிகை மதிதனைத்தடவுங், கூடம்வாய்ந்த கொடியுடைநகரம், காவணந்தோறுங் கட்டுநற்கூந்தல், ஆவணமிலகு முத்தலங்கலையொக்கும், பூந்தாமரை பூங்குவளைகுமுதம், ஏந்தாமுலைகண்ணெழிலுறுமிதழைக், காட்டிவாவெனக் கரமெனுந்திரையா, னீட்டியழைப்பது நிகருநெடுங்கயம், கரும்புகைக்குங் கனிமொழிமங்கையர், சுரும்புகைக்குங் குழல்சூழகிற்புகை, சுற்றிலுஞ்சூழச் சூழல்களிலங்க, வெற்றித்திருமகள் விளங்குமுறையூர், பாவலர்புகழும் பாளபந்துமுத, லேவரும்வியக்கு மிலக்கணமிலக்கியஞ், சித்தாந்தமுதலாத் திகழும்வேதாந்தச், சத்திதுவெனவே சாற்றுஞ்சிகாமணி, வாஞ்சைலிங்கவைத்தியநாத, ஞஞ்சைவமணியகமகிழ்மாணவன், ஐவண்ணநாதரழகுசெஞ்சரணி, லுய்வணம்பெறவே யொளிர்பாமாலை, பெரியசாமிப் பெயரிய புலவன், அரியனவாகவமைத்தனனதனைத், தஞ்சையைச்சார்ந்த தண்கச்சமங்கலம், பிஞ்சின்சுபேதாரெனப் பெயர்பெற்ற, கலிவீரவாக் கலிவராயப்பிள்ளைமால், மலியன்புசேருமாணப் பௌத்திரன், ஆலக்குடியிருந்தழகு நல்லுறந்தையி, லேலக்குடிபுகுந்தோர் சிறப்புற்றோன், கங்கைகுலத்திற்கவின் பெறவந்தோன், செங்குவளைத்தாரணி சிதம்பரவேள், தவத்திலுதித்த தனையனற்குணவான், அவத்திற்செல்லா தருங்கலைகற்றவண், பூவரசரெலாம் புகழ்ந்ததிசயிப்ப, ஓவர்சியர் வேலையிலுயர்வலவன், வீரப்பிள்ளை விறற்பிள்ளையென, பாரோர்களிக்கப் பண்புடனம்ம, எழுதாவெழுத்திலேர்பெற வமைத்தே, பழுதறவீந்தனன் பாவல்லவர்க்கே.

சாற்றுக்கவிகள் முற்றிற்று.

ஸ்ரீ க. சுப்பிரமணிய முதலியார், B.A.

அவர்களின்

அன்பளிப்பு

# பசுபதீசுரர்

# பாமாலை

முதலியன

தே. பெரியசாமி பிள்ளை.

தனதிகாரி,

சைவசித்தாந்த சபை, உறையூர்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீஜ்ஞானசம்பந்தகுருப்யோநம:

கருவூர்

# ஸ்ரீபசுபதீசுரர்பாமாலை

# திருவாணிலைநாதர்போற்றிப் பதிகம்

# ஸ்ரீசௌந்தரநாயகி தசகம்.

இவை

உறையூர்ச் சைவசித்தாந்த சபை தனசாலாதிபரும்
கு. தா. லாலாப்பேட்டைச் சித்தாந்த ஞானப்பிரகாசசபைத்
தலைவருமாகிய ஷை உறையூர்

**தே. பெரியசாமிபிள்ளையாலியற்றப்பெற்று**

நொச்சியமென்று வழங்கும் எச்சிலிளமர்ப்பதி

**நா. ஆதிமூலவாண்டையாரவர்கள்**

விருப்பத்தின்படி பூவாளூர் சைவசித்தாந்த சமையாபிமான
சங்கத்தலைவரும் இந்நூலாசிரியர் மாணாக்கருமாகிய
ஷை பூவாளூர்

**நா. சு. மு. செல்வக்கணபதி செட்டியாரால்**

பதிப்பிக்கப்பெற்றன.

---

ஸ்ரீரங்கம்:
ஸ்ரீ வாணீ விலாஸ் பிரஸ்.
1911.

# சிறப்புப்பாயிரம்

இது

ஆரணிநகரசமஸ்தானவித்வானும் அத்துவிதசித்தாந்தமகோ
த்தாரணரும்-மதுரைத்தமிழ்ச்சங்கப்புலவரும்-சென்னை
இராசாங்கத்தாரானும் மாயாவாததும்சகோளரி
யென்றுறுதிபடுத்தப்பெற்றவருமாகிய
யாழ்ப்பாணத்து மேலைப்புலோலி
மஹாவித்வான்-சதாவதானம்

## ஸ்ரீலஸ்ரீ நா. கதிரைவேற்பிள்ளையவர்களுரைத்தது.

மறையூரும்பதத்தனெடுமறையூருமதளையன் மதிதயாவி,
னிறையூருமுளத்தன் வரையிறையூருங்கரத்தனைந்து நிறத்
தாணஞ்சுக், கறையூருங்களத்தனங்கியிறையூருங்குளத்தனொரு
காந்திக் காந்தை, உறையூரொன்றறிஞர்புகழுறையூரினுழவர்
குலத்துவந்தானாலோ (௧)

ஆர்சிறிய சாமிகளையனுகாணம்பெருஞ்சாமிக்கன்பனிலத்,
தேர்விரியகல்த்தேவராயசுதன் சித்தாந்தவின்பார்கல்வி, ஓர்
வரியகலைகற்றோன் சிவனடியார் திறத்தொழுகுமுண்மை
நேயன், பேர்பெரியசாமியெனும் பாவணன் சீருலகிற்பிர
க்கமன்றே. (௨)

மன்னுலகிற்கலந்தொன்றாய் வேறுனவத்துவிதமாண்பினை
யந்திங், கென்னினுமேயெனக்கினியபதி கருவூரமர்ந்தருளு
மிறைவன்மீது, துன்னியசொற்சுவையருத்தச் சுவையெல்லாம்
பொலிந்திலங்கத்துறும் பாமாலை, கன்னயப்போற்றிப்பதிகஞ்
சௌந்தரநாயகிதசக நவின்றன்மாதோ. (௩)

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீஜ்ஞானசம்பந்த குருப்யோநம:

# கருவூர்ப் பசுபதீசுரர் பாமாலை.

## விநாயகர் (கலி விருத்தம்).

எவன்பிர ணவப்பொரு ளெனமறை யியம்புறு,
*மெவனுரு விருதிணைக் கிறையென விலக்குறு, மெவ
னடி யவர்வினை யெறிசிவ னருள்சுத, னவனிரு சரண்
டொழு தடைகுவங்கதியே.

---

* இருதிணை—உயர்திணை, அஃறிணையென்பன. அவைக்கு இறையென இலக்குறலாவது—அத்திணைப் பொருள் வடிவங்களைத் தம்முருவிற்கொண்டு தெரித்தல். என்னை? விநாயகனார் திருமுகம் அஃறிணைப் பொருளான யானை முகமாகவும், ஏனைய வுறுப்பு உயர்திணைப் பொருளான தேவபூத வடிவங்களாகவுங் கோடலான் என்க.

சுப்பிரமணியர் (ஷை-ஷே றா).

* பமர மேமெழு பௌவஞ் சுவற்றிடச், சமர மார் வடி வேலின்று தாங்குமா, றமர ரேத்துறு மானிலை வைகிய, குமரவேளைக்குறித்து வழுத்துவாம்.

சமயாசாரிய சுவாமிகள், தலநாயன்மார், சந்தானாசாரிய சுவாமிகள் வணக்கம்.

(அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்).

சைவநெறி தழைக்கவரு சிவஞானக் கன்றுடனே சார்ந்தநான்கு, தெய்வவருளாளரெனுஞ் சகக்குரவர் புகழ்ச்சோழர் சிவநேசர்க்கே, யெய்யுமின லெறிந்த தருளு மெறிபத்தர் திருவிசைப்பா வியற்றுமூர, ருய்யவரு மெய்கண்டார் முதற்குரவர் தமைநினைந்திங் குய்ந்தே வாழ்வாம்.

நூல்.

(எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.)

மனமொழி யுடலமூன்றுநின் றனையே வயங்குற நினைந்துருகிடவுங், கனிவினின் புகழேபுரிந்துபா டவு நற்களிப்பினின் பணிகளே செயவு, மினிதெனக் கருள்வை யெனிற்பிறப் பெளியேற் கெத்துணை யெய்தினு மிகழே, னனகநற் கனகச் சினகரக் கருவூரானிலைப் பசுபதீச்சுரனே. (க)

---

* பமரம் மல வாதனையா னேரு மறிவின்மை. எனவே யவிச்சையென்றபடி. எழுபௌவம்-எழுவகைப் பிறவிக்கடல்.

இருமருப் புறக்காற் றழைசெவிக் கரியை யியக்கு றும்பாகனோடெறிந்தே, திருவமிக் குடைநம்மடியவர் க்கின்பஞ் செய்வித்தோன் கொல்லிவ னென்ன, வெ ருவிலேனாய வெய்துறுங்கொடிய வினையினேன் றனக் கருள் வழங்கா, தருவருப்பாயே லென்செய்வேன் கருவூ ரானிலைப் பசுபதீச் சுரனே. (௨)

நாரணன் கமலநாண்மலர்ப்பொகுட்டினனியமர் நா ன்முகன் வெள்ளை, வாரணன் முன்னைமுயிரெவற்றி னையும் வயங்குறக்காரியப்படுத்துங், * காரணனாய கட வுளின்னலது கடையனேன் கருதுவேன் கொல்லோ, வாரண வொலியே மல்குறுங் கருவூரானிலைப் பசுப தீச்சுரனே. (௩)

† கரபுரங் கோவூர் முசுகுந்த நகரங் கடம்பெறிந் தான்பதி பிரம, புரமனை யூர்பாற்கரபுர முனமாபுரங் கற்பபுரிசண் மங்கலக்கேத், திரம்வஞ்சிவீர சோழ மாபுர முற்றிருப்பெயர்பல கொடுதிகழு, மரகரமுழக் கோடன் பர்சூழ்கருவூரானிலைப் பசுபதீச்சுரனே. (௪)

---

* காரியப்படுத்துங் காரணன் என்பதை "சர்வமிதம் ப்ர ஹ்ம விஷ்ணுருத்ரேந்திராஸ்தே" என்றற்றொடக்கத்த அதர் வசிகைச் சுருதி வசனங்களாற் காண்க.

† இப்பெயர்களின் காரணங்களையெல்லாம் கருவூர் மான் மியம் என்னும் நூலிற் காண்க.

பொறிமருமார் பத்தண்ணன் முன்னாகப் புகலுயி
ரெவற்றிற்கு நீயே, * யிறையென மறைமுற்கலையியம்
புண்மையெம் யேனோர்க்கறிவிப்பானினைந்தோ, பறி
நகர்ச்சுரரான் பரவவித்தலத்திற் பசுபதியென்ன வீ
ற்றிருப்பா, யறிவிலா மறவருளம்புகாக் கருவூரானி
லைப் பசுபதீச்சுரனே. (௫)

வடிகெழுமிலை வேல்வடுகிர்க் கண்ணார் மயலெனு
மதுவினை மடுத்தே, படிமிசையெளியேன் மதிமயக்
குற்றுப் பதடியென்றலைதரனன்றே, நெடியவன் பிரம
னிந்திரன்முனோர் நித்தமுந்தாழ்ந்து சூழ்ந்தேத்து,
மடியவர்க்கெய்ப்பில் வைப்பெனுங் கருவூரானிலைப்
பசுபதீச்சுரனே. (௬)

நின்பதந்தனையே நினைந்துநைந்துருக நேர்ந்திடா
நெஞ்சமு நிலைக்கு, நின்பணிபுரியப் பொருந்துறுக்க
யமை நிகழ்ந்திடும் யாக்கையுநினது, நன்புகழ் வழு
த்த வாய்த்திடா நாவுநாயினேற்கென்கொலீ யமை

---

* உயிரெவற்றிற்கும் இறையென்பது "ஏஷாமீசே பசு
பதி: பசூ நாம் சதுஷ்பதா முதசத் விபதாம்" என்னும் யசுர்
வேதக் கூற்றானும் "தஸ்மாருத்ரம் பசூநாமதிபதி:" என்னுஞ்
சாமவேதக் கூற்றானுந் தெரிந்தாம். பறிநகர்=பொன்னகர்.
பறி? குழூஉக்குறி மொழி. பசுபதி, கருவூர், ஆனிலை முதலாய
விவற்றின் காரணங்களை யெல்லாங் கருவூர் மான்மியத்துட்
பரக்கக் காண்க.

த்தா, யன்பெனும் வலையி லகப்படுங் கருவூ ரானிலைப் பசுபதீச் சுரனே. (எ)

நம்பிவந் தொருவர் பசிதவி ரென்ன நவின்றிரப்ப வுமவரெதிரே, வெம்புலா லுடம்பே வயிறென நாளும் வேண்டுவ புசித்திழி நாய்போ, லிம்பரிற் றிரிவேனல தொருபிடியுமீந்திடே னெங்ஙனமுய்வே, னம்புயாத னத்தன் போற்றுறுங் கருவூரானிலைப் பசுபதீச்சு ரனே. (அ)

புல்லனு மெளியேற்கிரங்கி வந்தருளிப் பொலன் கழல் வாழ்வினையருளி, லொல்லுறுதெனவே யொறு க்க வல்லுநர் தாமுரைசெய்மூ வுலகினுமுண்டோ வல்லனுமொருவன் வகுத்ததே வாய்க்காலெனும் வழ க்கிழுக்குமோ வியம, வல்லனேன் வீழ வுதைத்திடுங் கருவூரானிலைப் பசுபதீச்சுரனே. (கூ)

அருண்மொழிப்பாவாம் பன்னிருமுறைக ளிருப் பவு மவற்றினை யொழித்தே, * மருண்மொழிச் சில

* சீகாழித்துறை மணி முதலாய ஆசாரியமூர்த்திகளா னருளப் பெற்றதேவார முதலாகப் பெரிய புராண மிறுதி யவாவுள்ள பன்னிரு திருமுறைகளே திருவருட்பா, திரு முறை என்று முன்னருள்ள அருளாளர்கள் "ஞானோத்தரம்", முதலிய நூல்களினைத் திருப்பவும், நமது கவிஞர் பெரு மான் மீனாட்சிசுந்தரப் பிள்ளை அவர்கள் திருவிடைமருதூரு லா என்னுஞ் சீரிய பிரபந்தக்கண் "வல்லானவனை யன்றி

கார் வழங்கு புன்கனியை யற்றவைக் கொப்புயர்வெ ன்று, மிருண்மொழிக் கயவரினமகன்றுன் றனிணை யடியேத்துநாளுளதோ, யருவுரு வருபரூபமாங் கரு வூரானிலைப் பசுபதீச்சுரனே. (௰)

வஞ்சமே புரியுங் கொடுமனத்தெளிய மடந்தையர் மயற்கடலாழ்ந்து, நெஞ்சமே மெலிந்திங்குழிதரா தெனை நி னிறைகழற் கன்பளுக்கிலையே, கஞ்சமே வயன்மா லிந்திரன் முதலாங் கடவுளர் கைதொழு தேத்து, மஞ்சமேன் மேலோங் க கன்பணைக் கருவூ ரானிலைப் பசுபதீச்சுரனே. (கக)

தேம்பது மத்தம் பொருட்டினி துறையுந் திசை முகப் பிரமனார் வாழ்வும், பாம்பணைத் துயில்கூர் மாயவன் வாழ்வும் பண்ணவர்க் கிறையவன் வாழ்வும், வேம்பென வெறுத்தேன் கனவினும் வேண்டேன் வேண்டனின் னடிப் பணி யொன்றே, வாம்பிரநதி மேற்கரையமற் கருவூரானிலைப் பசுபதீச்சுரனே. (கஉ)

ஞானசம் பந்த வள்ளன் முன் ஞய நால்வரெங் குரவன்மார் நவின்ற, தேனமர்தெய்வத் திருவருட்

---

மாலாதிய பசுக்களெல்லாம் பிரம மெனப்படுமே—வல்லார், திருவருட்பா வோடிலகிற் சேர் பசுக்கள் பாவுந் திருவருட் பா வென்னச் செலுமே" என்று வெள்ளிடை மலை போற்றெ ள்ளிதி னுணர்த்தி யிருப்பவும், அப்பெயர் புனைந்த போலிச் சைவ மருட்பாக்களைக்கொள்ளுங் கயவரைக் குறித்தது.

பாவேற் றிடு செவி தனிற் சிறி யேன்சொ, லூனமிக் குடையபுன்கவியுறுத லொன்றுமோ வெங்ஙனமு ய்வே, ஞா னுகந்தன்பின் வழிபடுங் கருவூரானிலைப் பசுபதீச் சுரனே. (கங)

கழைமொழியுமையம்பிகை விழிகளிப்பக் கருணை மாநடம்புரி நினது, கழலிணைப் பணிசெய் விரதமே பூண்டு கழிக்குநா ளிழைத்திடாதந்தோ, விழலனே னிதமும் வேண்டுவ புசித்தே வெம்புலால் போர்த்த பாழுடலை, யழலிடையிடவோ வளர்த்திட்டேன் கரு வூரானிலைப் பசுபதீச்சுரனே. (கச)

கரவிலாநெஞ்சத் தொடுமுனைப்போற்றக் கற்றிலே னலது கற்றவர்பால், விரவிலேன் விரவியவர்விழை வோர்ந்து விருப்பொடு நல்கிலேனல்கிப், பரவிலேன் பரவிப் பணிகிலேனதனாற் படிறனே னின்னருள் பரு கா, தரவின்வாய்த் தேரையாவனோ கருவூரானிலைப் பசுபதீச்சுரனே. (கரு)

* நினையலாதணுவு மசைதராதென்ன நிகழ்த்து நின் மறைமொழி மெய்யேல், வினையென வொன்றிங்

* இது சாமவேதத்திற் றலவகாரசாகை யென்னுங் கேன த்திலே, பெருமான்றுரும்பை நட்டுக்காட்டிய சரிதத்தைக் குறித்தது. "அவனன்றி, யோரணுவு மசையாதெனும் பெரிய வாப்தமொழி" என்றார் சித்தாந்த பரபினரும்.

செய்திய விதமுமேவு மவ்வினை வழியேசென், றினை
வுறு விதமும் யாண்டிருந்தெம்மை யெய்தின வியம்பு
தியெளிபேற், கனையினு மினியவண்ணலே கருவூரா
னிலைப் பசுபதீச்சுரனே. (கசு)

* நவின்மறை மூன்றுணடுமறைதன்னி னண்ணு
மேழ் காண்டத்தினடுவி, லவிர்தரு காண்டத்தணைந்த
சங்கிதை யேழனினடுச் சங்கிதைதன்னிற், சவியுறு
மூதலீரெழுத்து நல்ல மருந்தனி மனுப்பொருளெ
னுநின்னை, யவலேன னறிதற்கெளியதோ கருவூரா
னிலைப் பசுபதீச்சுரனே. (கஎ)

* இருக்கு, யசுர், சாமம் என்னும் வேதமூன்றனுள் நடு மறையாகிய யசுர் வேதத்தில் (நூற்றொருசாகைகளில் நடுவணுயுள்ள) ஐம்பத்தோராஞ் சாகையின் நடுவேயுள்ள போதாயன சாகையில் எழு காண்டங்களுள் நடுக்காண்டமான நான்காங்கண்டத்தினடுவே யமைந்தது சகல வேத சீவமணியான சிவ என்னும் பஞ்சாக்கரமேயாம் இதனையே மாண்டூக்கியம், அதர்வசிரம், தைத்திரீயகம், முக்திகம் முதலிய வேத சாகைகளும் நன்கு சிறப்பித்தன. இவ்வுண்மையினையே "ருத்ரோஷு புண்ய மிவபஞ்சக மக்ஷராணாம்" என்று நெருப்புச் செறிந்த விருப்பு முக்காலியின் கணேறித் தாபித்தருளினார் அரதத்தாசாரிய சுவாமிகளும். இங்ஙனந்திருநாகைக் காரோண புராணம், திருக்குடந்தைப் புராண மென்பவற்றுளோதினார் நங்கவிஞர் பெருமானும்.

வருத்துறு துயரமெனைத்தையுமாய்க்க வல்லனும் வருக்குமச்சுகமும், பொருத்திமிக் கருளினிருக்க வல்லவனும் பொருந்து நீயேயெனவேத, * முருத்திரனுயர் சங்கரனெனும் பெயரானுணர்த்தவு முனையடைக்கேதத்தற், கருத்தியோர் சிறிது மாக்கிலேன் கருவூரானிலைப் பசுபதீச்சுரனே. (௧௮)

நின்றிருவடிக்கே நிறைந்த பேரன்பு நின்பணியே புரிசெயலு, நின்றிருப்புகழேபலப்பலவாக நாமொடுத்தேத்துறநேர்பு, † நின்றிருவருளாற் கிடைத்திடலன்றி நெறியிலேன் றிறத்தனவாமோ, வென்றுயர் கிரங்கிப் படைப்பருள் கருவூரானிலைப் பசுபதீச்சுரனே.

‡ பண்டுநீ யெதிரே யிருப்பவும்பிரமன் பார்த்திலனரிசொல வுணர்ந்தான், றிண்டிறற் குலிசப்படைய

---

* உருத்திரன் துன்பக்கடலினின்றும் நீக்கிக் காப்பவன் "இன்னலங் கடலுட்பட்டோர் யாரையுமெங்கு நீரா-லுன்னரும் பரமமூர்த்தி யுருத்திரனெனும் பேர்பெற்றான்;' என்று கந்தபுராணம். சங்கரன்—சம், சுகத்தை. கரன் செய்பவன்

† "அவனருளாலே யவன்றாள் வணங்கி" எனத் திருவாசகத்திருவருட்பா வருளலானும், சிவதத்துவ விவேகத்து உரையானுந்தெளிக.

‡ பிரமன் விட்டுணு அறியாததைக் கூர்ம புராணம், சூத சங்கிதை முதலியவற்றினும், இந்திரன் தேவியாராலுணர்ந்தானென்பதைக் கேனோபநிடதத்துங் கண்டு கொள்க.

னுமொரு மாதேவியார் தெரித்திடத் தெரிந்தான், வண்டுழாய் மாயோன் பிரமனோடுன்றுண்மையறீர்ந் தொர்ந்தனனாகி, வண்டினையெளிமைய னறிவனோ கருவூ ரானிலைப் பசுபதீச்சுரனே. (உ௰)

எனையலாதுளவாறடிமை செய்குநர் நிற்கெண்ணில் பற்பலருளரெனினு, முனையலாதடி யேற்கிறங்கிவந் தருளி யுய்வுதந்திட வலருளரோ, *தனையலாற் பிரம மென்பதொன் றிலை யிச்சகமெலா மித்தையேயென்பா, ரனையபாவகர் தாமணுகருங் கருவூரானிலைப் பசுபதீ ச்சுரனே. (உக)

† எவ்வெவ ரெவ்வெவ்வுருவினி லெவ்வாறெவற்றி னை யெண்ணியேத்துவரோ, வவ்வவர்க் கவ்வவ்வுருவி னிலவ்வா றமர்ந்தவற்றினை யினிதருள்வான், பவ்வரு

* இவர் மாயாவாதிக ளெனப்படுவார். நெஞ்சு விடுதூ தென்னுஞ் செந்தமிழுபநிடதக்கண் "தாம்பிரமங் கண்டவர் போற்றம்மைக் கண்டாங்கதுவே. நாம் பிரமமென்பவர் பானண்ணாதே" என்றார் முள்ளிச்செடிக்கு முத்தியருளிய முதல்வனாரும்.

† இதனை எவ்வுருவில் ‡ யாரொருவருன் னுவாருள்ளத்து அவ்வுருவாய் நின்றங்கருள் கொடுப்பன்" என ஆதியுலாவும், "யாதொரு தெய்வங்கொண்டீரத் தெய்வமாகியாங்கே மாதொருபாகனார் தாம் வருவர்" எனச் சிவஞான சித்தியும் அறைகின்றது.

ஞ்சயின்ற பகவனென் றனையேப் பழமறை பகருமவ்வருமை, யவ்விய முடையாரறிவரோ கருவூரானிலைப் பசுபதீச்சுரனே. (௨௨)

விழைகுவார் விழையுமவை யெலாமீயும் விமலனீ யென்பது முன்னோர், *மழவழற்காற்றுத முதவாரி யினைவழங்கினை யென்பது மெய்யேல், வழுவினின்னருள் வேட்டமுமெனக்கிரங்கிவந்தவை தந்திடா யென்னே, யழல்வளர்த்த மரர்க்கவிதருங் கருவூரானிலைப் பசுபதீச்சுரனே, (௨௩)

† விடையதாய் மேவித்தாங்கியுந்தனது விழிபெயர்த்தருச்சனை புரிந்தும், புடையினிற்றேவியென வினிதிருந்தும் புரமெரிசெயக்கணையாயு, முடைதராப்பேரன்பு ஞற்றநிற்கம்மாலொருவற்கே யன்றியெம்போ

---

* மழவு என்னும் இளமைப் பெயர், ஈண்டாகு பெயரானே உபமன்னிய முனிவரைக் குறித்தது. அவர் பசிதணிப்பான் பாற்கடலீந்தருளியதை வடமொழிச் சிதம்பரமாகாத்மியத்தும், உபமன்யுபக்தவிலாசத்தும், கோயிற் புராணத்தும் பரக்கக் காண்க.

† விடையதாகித் தாங்கல் - திரிபுர சங்கார காலத்து. புடையினிற்றேவியா யிருந்தமையை-"அறியலாற்றேவியில்லையையனையாரணர்க்கே" என்னும் அருள்வாக்குத் தெரித்த "பிறைதங்கு சடையானை வலத்தேவைத்து" எனவும "குழணிறவண்ணனின் கூறுகொண்ட தழனிறவண்ணனன்றோர்

ல்வா, ரடைவினன் காற்றவமைவதோ கருவூரானிலைப்
பசுபதீச்சுரனே. (உச)

*தரைபுனல னல்கால்வானுயிர் தபனன்றண்மதி யன்றிவேறாக, வுரைசெயிஞ்ஞாலமிலை யவையாவுமுன் பெருவடிவமெய்தனற், புரைதவிர்நீயே பொருந்த திட்டாதாப்பொருளென மறைகளும்புகலு, மரிலுறு மூர்க்கரறிவரோ கருவூரானிலைப் பசுபதீச்சுரனே. உரு.

† மணியினைக் கழீஇப் பரல்கொளன் மானவன் பிறப்பறுக்க நின்றெருவிப், பிணிமலந்துறவாப் பிறப் பிறப்புடையபுன் பேய்த்தெய்வநெறி கொடுபிதற் றுங், துணிவுடைத் தூர்த்தப் பிணக்கரெவ்வாற்றாற் றுணித்திட வல்லர் மற்றதனை, யணிமதிற் சிகரம்பல செழுங் கருவூரானிலைப் பசுபதீச்சுரனே. (உசு)

---

நகாம் விழுநனிமலை சிலைவளைசெய்தங்கழனிறவம்பதுவான வனே, எனவும் நாலாயிரப் பிரபந்தமுங் கூறியது. காள மேகப்புலவரும் "கடம்பவனச் சொக்கருக்கு" எனவொரு உஞ் செய்யுளானுந் தெரித்தனர்.

* அதிட்டாதாவெனப் புகன்றமை "ப்ருதிவ்யோபவ" எனவொரு உம்வேத வசனத்தானும். காரைக்காலம்மையார் திருவந்தாதியில் "அவனே யிருசுடர் பாராகாசமாவான்" எனவொரு உந்திருவருட்பா வானுமுணரற் பாலதாம்.

† இதனுண்மை "யதாகாசம்" என்றற்றொடக்கத் தசுவே தாசுவதரச்சுருதி வசனங்களானுணர்க.

* பத்தெனப் புகனல்லிலக்கணத்தோடும். பணி
செய் மெய்த்தொண்டர்க்கேயல்லால், பொய்த்த புன்
னெறிகொண்டுன் பணிகவர்வான் போந்தவோர் விப
ண்டகனோடற், கித்தலத்திடை முன்னருள்புரிந்தனை
யென்றியம்புதல் கேட்டுனையடைந்தே, னத்தவென்ற
மரரேத்துறுங் கருவூரானிலைப் பசுபதீச்சுரனே. (௨௭)

† நின்னருளொன்றே பயன் முதற்றேவர் நிலையி
னிற் பொருந்தி முத்தொழிலு, நன்னயமாக நடத்து
வதன்றிச் சுதந்தரமவர்க்கிலையென்றே, பொன்னவன்
றன்னை மக்களைப்புரவான் பூவயன்றன் சிரப்படையா,
னன்னதாவறிந்தே னரும்புகழ்க் கருவூரானிலைப் பசு
பதீச்சுரனே. (௨௮)

நிதியினை விழைந்து நிலத்தினை விழைந்து நெஞ்சமா
வுறும்பலப் பலவாம், ‡ பதியினை விழைந்தும் பலவை

---

* பத்திலக்கணமிவையென்பது பிரமோத்தர காண்டம், உபதேசகாண்டங்களிற் சொல்லப்பட்டது. பணி செய்வார்க்கன்றிப் பணிகவர்வார்க்கும் அருளுங் கருணையுடையானென்னும் நயந்தோன்றுமாறுணர்க. பணி—தொண்டு அடுத்த பணி என்பது ஆபரணம்.

† (16) செய்யுளின் கூற்றையே இச்செயுளும வலியுறுத்தாநிற்கும்.

‡ பலப்பலவாம் பதி. என்றது போகபூமிகளாம் ஆதியரிவஞ்சம், நல்லரிவஞ்சம், ஏமதவஞ்சம் ஏமவஞ்சம் ‘உத்தர

மார்கலவிப் பண்பினை விழைந்துமிக் குழல்வேன், கதியினை விழைந்தன் கழற்பணியாற்றிக் கடுந்துயர் கடக்க மாட்டுவேனோ? வதிநெடிலாம் பேரவை தொழுங் கருவூரானிலைப் பசுபதீச்சுரனே. (உ௬)

குற்றமுங் குணமாக் கொண்டருள் புரியுங் குலவுநின் குரைகழற்கல்லான், மற்றொரு தெய்வந் தொழக்கரங்கூப்பா மனநினைந்திட நனிதுணியா, துற்ற கண் காணக் கூசுநாத்துதிப்பவொத்தெழாவுண்மையீ துண்மை * யற்றவர்க்கற்ற வண்ணலே கருவூரானிலைப் பசுபதீச்சுரனே. (௩௰)

கருவூர் பசுபதீசுரர் பாமாலை

முற்றிற்று.

குருவம், தேவகுருவும். சுவர்க்கம, பவணலோகம், சேடிநகர், பரமபதம், விண்டுபதமென்பன. அதி நெடிலாம் பேர் அவை தொழும் என்றது ஆ—தீ. என்பவைகள் பூசித்த சரிதத்தைக் குறித்தது. ஆ காமதேனுவாகிய பசு. தீ அக்கினிதேவன் சாதிபற்றி அஃறிணையாகக் கூறினும்.

* "அற்றவர்க்கற்றவன்(, இது திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிய முதற் குறிப்பினையுடைய திருவாலவாய்த் திருப்பதிகத்தையாம். இதனைத்தாயுமானாரும் எடுத்து விதந்துள்ளார். அற்றவர்க்கு அற்றவன் - இல்லென்பார்க்கில்லாதவன் எனவும், மலம் அற்றவர்க்குத் தானும் வேறல்லாதவன் எனவும் பொருளுரைத்துக்கொள்க.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருவாணிலைநாதர்

# போற்றிப்பதிகம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தேவர்கடேவே போற்றி, சிவபரஞ்சுடரே போற்றி,
மூவருமேத்தநின்ற முக்கணெம்பெருமான் போற்றி
மேவரும்பொருளே போற்றி விலங்கல் வில்லுடையாய்
போற்றி, * யாவினஞ்சுகந்தாய்போற்றி யாணிலைப்பர
மாபோற்றி. (க)

† வர்சநற்றுளவன் வேண்ட மலரணைச் செல்வன்
றன்னை, மாசகன் மைந்தனாக வழங்கினைய யன்பின்

---

* ஆவினஞ்சு-பஞ்சகௌவியம்.

† ஒருகற்பத்தில் விட்டுணு சிவபெருமானை வேண்டிப்பி ரமனைப் பெற்றானென்றும், இன்னொரு கற்பத்திற் பிரமன் அவ்வாறே சிவபெருமானை வேண்டித் திருமாலைக் குழவியா

வேண்டக், கேசவன்றன்னை யீந்தாய் கிளர்தரு மைந்தனாக, வாசகல் கருவூர் மேயவாணிலைப்பரமா போற்றி, (௨)

வழிவழிச்சோழர் சேரர் வந்திக்கு மணியே போற்றி, கழியுணர் வுடையாருண்ணுங் கற்பகக்கனியே போற்றி, யிழிதகை யெளியனேற்கு மின்னருள் சுரப்பாய் போற்றி, யழிவிலாப் பொருளே போற்றி யாணிலைப்பரமா போற்றி. (௩)

வித்துமாய் முளையுமாகி விரையுமாய் மலருமாகிச், சத்துமாய்ச் சித்துமாகித் தாவிலாவின்புமாகித், தத்துவமெனைத்து மாயத்தத்துவாதீதமாகி, * யத்துவா மேனியாய வாணிலைப்பரமா போற்றி. (௪)

---

யப் பெற்றானென்றும் வாயுசங்கிதை கூறுகின்றது. "சீதரனிரந்து வெண்டச் செழுமலர்த் தவிசுளானை-யாதர மைந்தனாக வருளினையனையான் வேண்ட-காதலித்துளாயினானைத் தந்தனை மைந்தனாக' என்று உறையூர்ப் புராணமு முரைத்து வலியுறுத்திற்று.

* அத்துவா-சுத்தாத்துவா, மிசிராத்துவா அசுத்தாத்துவா என்னும் ஆறத்துவாக்களே. அவை மந்திரம், பதம், வன்னம், புவனம், தத்துவம், கலையென அறுவகைப்படும். அவையிற்றை மேனியாக்கொண்ட முறைமையைச் சுப்பிரமணிய பராக்கிரமத்து விரிவாய்க் காண்க.

*பதிபசுபாச மென்னப் பகர்பொருண் மூன்றின் றன்மை, விதியுளி யறவோர்க்கங்கை விரல்களாற்றெரித்தாய் போற்றி, மதியணிவேணி முக்கண் வள்ளலே போற்றி நாளு' மதிதிகளுளத்திற்றூங்கு மாணிலைப்பரமா போற்றி. (ரு)

அடிமுடியயன்மாறேட வழற்பிழம்பானாய் போற்றி, கடிகமழ் கொன்றையந்தார்க் கண்ணுதற்பிரானே போற்றி, பொடியணிமேனி வாய்ந்த புண்ணியப் பொருளே போற்றி, யடியனேற்கின்ப நல்குமாணிலைப் பரமா போற்றி. (சு)

ஈசனே போற்றி யெங்களிறைவனே போற்றி யம்மை, நேசனே போற்றி மன்றினிருத்தனே போற்றி பாவ, நாசனே போற்றி யார்க்கு நாதனே போற்றி வேத, வாசனே போற்றி தெய்வ வாணிலைப் பரமா போற்றி. (எ)

மண்புனலனல்கால்வான மதிகதிரான்மா வென்னும், பண்புறுமூர்த்த மெட்டாய்ப்பரந்தெங்கு நின்றாய் பேர்ற்றி, கண்புனல்வடித்து நெஞ்சங் கரைந்து

---

* பதி, பசு பாசமென்னு முப்பொருளியல் பெல்லாந்தக்ஷிணாமூர்த்தியா யெழுந்தருளியிருந்து சனகாதி நால்வர்க்கும் சின்முத்திரையானே துறுத்தத் தெளித்தருளிய சரித்திரத்தை யுணர்த்தியது.

றுகன்பர்க்கென்று, மன்னியவின்பப் பேராமானிலைப் பரமா போற்றி. (௮)

விரிதரு புவனமாக்க விரைமலர்ச் செல்வனையும் பிரிதராததனைக்காக்கப் பின்னைதன் கேள்வனையு, மிரி தலுற்றொனைத்துமாய்க் கனியனுருத்தி ரேசனையு, மரி யமற்றிவற்றின் மேலா மானிலைப்பரமா போற்றி. (௯)

*மண்ணிலைந்தாகி நீரினான்கதாய் வன்னிதன்னி, லெண்ணுறு மூன்றதாகி மாருதிதனி லிரண்டாய், விண்ணிலொன்றாகி மற்றை விளங்குமெய் பொருளு மாகு, மண்ணலே கருவூர்மேய வானிலைப் பரமா போற்றி. (௰)

## திருவானிலைநாதர் போற்றிப்பதிகம்

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

* மண்ணில் ஐந்தாவன—சத்தம், பரிசம், உருவம், இரதம், கந்தம். நீரில் நான்கு—சத்தம் பரிசம், உருவம், இரதம். வன்னியின் மூன்று—சத்தம், பரிசம், உருவம் என்பன. வாயுவில் இரண்டு—சத்தம்—பரிசம். விண்ணில் ஒன்றாவது—சத்தம். "வெளியிடையொன்றாய் விளைந்தாய் போற்றி" என்றற்றொடக்கத்தவாய்த் திருவாசகச் சுருதியுஞ் செப்பிப் போதல் காண்க.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீஜ்ஞானசம்பந்த குருப்யோநம.

# சௌந்தர நாயகி தசகம்.

எண்சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

முனமொரு நன்மக வழுதற்கிரங்கி யருட்பெருமான், முழங்கும் பாற்கடலதனை முகந்து நனியளித்தான், பின்னுமொரு நன்மக வழுதற்கிரங்கி யருட்டாய் நீ, பிறங்கு திருஞானப்பால் பெய்தொர்வள மீந்தா, யெனிலினைய மகவுளெது வீந்தவர்கட்கெண்ணி, லேற்று மிகுபெரும் புகழொடெவ்வுலகு முய்யத், தனிசெழுஞ்சைவத் துறையுந்தழைவித்த துரையாய், தலத்துளுயர் கருவூர்வாழ் சௌந்தரநாயகியே. (க)

*போற்றுறு நல்லுயர் போகசத்தியென நாளும், பொருந்துமதனன் மனையாய்ப் பொக்கமகனின்பாற்,

---

* இவ்வரும் பொருளைத் திருவாசகம், திருக்கோவையார், சிவஞானசித்தி யென்பவற்றினும், "கனகமார் கவின்

ரேற்றுவித்தலை லனையாய்த் துன்னிடவோர் கால் முன், றுளங்கிடுமாறு தித்தலினூற்று களிரமக்கைய ளாய், வேற்றொரு கரற்பின் வரலான்மேவ வதின்மு ளைக்கும் விதமதனிற்றங்கை மகளென விமலற்காகும், சாற்றரு நின்றிரு விளையாட்டியா முணருந்தரமோ, தலத்துளயர் கருவூர்வாழ் சௌந்தரநாயகியே. (உ)

எண்ணில் பலவுயிரெவையு மீன்றவணீயே யென் றெழியின் மறையுமாகம முமியம் புறுநவியல்பாற், கண்ணுறு மனையாவுமுன கான்முளையிற் காணக், கவணியர் கோன்றனக்கு மட்டுங்களிப் பினெடுத்த ணைத்தே, புண்ணியவெண்டிரு ஞானப்பாலதனைப்பு கட்டிற், பொதுநோக்க மென்பதுனக்கியாண்டுள தம் மகவுந், தண்ணளியிற்றமிழ முதந்தந்தெமைத் தேற் றியதே, தலத்துளயர் கருவூர்வாழ் சௌந்தரநாய கியே. (௩)

முடியின்மிசையென் கொலொருமாற் றவளைத்தா ங்கி, முகப்பினிருந்திடுமெயன முனிந்து பிணங்கு ம்போ, தடியின்மிசை வீழ்ந்து பணிந்தாயிழையே வது நீரணங்கலவென்றவன் சொலன் மெய்யன்றென

—மனைசெய் மன்றி—னனகநாடகஞ் செய்வார்கடெமன்னை வி தாய் தங்கை மகள்" எனவரு உஞ்சிதம் பரசெய்யுட்கோ வையினு முணக்கப்பட்டது. விரிவஞ்சி விடுத்தாம்.

நன்குணர்ந்து, நெடிதுமுள மகிழுதனி நினைவுழியவ்வி
றையு, நேரிழையும் வணங்குமதே போதுமெனைப்போ
லுந், தடியில்கதிர்மேய்ந்தெருமை தருநிழலிலுறங்
குந், தலத்துளயர் கருவூர் வாழ் சௌந்தரநாயகியே.

கண்பரித்துப்பூசி நறுங்காதலியை யீந்து, கான்மு
ளையைக்கறியெனவே நனிசமைவித்தூட்டிப் பண்புறு
சுற்றத்தினொடு பாலுண்மக வெறிந்து, பயந்த பிதாத்
தாடடிந்து பகரொரு பூமோந்த, நண்பில்பிழையோ
ர்ந்தொரு பெண்சிகரமரிந்து நவிலுமினுஞ் செயற்க
ரிய செய்தவர்க்கே யருள்வான், றண்பிறைசூடுன்
கொழு நனென்றுனையே சார்ந்தேன், றலத்துளயர்
கருவூர்வாழ் சௌந்தரநாயகியே. (௫)

*பரையாதியிச்சை பராஞானமுட னொளிரும்,
பாங்குறுநற் கிரியையெனும் பஞ்சவிதமான, வுரை
செயுயர் சத்தியென வொருமுதல்வற்காகி, யோங்கு
திருவைந்தொழிலு முறநடத்திப் பின்னும், விரைமல

* பராசக்தி, ஆதிசக்தி, இச்சாசக்தி, ஞானசக்தி, கிரியாசக்தியென்னும் ஐவகைச் சத்திகளாய் நின்று இறைவி படைத்தன் முதலியவைவகைத்தொழிலையு மிறைவனுடன் றாதான்மியமாய் விளங்கிச்செய்யுமியலுணர்த்தியவாறு. தாதான்மியமாய்ப் பிரிவற நிற்குமுண்மைக்குக் கண்ணொளி கதிரொளிகளும், இசையும் பண்ணும், சுவையுந்தேனு முவமையாமாறுங் கண்டுகொள்க.

ர்க் கண்ணொளியருக்கன் வியனிசை பண்சுவைதேன்,
விரிகலைத்தண்மதியென வவ்விறைவனுடன் பிரியாச்,
சருவபரிபூரணி நின்றாருணர் தற்கெளிதோ, தலத்
துளயர் கருவூர்வாழ் சௌந்தரநாயகியே. (௬)

* இருவகைய வாழ்வுமரு ளிருகணிலுமென்று
ளெண்ணுமலொன்றழிக்கு மொணெருளிர் நங்கை
யின், மருவலரொருதழிக்கு மற்றிதுவன்றியு நம். வடி-
விலொன்று வெப்புசெயு மாற்றவளோடொன்று, மரு
வவுரைந்திடுமிதன்றன் வலிமையாவின்னே, மாற்று
வென்றிரு சுடரை வென்சிறை செய்திடவோ, தரும
முதலவன் விழியைத் தடங்கை கொடுபுதைத்தாய்
தலத்துளயர் கருவூர்வாள் சௌந்தர நாயகியே (௭)

பூரணி புராதனி புராந்தகி புராணி, பொருந்து
† சுத்த தயிரிணிபாவனை தவநீ நவனீ, ஆரணிகாலோ
ணினி சாமுண்டி துர்க்காவேணி, யசனிபிராத்திரி

---

* இருவகை வாழ்வு: கல்வி செல்வம். இவற்றைக்கொ டுக்கும் நாமகள் பூமகள் இருவரும் அம்மையாரது இருகண்களாகலின் அவ்விருகண்கட்கும் வீடாயவெண்டாமரை செந்தாமரைகளைச் சந்திரன் அழிப்பானென்பது முதலடியின் பொருள். நங்கையின் மருவு அலர்: நமது (தேவியின்) திருக்கரத்திற் பொருந்திய குவளைமலரை. அதைச் சூரியன் அழிக்கின்றானென்றபடி,

† இச்செய்யுளிற் கூறப்பட்ட அம்மையார் தந்திருப்பெயர்களெல்லாம் ஆறுதாரங்களுட் சுவாதிட்டானதி ஆக்கினை

சாணையற் பாசிகமலை, சீரணிபாநந்தி சிவசுந்தரிபெண்
றுணையே, தினமு நனிபுகழ்நந்தத்துந் திறமருளிச்செ
ய்தே தாரணியினெனையாளுங் கடமை நினதன்றோ,
தலத்துளாயர் கருவூர்வாழ் சௌந்தரநாயகியே (அ)

அங்கையினினன்கமரும பைங்கிளியின் மொழி
யோ, வாறுமுகம்பெற்ற கொற்றத்தருங் குழவி
மொழியோ, * செங்கையுவந்தபடு சிவ சங்கரனு
ரூட, நீர்த்திடவே யாரதியோடு செபபுறுமின
மொழியோ, நங்கையுன திருசெவிக்கு நாயினேன்
புன்சொ, னவையகனீ மற்றிரக்க நண்ணுமதெவ்வா
றோ, தங்கை மனையனை புதல்வியென விறைவர்காருந,
தலத்துளுயர் கருவூர வாழ் சௌந்தரநாயகியே. (கூ)

அவனிமிசையடிநாயே னந்தோவெந்நாளு, மடைப
லவாமலலெல்லா மரவரசனுலு, நவிலவமையாதே மற்
றவை யாவுமறிந்து, நனிபறியாய்போன்றேநீ யிருப
பது மற்றெளியேன, பவவினையே நினதடியார் பழித்
துனையே சுவரா, பரிபாககாலமின்றோ வஃதிரக்க
மிலையோ தவராஜயோகர் மகிழ் சாமபவியேசாற்றாய்,
தலத்துளுயர் கருவூர்வாழ் சௌந்தரநாயகியே. (ய)

ஸ்ரீ சௌந்தரநாயகி தசகம் முற்றிற்று.

---

தமாகவுள்ள ஆதாரபதுமங்களினதி தேவதைகளாய் நிற்குஞ்
சத்திகளை குறிக்க நிற்கும்.

* செங்கை, திருவாதிரை நாள்.

## ஷை அம்மையார் நடுவெழுத்தலங்காரம்.

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

* சிரம்பரிதூது நூறு கைதொன்மைதிறல் கண, மென்னுமோ ரெட்டுத், தரம்பெறு மொழியினடு வமையெழுத்தாற் சமைந்திடு திருப்பெயர் தரித்தே நிரந்தரமா யெவ்விடத்தினுமிருக்கு நிலையினையெவ்வி னுந் தனிநினைப்பா, ரரந்தை யெம்பவ நோயகற்றிடக் கருவூரமர்ந்தொளிரன்னை தாழ்பணிவாம்.

### அலங்காரவதியம்மையார்.

மணமலி கமலப்பொகுட்டினி துறையும்வரன்மு தன் மூவருமியற்றுந், தணிவறுநதொழிலோர் மூன் றிற்குநதானே. தலைவியென்றியாவருந் தேறமணிவ டஞ்சிருக்குமனவரிசமூவேன் மலர்க்கரத்தெழில் பெறத்தெரித்தே, யணிமதிற் கருவூர மரலங்காரவம் மைதனடி பணிநதுய்வாம்.

முற்றிற்று.

ஸ்ரீ மெய்கண்டநாதன் றிருவடி வாழ்க.

திருச்சிற்றம்பலம்.

---

*சிரம். பரி, தூது, நூறு கை, தொன்மை, திறல், கணம், என்பவற்றின் பரியாயப்பெயர்களான சேசம், இவுளி, சந்து, சதம், கரம், அநாதி, செயம் முகில் என்னுமிவைகளில் [illegible] வெழுத்துக்களைச் சேர்க்கச் சவுந்தரநாயகி யெனப்போதருதல் காண்க.

சிவமயம்.

## இந்நூலாசிரியரியற்றிய நூல்கள்

### அச்சிற்பதிப்பித்தவை.

| | | | |
|---|---|---|---|
| திருவானைக்கா பதிற்றுப்பத்தந்தாதி | 0 | 2 | 0 |
| திருவையாற்று நவமணிமாலை<br>சப்தஸ்தலத்தோத்திர வெண்பா. | 0 | 1 | 0 |
| திருவுறந்தை இரங்கன் மாலை.<br>ஷை இரட்டைமணிமாலை.<br>ஷை காந்திமதியம்மை கட்டளைக் கலித்துறை. | 0 | 1 | 10 |
| திருக்கற்குடித்தோத்திரப்பா. | 0 | 1 | 9 |
| சோமசுந்தரஸ்தவம். | 0 | 0 | 6 |
| கருவூர் பசுபதீசுரர் பாமாலை.<br>திருவானிலைநாதர் போற்றிப்பதிகம்.<br>சௌந்திரநாயகித் தசகம். | 0 | 1 | 6 |

### அச்சிற்பதிப்பிக்காதவை.

உறையூர் மான்மியம் (வசனம்)

திருவானைக்கா புராணம் ஷை

R. தேகஷ்ணமூர்த்தி பிள்ளை,

சைவசித்தாந்த சபை.

உறையூர்.

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஸ்ரீவில்லிபுத்தூர்

## வில்லியென்னும் ஸ்ரீவைஷ்ணவர்

அருளிச்செய்த

# ஸ்ரீ ஆண்டாள் சந்திரகலாமாலை.

இது

கோயமுத்தூரைச் சார்ந்த பூளைமேடு

**ஸ்ரீமான் மு-வேணுகோபாலசாமி நாயுடு**

அவர்களாற் பரிசோதிக்கப்பட்டு

சென்னமநாயக்கன் பாளையம்

ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீபாதரேணு

**க-இராமசாமி நாயுடு அவர்களால்**

சென்னை,

செங்கல்வராய நாயகர் ஆர்பனேஜ் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

ஸ்ரீ

# விளம்பரம்.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| திருவேங்கடவுலா | 0 | 3 | 0 |
| ஸ்ரீ ஆண்டாள் சந்திரகலாமாலை | 0 | 1 | 0 |
| ஸ்ரீ ஆண்டாள் பிள்ளைத்தமிழ் | 0 | 3 | 0 |
| அழகர் கிள்ளைவிடுதூது | 0 | 1 | 6 |
| இராமாயணத் திருப்புகழ் | 0 | 6 | 0 |
| அரங்கநாதகவிராயர் பாரதம், செய்யுள். (வில்லிபுத்தூராழ்வார் பாரதம் 9-பருவம்போக, பிற்பட்ட 9-பருவம்.) | 1 | 8 | 0 |
| உசிதசூடாமணி நிகண்டு மூலமுமுரையும் | 0 | 6 | 0 |

இவைகள் வேண்டுவோர் சென்னை சூளை சாமிபிள்ளை தெரு 19-வது நெ. வீட்டில் ஸ்ரீமான் சே-முத்துகிருஷ்ண நாயுடு அவர்களிடத்திலும் முசிரிதாலூகா துறையூர் உபாத்தியாயர் ஸ்ரீமான் மு-கோவிந்தப்பிள்ளை யவர்களிடத்திலும் கோயமுத்தூர் புஸ்தகஷாப் ம-ள-ள-ஸ்ரீ பெ-கோவிந்த கௌடரிடத்திலும் என்னிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

தபால்சார்ஜு பிரத்தியேகம்.

இங்ஙனம்:

தாஸாநுதாஸன்

**மு: வேணுகோபாலசாமி நாயுடு,**

பூளைமேடு,

கோயமுத்தூர்.

ஸ்ரீ

# முகவுரை.

ஸ்ரீவில்லிபுத்தூரில் வில்லியென்னும் திருநாமமுடைய பூர்வசிகை ஸ்ரீவைஷ்ணவரொருவ ரிருந்தனர். இவர் ஸ்ரீஆண்டாள் சந்நிதியில் தம்மாலியன்ற கைங்கரியங்களைச் செய்துகொண்டு வருநாளில், ஊழ்வினைப்பயனால் இந்நூல் உ-வது செய்யுளில் "புழுநெளிந்துண்டுவளர்" என்று தொடங்கி இவர்தாமே யருளிச்செய்தபடியே, நோயுற்று வருந்தி, ஊருக்கு வெளியில் ஓர் குடிசையமைத்து அதில் வசித்துத், தினந்தோறும் இவர் அன்னை கொண்டுவந்தளிக்கும் உணவையுண்டு, ஸ்ரீ ஆண்டாளைச் சிந்தித்துக்கொண்டிருந்தனர். ஓர் நாள் அபரான்னகாலத்தில் வந்த மழை நீடித்துப் பெய்ததினால், இவர் தாய், வழக்கப்படி உணவு கொண்டு வரத் தாழ்த்தனர். இவர் பசியால் வருந்தி, சந்நிதியில் ஸ்ரீ ஆண்டாள் அரவணைத் தளிகை யமுது செய்தருளுஞ் சமயத்தில் பிரார்த்தித்தனராகவே, ஸ்ரீ ஆண்டாள் அரவணைத்தளிகையும் தீர்த்தமுங் கொண்டு இவரது அன்னைவடிவுடன் எழுந்தருளி, அவைகளை யளிக்கப்பெற்று அன்புடனுண்டதும் தமது சரீரத்திலிருந்த வியாதி நீங்கிச் சாந்தியடைந்து பெருவியப்பினராய்த் தாயாரை நோக்கி, இந்தப்பிரசாதமுந் தீர்த்தமும் எங்ஙனங்கிடைத்ததென்று கேட்க, அவர், ஸ்ரீ ஆண்டாள் கொடுத்தருளினாரென்று சொல்லிவிட்டு மீண்டெழுந்தருளினர். உடனே, வழக்கப்படி உணவு கொண்டுவருந் தாயும், சாதமுந் தண்ணீருங் கொண்டுவந்தது கண்டனர். கண்டு, முன்பு அன்னைவடிவுடன் வந்தருளினவர், ஸ்ரீ ஆண்டாளெனத் தெளிந்து, ஆனந்த பரவசராய் அன்பு மேலிட்டு, அவ்வன்புக்குப் போக்குவீடாகத் தோத்திரஞ் செய்யத் தோன்றாது திகைக்கையில், "பூ" என்றெடுத்துப் பாடுகவென ஆகாசவாணியொன்றெழுந்ததைக் கேட்டு, "பூமாதெனத்தேவர் போற்றிட"

என்று தொடங்கிப் பதினாறு ஆசிரிய விருத்தங்களைப்பாடி முன்னிரண்டு பின்னிரண்டு செய்யுட்களையும் காப்புக்கவியையுஞ் சேர்த்து, இந்நூலைப் பூர்த்தி செய்து, ஸ்ரீ ஆண்டாள் சந்திரகலாமாலையென நூற்பெயரமைத்தனர். சந்திரனது கலைகள் பதினாறாதலால் 'சந்திரகலா' என்பது பதினாறென்னுந் தொகையைக் குறித்து நின்றது.

## தனியன்.

திருமருவும்வில்லிபுத்தூர்தன்னில்வாழுந்
செழுமறையோர்யாவர்க்குஞ்சிறந்தஞான
மருவுமொருமறையவனாய்மகிழ்ந்துமேவு
மங்களஞ்சேர்விண்டுசித்தன்மகளாயிங்கு
வருமாதின்சந்த்ரகலாமாலைசெய்தான்
வைணவரிற்பூர்வசிகைவகையில்வந்தோன்
றருமருவுவேயர்குலத்தவதரித்த
சதுமறையோன்வில்லிபொனச்சாற்றுவோனே.

ஸ்ரீ



ஸ்ரீமதேராமாநுஜாயநம:

# ஸ்ரீ ஆண்டாள் சந்திரகலாமாலை.

## காப்புகள்.

*கட்டளைக்கலித்துறை.*

செந்தாமரைவல்லிவில்லிபுத்தூர்வல்லிசீர்த்துளவ
நந்தார்குழல்வல்லிநாரணவல்லிநளினவல்லி
இந்தார்குழல்வல்லியிந்திரலோகத்திலகுவல்லி
கொந்தார்குழல்வல்லியேகோதைசூடிக்கொடுத்தவளே.

*பன்னிருசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.*

எங்கணெடுமாலாதி யெம்பரமனோரா யிரஞ்சுருதிமேலா
யினோ - னென்றுகிழிநாலான்முன் வென்றபெரியாழ்
வார்த மின்பமுறுதாள்சூடுவாம்,
வெங்கரவுசூன்மேவு சங்கலறவால்வீச வெண்புனலின்மீ
தோடுசேல் - விண்கிழியவேதாவி யும்பர்பதிமீதேறி
விஞ்சையர்கணீராடுநீண்,

மங்குலுறுமாகாச கங்கைநதியூடாடி வந்துகழிநீரோடை
சூழ் - வண்கமுகுமாவாழை கண்டலொடுதாள்சாடி
வண்டலிடுகான்மேவியே,
செங்கயலிருல்வாளை கெண்டைகள்வராலார றிண்சுறவு
பாய்வாவிசேர் - தென்புதுவைமான்மீது சந்திரகலா
மாலை செந்தமிழினுலோதவே.

## அவையடக்கம்.

ஆசுமதுரஞ்சித்ர வித்தாரமெனவெடுத் தறையுமியலிசை
நாடகத் - தகவல்வெண்பாவஞ்சி கலியெனும்பாநான்
க தாகியவகைத்தொகையினு,
லோசைபெறுசொற்பொரு ளெழுத்தலங்காரம்யாப் புறு
பஞ்சவதிகாரமென் - றோதியவிலக்கணத் தேதமிலி
லக்கியத் துட்ப்ரபந்தங்கள்யாவும்,
பேசுமுறையேதுமறி யாதவென்புன்றொடைப் பிழைதீரு
மென்பதெண்ணிற் - பெய்திடுமணற்சோறு தன்னிற்
கலாராய்ந்த பெற்றியெனலொக்குமாடத்,
தேசுதிகழ்புதுவையிற் கோதையருளென்னுமச் செய்கை
யையுணர்ந்தெனதுசொற் - செந்தொடையனன்றென
க் கொண்மினியலமுதூறு செந்தமிழ்க்கவிவாணரே,

## நூல்.

பூமாதெனத்தேவர் போற்றிடத்தவமுனிவர் புண்ணியப்
பலமிதென்னப் - புவியோரனைத்துலகு மீன்றதாயெ
னவறிஞர் போதமிகுசெல்வமெனவே,
நாமாதெனப்புலவர் கொண்டாடவாழ்வார்க ணங்குலமட
ந்தையென்ன - நந்திருவரங்கேசர் தந்திருத்தேவியெ
ன நானிலத்தவதரித்தாய்,
பாமாறன்முத்தமிழ்த் திருவாய்மொழிப்பனுவல் பாராட்
டியாராட்டிடப் - பள்ளிதுயில்கொள்ளுமென் கிள்ளை
க்குவள்ளப் பசுந்தேறலூட்டிமெள்ளத்,
தேமாநறுங்கனி யருத்திக்கருத்துடன் செங்கையிலிருத்தி
வேதத் - திருப்பாவைமங்கையர் விருப்பாற்பயிற்றிடுந்
திருமல்லிவளநாடியே. (க)

புழுகெளிந்துண்டுவளர் தசைநரம்பென்புதோற் புண்ணெ
னக்கும்பிநாற்றப் - புரைப்பாண்குழிச்சல மலச்சேற்
றழுந்திப் புதைந்துநைந்தேனையெவருந்,
தொழுமினியபங்கயத் தாளாலெடுத்துநற் சோதியமுதா
லயமலர்த் - துணைவிழியிலானந்த வருண்மாரிபெய்து
மெய் தோயக்குளிப்பாட்டினுய்,
தழுவுகுங்குமமூலைக் கெழுதுவார்சிந்துரஞ் சாத்துவார்
பூச்சொருகுவார் - தண்டமிழ்ப்பாடுவார் தெண்டீ
னிட்டாடுவார் சந்தியிற்பந்தடிப்பார்,
செழுநிலவுகந்திளைஞர் மயலுறமுயங்குவார் தெருவினிற்
குரவைபிணைவார் - தேர்த்திருவிழாத்தினம் போற்றி
விளையாட்டமுறுத் திருமல்லிவளநாடியே. (உ)

உனைமனத்துறநினைத் திடிலென்னையறியா துரோமம்பொ
டிக்குமின்புற் - றுள்ளங்களிக்கும்விழி வெள்ளந்து
ளிக்குமென் புருகுநாவமுதமூறும்,
வினைபற்றறுத்துடல் புளகிக்குமாநந்த மெய்ஞ்ஞானம்
விளைவித்திடும் - மெய்த்தலைவணக்குமுயர் கைத்தலை
குவிக்குமிக விம்மிவாய்வெருவியேத்துஞ்,
சுனைகொக்குமுக்குளத் தெதிர்கொக்கரித்துவரு சுறவைக்
கடிந்துவனசத் - தோட்டைத்திறந்துநற் பேட்டைத்
துறந்துநீர்த் துறையிற்பறந்துகூனச்
சினைவரிச்சுரிசங்க முழுவயற்பொம்பசுஞ் சேற்றில்வளர்
நாற்றைநட்ட - செங்நெற்கலந்தசைய கன்னற்கிடந்
திலகு திருமல்லிவளநாடியே. (௩)

கருமொய்க்குமென்மயற் பிறவிப்பெருங்கடல் கடத்திடுந்
தோணியாகிக் - கலையின்பவெள்ளப் பெருங்கேணி
யாகிக் கதிக்கேறுமேணியாகிப்,
பெருமக்களாகுமிம் மானிடர்தமக்குநற் பெருவாழ்வளிக்
கவென்றே - பெய்தமிழ்ச்சுருதித் திருப்பாவைமுப்ப
தும் பெற்றதிருநாவாயினுய்,
மருமொய்க்குதண்டலை வருக்கைக்குடங்கனியின் மாங்கனி
யினீர்ங்குலைக்கூன் - வாழைச்செழுங்கனியி னூறு
பைந்தேறல்போய் மதகுபுக்கலையெறியுமத்,
திருமுக்குளந்தனின் மூழ்கிக்கிடந்துலவு திண்சிறைய
வண்குருகினத் - தீதறுத்திடவரா னிரிற்றுளைந்து
வளர் திருமல்லிவளநாடியே. (௪)

கண்படைத்ததுவுனைக் காணவுஞ்சென்னியுன் கழலிணை
வணக்கமுறவுங் - கையுனைப்போற்றிடவு நாவுனைப்
பாடவுங் காலுனைவலஞ்செய்யவும்,
பண்புறச்செவியுனது வண்புகழ்க்கேட்கவும் பாலிக்குமிம்
மனிதனாய்ப் - பாரிற்பிறப்பதற் காசையல்லாலுனது
பரமபதவாழ்வும்வேண்டேன்,
றண்பொழிற்பூகம் பசும்பாளைமுத்தவெண் சாமரையிரட்ட
நாற்றுந் - தாற்றுப்பெருங்கதலி கீற்றிலைப்பச்சைத்
தடுக்காலவட்டமோச்சச்,
செண்பகப்பந்தரிற் பொன்மரகதத்திடைச் செம்பவள
வல்லியூசற் - றேவரம்பையராட லிந்திரபுரம்பொரு
வு திருமல்லிவளநாடியே. (௫)

சந்தாபமிகுதுயர்ப் பவமாயைதன்னைத் தறித்துன்னைவல
மாகினின் - சரணென்றடைந்தவர்க் கரணென்னவும்
மீறு சண்டாளமிண்டரெனினும்,
வந்தாலுமன்னவரை யாதரித்தேயருள்கை வருமுனது
விருதென்னவே - மணிநூபுரந்திகழு முன்றிருத்தா
ளெனது வஞ்சமிகுநெஞ்சில்வைப்பாய்,
கொந்தார்மலர்ப்பொழிலு மந்தாரவேலியுங் குன்றிலுறு
தென்றல்வீசுங் - கோட்டுத்தடஞ்சுனையின் மேட்டுப்
படர்ந்துவளர் குல்லையிதழ்முல்லைவனமுஞ்,
செந்தாமரைக்கழனி யுந்துழனியுந்தண் டிரைப்புனனி
றைப்பணிலமுஞ் - செங்குவளையுங்குளமு மொங்கும்
விளையும்புகழ்த் திருமல்லிவளநாடியே. (௬)

சுந்தரத்தோளழகர் மாலிருஞ்சோலையிற் சொற்பசுங்கிள்
ளையாகிச் - சோதிமணவாளர்தங் காவிரிநதித்துறைத்
தூயமடவன்னமாகிச்,
கொங்கவிழ்மலர்ச்சுனைக் கோனேரியப்பனருள் கொண்ட
திருவேங்கடப்பொற் - குன்றத்திலேற்றிய விளக்காகி
வடபெருங் கோயிலுட்கோதையானாய்,
சந்தனக்காவணமு மாவணமுமேடையுஞ் சாளரமுமாட
ரங்குஞ் - சந்தித்தெருத்தலையின் மாடகூடங்களுந்
தண்ணிலாமுற்றவெளியுஞ்,
செந்தமிழ்ப்பாடுவார் மறையெடுத்தோதுவார் சீபாடியம்
படிப்பார் - திருவாய்மொழிப்பனுவல் பாராட்டுவார்
மிகுந் திருமல்லிவளநாடியே. (௭)

ஒருபொழுதுநின்னடிக டொழுமவரையளகைநக ரொண்
ணிதிக்கிறைவனாக்கி - யோங்குமயிராவதத்தேற்றியிந்
த்ராணியுட னும்பருலகாளவைத்துப்,
பொருகுமகிலாண்டமு மிறைஞ்சநான்முகனெனப் பிரம
லோகத்திருத்திப் - பெரும்பேறளித்தென்னும் வாழ்
விக்குநின்னுடைய பேரருளையோதவெளிதோ,
குருகுறையும்வண்மையுளமாடப்பெருஞ்சுனைக் குடங்கள்
போய்முட்டாமைசூழ்- கொள்ளைக்கதிர்ச்சாலிமேய்ந்
துகடைவாய்தொறுங் கொப்புளித்தொழுகுபாலுங்,
திருகிவருநெட்டைக் கருங்கோட்டுமேதிகள் சிறுகன்றின
ங்களூட்டுஞ் - செழுமுலைசுரந்தொழுகு பாலும்வயன்
மேவுதென் றிருமல்லிவளநாடியே. (௮)

காற்றைப்பிடித்ததோற் பிற்றற்றுருத்தியைக் கலிவிடுதி
வீட்டைமோட்டுக் - காக்கைகழுகிர்த்துண்ணு மாக்
கையைத்தேக்குபொய்க் காமநோய்த்திமனத்துச்,
சோற்றுச்சுவர்க்குருதி நாற்றச்சடத்தைவெகு துன்பங்க
ளுறுபொங்கினைத் - தூர்க்கந்தமுற்றமல பாண்டத்தை
யென்றற் சுமக்கமுடியாதுகண்டாய்,
ஆற்றிற்கிடந்தகய லேற்றைப்பிளந்துசுற வலையுட்புகுந்து
வயலூர - டாளைத்துரந்துவிரி பாளைக்கருங்கமு கலை
த்துக்குலைச்செங்நெல்சேர்,
சேற்றிற்குதித்துவய றற்றைப்பிடுங்குமவர் செம்முகத்
துலவுகெண்டைத் - திண்டிறற்கஞ்சியுயர் கொண்டல்
புக்குய்ந்துவளர் திருமல்லிவளநாடியே. (௯)

தகரக்குழற்புற மவிழ்ந்திடமருங்கிலுடை சற்றேநெகிழ்ந்
திடமுலைத் - தரளப்படாஞ்சரிய நடையிட்டுலாவி
யெதிர் சருவிக்குணும்புமொழியான்,
மகரக்குழைப்பணி யசைப்பிப்பசப்பிவிழி வஞ்சவலைவீசு
வேசை - மாமாலமிட்டுவரு மாபாசமட்டையர் மய
க்கினைவிலக்கியருள்வாய்,
நிகரற்றமாமணிப் படிகமாடத்திலகு நித்திலச்சித்திரத்தூ
ணிலவிடப்பவளத் துகிற்பதாகைத்திர ணிமிர்ந்திட
நடிப்பதெழில்சேர்,
சிகரப்பொருப்புறுமிந் நகரச்சிறப்பொரு செகத்திலையெ
னக்கோதைமார் - திக்கிற்புகழ்ந்துவரு கைவாரநிகர்
செயுந் திருமல்லிவளநாடியே. (௧0)

பதறிப்பெருங்கொலைக் காலக்கடுந்தூதர் பற்றியெற்றென
வந்துநீள் - பாசக்கொடுங்கயிறு வீசிப்பிடித்துடல்
பதைத்திடவதைக்குமந்நாள்,
கதறித்துடிக்கவென் றுவெழும்பாதுனது காறொழுக்கை
யெழாது - கதியிலாப்பாவியே றுவியின்றேயுனது
கருணைக்கிலக்காக்கினேன்,
உதறிச்சிறைப்படலம் விசிறிக்குடைந்துநற வுண்டுவண்
டுதுவாசத் - துயர்பொற்பொகுட்டுநெட் டரவிந்த
மொட்டலரு மோடையம்பாற்கடலின்மேற்,
சிதறித்திரண்டிலகு புனிதமென்பேடுதன் சினையென்ற
ணைப்பவளவெண் - செழுமுத்தினைக்குருகு மீனென
வருந்தல்செய் திருமல்லிவளநாடியே. (௧௧)

உன்னைப்புகழ்ந்துமிக வேண்டுவதொன்றுண்டிவ் வுலக
மொருகுடைநீழலி - லுற்றரசையாள்கெனப் பொற்
றவிசிருத்தினு முறக்கமிறுறக்கவானோர்,
மன்னற்குமன்னெனப் பாவித்துவைப்பினுமவ் வாழ்வை
யொருபொழுதும்வேண்டேன் - வண்புதுவைநின்
னடிக டொழுமவர்புறங்கடையில் வைகுநாயென
வகுப்பாய்,
புன்னைப்பொதும்பரிற் பள்ளிகொண்டள்ளலம் பூஞ்சுனை
யிலூஞ்சலாடிப் - புளினத்துவெளிநத்தொடுறவாடி
வயலிற் புகுந்துவிளையாடிமேட்டிற்,
செந்நெற்செழுஞ்சூட்டின் மென்னடைப்பேட்டுடன் செ
ங்காலனம்பிணைதனீள் - செம்பொற்பருப்பதத் தம்
புலியெனப்பரவு திருமல்லிவளநாடியே. (௧௨)

மாதாவுனக்குச் செழுந்துளபநீபெற்ற மைந்தரிலாண்ட
முன்னோர் - மறையோதுபட்டர்கோ னுன்றிருத்தா
தைரா மாநுசனுனக்குமுன்னோன்,
வேதாமுதற்கடவு ளெவருமுன்றொண்டருனை மேவுமண
வாளரெழில்சேர் - மெய்த்திருவரங்கேச ரித்தகை
மையாதலால் வேறுனைப்புகழ்வதென்காண்,
தாதாடுபரிமளப் பூஞ்சுனைகுளிப்பவர் தடங்குழையைநெ
டுவள்ளையின் - றண்டெனத்தீண்டுவார் கண்களைக்கய
லெனத் தடவுவார்குடமுலைதனைச்,
சீதாரவிந்தமுகை யென்றுகைப்பற்றுவார் செழுமுகிற்குழ
லையறுகாற் - றிரட்சியென்றேச்சுவார் போன்றிளைஞ
ர்மயலெய்து திருமல்லிவளநாடியே. (கரு)

மாலைப்பெணெதிராச னுக்கிளையபெண்பெண்கண் மாணிக்
கமரகதப்பெண் - வடிவொப்பிலாதபெண் பாவிக்கொ
ணாதபெண் வண்டமிழ்ப்பாடவலபெண்,
வேலைப்பெண்மாலரங் கேசர்க்குமோகப்பெண் விண்டுசித்
தன்பெற்றபெண் - வில்லிபுத்தூர்க்குமுத் தானபெண்
முத்திக்கு வித்தானசர்க்கரைப்பெண்,
ஆலைக்கரும்பினின் சாற்றினட்டாற்றினி லழுந்திக்கருங்
கமுகெலா - மலைத்துக்குலைத்தெங்கின் முப்புடைக்
காய்வீழ வலசித்தடந்தின்மூழ்கிச்,
சேலைப்பழித்தவிழி மாதர்தனபாரச் செழுங்குங்குமச்சே
ற்றுடன் - செம்மேகமென்னவரு மென்மேதிமிகுபுக
ழ்த் திருமல்லிவளநாடியே. (கச)

பெண்டுகெட்கரசான தெய்வங்கணாயகம் பேரருட்கோதை
வென்றே பிடிக்குந்திருச்சின்ன முட்டிற்றெழத்
தோல் பிரம்புகொண்டெற்றவருபொற்,
றண்டிகைப்பவனியும் மஞ்சனச்சேவையுஞ் சாற்றிடவுன
க்கலாது - சாதித்துநாடொறும் பாவிக்கினுஞ்சிறிது
தரணியிலெவர்க்கும்வருமோ,
கொண்டலைத்தழுவுநற் றருமகிரிமீதிற் குதித்துநெட்டரு
விசாய்த்நுக் - குடசங்கடுக்கைசந் தொடுபுன்னைசெ
ண்பகங் கோங்குடன்பூங்குருந்திற்,
றெண்டிரைப்புனனிறைத் தம்புயத்தடமெலாந் தேக்கிநவ
மணிகள்வீக்குங் - தென்பொழிற்புடைசூழ்ந்த வானோ
நதிபாய்வயற் றிருமல்லிவளநாடியே. (கரு)

அளிக்கும்பரஞ்சோதி வைகுந்தவானாட்டி லானந்தவிளை
யாடல்விட் - டர்ச்சாவதாரத்தை யாதரித்தோதுதிரு
வாடித்திருப்பூரநாள்,
குளிக்குந்தடஞ்சுனைப் புதுவையினறுந்துழாய்க் குடியில்
வந்தவதரித்துக் - கொண்டறவழ்வடபெருங் கோயி
லருகந்திடக் கோதைசூடிக்கொடுத்தாய்,
பளிக்குமணிமண்டபத் தூடாடிநிச்சலும் பலகணிநுழைந்
துமேடைப் - பள்ளிதுயில்கொளுமிளைஞர் கூடுமட
வார்முலைப் பரிமளமுகந்துசெந்தேன்,
றெளிக்குமம்பொற்கா வணத்திளைப்பாறிச் சிறந்ததிருமா
ளிகைதொறுந் - தென்றற்பசுங்குழவி மன்றற்றவழ்ந்
துவரு திருமல்லிவளநாடியே. (கசா)

## பலசுருதி.

அரிதிருவரங்கமென் றோருமெய்த்தொண்டருக் காளாக்
கிளீளவுந்தன் - னருள்சுரந்தேயென்னை யடிமைகொ
ண்டிதயகம லாசனமிருந்திசையுறுஞ்,
சுருதிவண்டமிழ்பாட வல்லசொற்கோதைதன் றொல்புக
ழ்தனைக்கொண்டுநான் - றோத்திரஞ்செய்யுமிச் சந்
திரகலாமாலை சொல்லிசைபெறப்படிப்போர்,
கருதியபயன்பெறுவர் புவியினில்வளம்பெறுவர் கல்வி
செல்வம்பெறுவர்நற் - காமதேகம்பெறுவர் சோம
லோகம்பெறுவர் ககனத்திருக்கைபெறுவர்,
பருதிவழிநடுமண்ட லம்பெறுவரிந்திரன் பட்டணம்பெறு
வரளகைப் - பதிபெறுவராரணன் கதிபெறுவர்நா
ரணன் பரமபதமும்பெறுவரே. (க)

## வாழி.

பொங்குபுகழ்மாநிலத் தரசர்செங்கோல்வாழி பொது
மறைச்சுருதிவாழி - போதஞானப்பரம பாகவதகோ
ட்டிகள் பொலிந்துநீடூழிவாழி,
எங்களெதிராசமுனி பாடியக்கலைவாழி யினியபல்லாண்
டுமுதலா - யிசைத்தநாலாயிரப் பனுவல்செந்தமிழி
னி லிசைத்தசொற்பதின்மர்வாழி,

துங்கநெடுமாலினூற் றெட்டெனும்பதிவாழி சுரிகுழற்
கோதைமுன்னஞ் - சூடிக்கொடுத்தமயில் வாழியவ
டோன்றுபொற் றுளபமாளிகையும்வாழி,
திங்கண்மும்மாரிபெய் தளவிலாச்செல்வமிகு திருமல்லி
நாடுவாழி - சேவிக்குமித்தலத் தனைவரும்வாழிதிகழ்
சீவில்லிநகர்வாழியே. (க)

## ஸ்ரீ ஆண்டாள் சந்திரகலாமாலை,

முற்றிற்று.

ஸ்ரீ ஆண்டாள் திருவடிகளேசரணம்.

உ

சிவமயம்.

திருவாவடுதுறை யாதீனகர்த்தர்

# ஸ்ரீலஸ்ரீ வைத்தியலிங்க தேசிகர்

# மாலை.

“ சித்தாந்த சைவப்பிரசாரகர் ”

உறையூர்.

தே. பெரியசாமி பிள்ளை.

SOLDEN & Co., PRINTERS

TRICHINOPOLY.

1925.

உ

சிவமயம்

நிகமாகம சித்தாந்த சைவ சமயாசாரிய
பீடமாய் விளங்கா நின்ற

திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை யாதீனம்

மஹா சந்நிதானம்

# ஸ்ரீலஸ்ரீ வைத்தியலிங்கதேசிகர் மாலை.

இது

திரிசிரபுரம், உறையூர் சைவ சித்தாந்த சபைத் தருமகாரியும்
ஸ்ரீ மீனாட்சி சுந்தர வித்தியாசாலைத் தலைவரும், கு. தா. லாலா
பேட்டைச் சித்தாந்த ஞானப்பிரகாச சபைத் தலைவரும்
பூவாளூர், திருவானைக்கா, சைவசித்தாந்த சங்கங்
களின் உபாக்கிராசனாதிபதியும், சென்னை சைவ
சித்தாந்த மகாசமாஜத்தின் அத்தியக்ஷரும்
ஆகிய “சித்தாந்த சைவப் பிரசாரகர்”

உறையூர்
தே. பெரியசாமி பிள்ளை இயற்றியது.

திரிசிரபுரம்
சோல்டன் கம்பெனியில் பதிப்பிக்கப்பெற்றது.
1925

சிவமயம்.

# சிறப்புப்பாயிரங்கள்.

சிதம்பரம் ஸ்ரீ மீனாக்ஷி தமிழ்க்காலேஜ் பிரின்ஸிபால்

"மஹாமஹோபாத்தியாயர்"

## பிரும்மஸ்ரீ. வே. சாமிநாதையரவர்கள்

உரைத்தருளியது.

விருத்தம்.

கோமலி யறிஞர் குழாமலி செல்வக்
கோமுத்தி மடாலயத் தரசாந்
தேமலி சில வைத்திய லிங்க
தேசிக வள்ளன்மேன் முப்பான்
பாமலி மாலை பண்புற வியற்றிப்
பரிவினிற் சாத்தியுய்ந் தனனாற்
பூமலி பெரிய சாமியென் புலவன்
புகழ்மலி யுறந்தைவாழ் பவனே

---

நாட்டரசன் கோட்டை

"கம்பராமாயணப்பிரசாரகர்"

## பிரும்மஸ்ரீ ப. ஸ்ரீ. இராமையங்காரவர்கள்

இயற்றியது.

மாலையறி புலவராமு துண்டார்முன் பின்னுமது
வாய்ப்ப வாய்ந்து

சோலைநிறை யாவடுதண் டுறையில்வைத் தியலிங்கத்
    தூயன் றேட்கு
நூலைமுறை யறிந்துரைக்கு நுண்ணறிவாற் றமிழ்மாலை
    நோன்பிற் சேர்த்தான்
நூலைமுறை பிறழாமற் காக்குமுறந் தைப்பெரிய
    சாமி வேளே.

---

திருவாரூர் திருக்கூட்டத் தொருவரும்

தேவிநகர் வாசியும், ஆகிய

பூவாளூர் சைவசித்தாந்த சங்கத்து

அக்ராசனாதிபதி

## ஸ்ரீமத். சு. சாமிஐயா தேசிகரவர்கள்

இயற்றியது.

தமிழ்மொழியுஞ் சிவநெறியுந் தழைக்கவொளிர் கோமுத்திச்
    சைவா தீனத்
தமர்தருவைத் தியலிங்க வருட்குருதண் ணடிமலருக்
    கணிய லந்தத்
தமிழ்மணமுஞ் சிவமணமுந் தகக்கலந்து மிகவினிப்பச்
    சாத்தி னால்
அமுதக்கவிப் புலவனுறை யூர்ப்பெரிய சாமியய
    ரறிஞர் கோவே.

திருவிடைமருதூர் வித்வான்

## ஸ்ரீமத். சி. ச. கந்தசாமி தேசிகரவர்கள்

இயற்றியது.

பண்ணவர் பெருமா னாவடு துறைவாழ்
பசுபதி வைத்திய லிங்க
அண்ணனங் குருவா யமர்ந்தருள் போதி
லஞ்சுறும் பாப்பணி விடுத்தே
எண்ணரு மகிழ்வி னோற்றிடத் தமிழி
னினியபாப் பணியணி யீந்தான்
தண்ணல வுறந்தைப் பெரியசாமிப்பேர்
சைவசித் தாந்தநா யகனே.

வெடியூர் ஆதின ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதரும் "குணநிதி"
பத்திராதிபருமாகிய வெடியூர்

## ஸ்ரீமத். சொ. பிச்சையா தேசிகரவர்கள்

இயற்றியது.

வானநாட் டவரும் வாழ்த்துறுந் துறைசை
வைகுறும் வைத்திய லிங்க
ஞானதே சிகனார் நாண்மல ரடிக்கு
நற்றமிழ் மாலிகை நவின்றான்
தேனகு மலர்ப்பூஞ் சோலைசூ ழுறையூர்
செய்தவப் பயனெனத் திகழும்
மேனகு கல்விப் பெரியசாமிப்பேர்
விற்பன வித்வரத் தினமே.

திரிசிரபுரம்
சூசையப்பர் கல்லூரித் தலைமைத்தமிழ்ப்புலவர்

**திருவாளர் அ. சிவப்பிரகாசர்**

கூறியது.

கோழிகைம் மாவலி குறைத்த வளம்பதி
வாழி யுறந்தை வாழ்தொல் குடிவரு
நலமிகு செல்வன் புலமிகு மறிஞன்
உரிய நுரைசால் பெரிய சாமியென்
உளநிறை நண்பன் தளர்வி லன்பன்
திருவா வடுதுறை யொருவா வரவோன்
இறையரு ளன்பர்க் குறையு ளெனவருள்
வள்ளல் வைத்திய லிங்கதே சிகர்மென்
மலர்த்தாள் வழுத்திய குலத்தமிழ்த் தெரியல்
நினைவற நினைந்து புனைந்தருட் குரவனை
மகிழ்வித் தின்ப மாண்பெய் தினனே.

திரிசிரபுரம். பிஷப்ஈபர்கலாசாலைத்
**தலைமைத் தமிழ்ப் பண்டிதர்**

**ந, மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள்**

இயற்றியது.

திருவளருந் துறைசைவயித் தியலிங்க தேசிகர்மேற்
றிகழு மின்சொல்
மருவளருந் தமிழ்மாலை புனைந்து மகிழ் பூத்தனன்சீ
ருறந்தை வாழும்
உருவளருந் திருநீறு மைந்தெழுத்தும் பொருளாய
வோங்கு சைவக்
குருவளருங் கலைப்புலவன் பெரியசாமிப் பெயர்சால்
குணமிக் கோனே.

திரிசிரபுரம் வரகனேரி தமிழ்வித்வான்

## திருவாளர். தி. ம. பென்னுச்சாமிபிள்ளையவர்கள்

இயற்றியது.

அரிய மயனுந் தேடரிய
அரன் வாழ் பதியா வடுதுறையிற்
பிரிய முடன்வாழ் வைத்யலிங்கப்
பெம்மான் ஞான தேசிகர்மேல்
அரிய சேடன் முடிதுளக்க
வளித்தான் மாலை யாவனெனிற்
பெரியோ னுறந்தைப் பதிவாழும்
பெரிய சாமிப் புலவோனே.

---

கும்பகோணம் தமிழ்ப்பண்டிதர்

## திருவாளர். சாமிநாதபிள்ளை அவர்கள்

இயற்றியது.

தென்னுருஞ் செந்தமிழ்மந் திரமுநித்த துறைசைதனிற்
றிகழும் கலை
மின்னுரும் பரம்பரைக்கோர் விண்மணியா யன்பர்பவ
வியாதி தீர்க்கும
பொன்னுருங் கருணைமருந் துதவுவயித் தியலிங்கப்
புகழ்ப்பேர் தாங்கும்
மன்னுருங் குருபாரை யநுதினமு மனத்திருத்தி
வணங்கி வாழ்த்தி;

சொற்சுவையும் பொருட்சுவையுந் துலங்கிடுபத்
திச்சுவையுஞ் சொட்டச் சொட்டப்

பற்சுவைசேர் பாமாலை புனைந்தணிந்து
புகழ்பலவும் படைத்தா னும்பர்
விற்சுதைசேர் மாடநிறை யுறந்தைநகர்
வித்வமணி விவேக பாநு
நற்சுவைசால் கவிதைமழை பொழிபெரிய
சாமியெனு நாவல்லோனே

திரிசிரபுரம். பிஷப்ஈபர்கலாசாலைத் தமிழ்ப் பண்டிதர்

**திருவாளர் அமிர்தம். சுந்தரநாதபிள்ளையவர்கள்**

இயற்றியது.

கலையுடன் மதியுங் கவினுட னெழுகுங்
கவிபுகல் திறனுமன் பூண்ட
நிலைபெறு புகழோன் பெரியசாமிப்பேர்
நிறைதமிழ் வல்லவ னழகாத்
தலைதரு துறைசை வைத்திய லிங்கச்
சற்குரு பொற்கழல் மருவ
மலைவறு மின்பப்பொருள் கொளேர் மாலை
வனைந்தனன் வையம் வாழ் வுறவே.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்த குருவே துணை.

துறைசை

# ஸ்ரீலஸ்ரீ வைத்தியலிங்கதேசிகர் மாலை.

சிவமயம்.

(காப்பு)

சங்கர னுமைமகிழ் தந்தி யானனன்
அங்கழ லிறைஞ்சியா வடுதுறைக்குரு
சிங்கம்வைத் தியலிங்க தேசி கேசர்க்கு
மங்கலச் செந்தமிழ் மாலை சூட்டுவாம்.

## சமயாசாரிய சந்தானாசாரிய பரம்பரை வணக்கம்.

பரசமய கோளரியைப் பரவாரூ ரரசைப்
பரவைமகிழ் காதலரைப் பகர்மணிவா சகரை
வரசமுகமெய்கண்ட மாமணியைத் துறையூர்
வளருமருணந்திதனை மறைஞானத் தேவை
முரசறைந்து முத்திதரு முதல்வருமா பதியை
முன்னருஞ்சீருணமசி வாயர் முதலான
அரசவனக் குரவர்தமை யவர்பரபின் மேலு
மடைவார் யாவரையுநித மகமகிழப் புகழ்வாம்.

(நூல்)

கங்கையுஞ் சடையுங் கண்கமழ் நுதலுங்
கலைமுத லேந்தியே கவினும்
அங்கையு மால மார்தரு களமு
மகிலமியா வையுமினி தீன்ற
மங்கைதன்பாலு மாற்றியேற் றனையிம்
மக்கண்மெய் மிக்கபுண் ணியமே
மங்கலத் துறைசை வைத்திய லிங்க
மாசிலாத் தேசிக மணியே (௧)

பாருயிர் பந்த மென்னுமுப் பொருளின்
பண்பினைப் பங்கயச் செங்கை
விரனிரை கொண்டு விளக்கிய நின்னை
விடுத்தெவர் பாலடுத் திடுவேன்
காவக லுள்ளத் தடியவர் பருகுங்
கரையிலா னந்தமாக் கடலே
வாமிகு துறைசை வைத்திய லிங்க
மாசிலாத் தேசிக மணியே. (உ)

கன்னலங் குதலைக் கனிமொழித் துவர்வாய்
கயல்விழி யார்கட மயலால்
நின்னடி மலரை நேசியா துழலுந்
நீசனேன் பாசவே ரறுமோ
பொன்னகர்க் கிறைவ னாகிவா னவர்கள்
பூவுறை மாதவ ராதி
மன்னர்சூழ் துறைசை வைத்திய லிங்க
மாசிலாத் தேசிக மணியே. (ங)

வெண்பொடி மேனி முழுவதும் பூசி
விழிமணி மாலிகை பூண்டு
பண்பொலி தெய்வப் பைந்தமிழ் வேதம்
பன்னுநாத் தழும்புறப் பாடி
கண்பொழி நீருங் கருத்துமா நசையிற்
கடையனின் கழறொழக் கணிப்பாய்
மண்பொலி துறைசை வைத்திய லிங்க
மாசிலாத் தேசிக மணியே. (ச)

விதியொடு விலக்கு மினிதுணர்ந் தொழுகு
மேலவர் பாலடைந் தவர்சொன்
மதிவழி யொழுகு மதியினை வழங்கி
மன்னுபே ரின்பவாழ் வென்னுங்
கதிநிலை கூடக் கடையனைக் காண்பாய்
கடிமதின் முடிமிசைக் ககன
மதிதவழ் துறைசை வைத்திய லிங்க
மாசிலாத் தேசிக மணியே. (௫)

அடுத்ததேத் கங்கட் களவிலை வாளா
வழிந்தன வடிகணிற் கடியேன்
தொடுத்தசெந் தமிழாற் றுதிபுரிந் தன்பிற்
றொண்டுசெய் திருக்குமா விஞ்ஞான்
றெடுத்தவிவ் வுடல்போ யினியதொன் றுண்டோ
விரும்பொழி லரும்புதேன் சுரும்பார்
மடுத்தெழுந் துறைசை வைத்திய லிங்க
மாசிலாத் தேசிக மணியே. (௬)

வெண்டிரு நீற்றுப் புண்டரப் பொலியும்
விழிமணி மாலிகைப் பூணுந்
தண்டமிழ் வேத மோதலைந் தெழுத்துச்
சாதன மேதன மென்னக்
கொண்டமெய் யன்பர் குழுவினு ளெனையுங்
கூட்டுவித் தருளுநா ளுளதோ
மண்டுசீர்த் துறைசை வைத்திய லிங்க
மாசிலாத் தேசிக மணியே (௭)

நிதிநிலை மாதரென் றுழலு வாசை
நெடுங்கட லிடைப்படு நீச
மதியுடைச் சிறியோன் வஞ்சநெஞ் சன்றன்
மாசரண் பூசிப்ப தென்றோ
பதிபசு பாசப் பகுப்பொரு டேர்ந்து
பாகமார் சத்திநி பாதர்
மதிதருந் துறைசை வைத்திய லிங்க (அ)
மாசிலாத் தேசிக மணியே

என்றுநீ யுளமுற் றன்றுதொட் டேயிவ்
வேழையா மடியனிற் கடிமை
என்றுநான் மறைக ளாகம நாலை
ழியம்பிடு மென்பது மிவைகள்
உன்றிரு வாக்கு மாகில்யா னடிமை
புஞற்றலென் றொப்பனீ யென்றோ
மன்றுசூழ் துறைசை வைத்திய லிங்க
மாசிலாத் தேசிக மணியே. (௯)

பெண்மயல் கொண்டு பேதுறு மனத்துப்
பேதையிற் பேதையே யென்ன
உண்மதித் துலகர் வெறுக்கினு மென்னை
யுடையநீ வெறுப்பதிங் குறுமோ
தண்மலர்ப் பாதந் தலைமிசைச் சூட்டித்
தமியனைத் தாங்கலே தகவாம்
வண்மதிற் றுறைசை வைத்திய லிங்க
மாசிலாத் தேசிக மணியே. (௧௦)

காப்பது விரத மென்னுமோ துரையைக்
கனவிலுங் கருதிலன் கமழும்
பூப்பறித் திட்டுன் பொன்னடி போற்றேன்
போதமா ரேழிரண் டிரு நால்
நாப்பயின் றறியே னெனினுநின் னடிமை
நானெனல் ஞாலநன் கறியும்
மாப்புகழ்த் துறைசை வைத்திய லிங்க
மாசிலாத் தேசிக மணியே. (௧௧)

பிழையெலாம் பெரிதும் புரியநா ணுகிலேன்
பேணிலே னலமொரு சிறிதும்
குழைமனத் தொன்றுங் குறித்திடா தாண்டு
கூர்ந்தரு ளுவையெனச் சார்ந்தேன்
விழைகுவார் விழையும் விழைவெலாம் விழைவின்
மேவிட விரைந்தருள் விமல
மழைமதிற் றுறைசை வைத்திய லிங்க
மாசிலாத் தேசிக மணியே. (௧௨)

முகிலெனக் குழலை முத்தென வெயிற்றை
முருக்கென விதழைமா வடுவின்
வகிரென விழியை மதியென முகத்தை
வரையென முலையினை மடவெ
ளெகினென நடையை யேந்திழை யவர்பா
லியம்புவேன் பயன்பெறு வேனோ
மகிபுகழ் துறைசை வைத்திய லிங்க
மாசிலாத் தேசிக மணியே. (௧௩)

பொறையரு ளடக்க மன்புப சாரம்
பொருந்துமா சாரநன் னீதி
முறைநிசங் கல்வி மொய்ம்புய ரீகை
மூதுணர் வீரமா தியவை
இறையுமி லெளியே னெவ்வண நின்று
ளெய்தலென் றெண்ணிவா டுறுவேன்
மறைபயிற் றுறைசை வைத்திய லிங்க
மாசிலாத் தேசிக மணியே. (கச)

ஆகமே நானென் றலைந்தனன் சின்னா
ளமையுமிந் திரியநா னென்றேன்
ஊகமே நான்மற் றுயிருநா னென்றென்
றுழன்றன னொப்பினின் னுரையாற்
சோகமே பாவித் திருந்திட்ட வன்றே
தொலைந்தன வவையெலாஞ் சோலை
மாகமார் துறைசை வைத்திய லிங்க
மாசிலாத் தேசிக மணியே. (கரு)

காட்சியொன் றன்றிப் பிறவுள யாவுங்
கற்பித மாமெனக் கரையு
மீட்சியில் பாதகத் தார்நீ திருவாய்
விண்டமெய் கண்டநன் னூலின்
சாட்சிகொண் டுணருந் தரமுடை யவரோ
தமிழ்மறை முழக்கொலி தவிரா
மாட்சிசார் துறைசை வைத்திய லிங்க
மாசிலாத் தேசிக மணியே. (கசு)

குறுமுனி முதலோர் சமழ்ப்புறத் தமிழ்முற்
கூர்ந்திடு புலமையர் குழுவும்
தெறும்புலத் தினமாம் யோகியர் குழுவுந்
திகழ்சிவ ஞானியர் குழுவும்
உறுமுயர் நின்பொற் சந்நிதி முன்ன
ரொதியனே னுற்றிட வருள்வாய்
மறுவறு துறைசை வைத்திய லிங்க
மாசிலாத் தேசிக மணியே. (கஎ)

முளைத்தபே ரன்பர்க் கருள்வையே லஃது
முறையெனப் பெறுமவ்வா றின்றி
இளைத்தடைந் தேனுக் கருள்வையே லீதங்
கேற்றத்தி னேற்றமா கிடுமே
கிளைத்தகோட் டெருமை பாயவாய் வெருவிக்
கிளர்ந்தெழு வரான்முகில் கிழிக்கும்
வளைத்தடத் துறைசை வைத்திய லிங்க
மாசிலாத் தேசிக மணியே. (கஅ)

தன்னுயிர் தன்னை நீப்பினுஞ் செயற்க
தான்பிறி தின்னுயிர் தவிர்ப்ப
தென்னுமெய்ம் மொழியை யின்பமாக் கொண்டிங்
கியங்குமா தவரலா தென்போற்
புன்னடைப் புலையர் பொருந்துவ தெங்ஙன்
பொருவிலா நின்னருள் புகலாய்
மன்னெழிற் றுறைசை வைத்திய லிங்க
மாசிலாத் தேசிக மணியே. (க௯)

குசைநுனி தனிலுங் கூர்த்தனுண் புலங்கூர்
கோதின்மெய் யடியவ ரெல்லாம்
இசையெடுத் தியம்பக் கேட்டுவப் பதிலு
மேழையேற் கவ்வறி வுதவி
இசைந்திடச் செய்யை யெனிலெழு புகழ்தா
மேழுல கடங்குமோ வெந்தாய்
வசைதவிர் துறைசை வைத்திய லிங்க
மாசிலாத் தேசிக மணியே. (உ௰)

தம்முடல் பெருக்கத் தாம்பிறி துடலைத்
தடிந்துணுஞ் சழக்கரைக் காணில்
அம்மமற் றிவரை யணுகிடற் றீங்கே
வடையுமென் றஞ்சியே வகன்றன்
செம்மலர் நோன்றாட் கன்புசெய் திருக்குஞ்
செல்வமே தந்தெனைப் புரப்பாய்
மம்மர்தீர் துறைசை வைத்திய லிங்க
மாசிலாத் தேசிக மணியே. (உக)

முருக்கிதழ்ச் செவ்வாய் முகிழ்முலை மடவார்
மோகவா ரிதியிடை மூழ்கித்
தருக்குந ரெல்லா நின்றிருச் சமுகஞ்
சாரவுந் தரமுடை யவரோ
பொருக்கரைத் தேமா மாதுளை கதலி
பூகமா தவியகி லோடு
வருக்கைசூழ் துறைசை வைத்திய லிங்க
மாசிலாத் தேசிக மணியே. (உஉ)

ஊழ்வினை வழியே வந்துற்ற தல்லு
மொழிந்திடி னுடனழிந் தொழியும்
பாழ்தரு வினை யோம்பலாற் பயனென்
பாரமா மீதிறு முன்னம்
ஆழ்கருத் தோடுன் னடிப்பணி புரியு
மார்வமீந் தழிவிலா வின்ப
வாழ்வருந் துறைசை வைத்திய லிங்க
மாசிலாத் தேசிக மணியே. (உ௩)

காகமு முறவோ டுண்பது கண்டுங்
கடையனே னங்ஙன மின்றித்
தேகமே பெரிதென் றுளவெலா மருந்தித்
தினமெலாங் கழித்தனன் சிறிதும்
மோகமோ தவிரேன் யோகமோ வறியேன்
மூடனேன் பிறப்பென்ன பிறப்பே
மாகவின் றுறைசை வைத்திய லிங்க
மாசிலாத் தேசிக மணியே. (உ௪)

சிற்றறி வுடையேன் காட்டிடக் காணுஞ்
செயலினேன் சிறியனே னெனக்கு
முற்றறி வுருவ முதல்வனீ யிரங்கி
முயங்குபே ரருளினு னின்னை
இற்றெனக் காட்டா யென்னிலென் னுணர்வே
னீதுனை யன்றியே புரிவார்
மற்றெவர் துறைசை வைத்திய லிங்க
மாசிலாத் தேசிக மணியே. (உ௫)

கடையனிற் கடைய னாய்த்திரிந் தெய்க்குங்
கடையனைக் கைவிடா தென்னை
உடையநா யகனீ யுளமுவந் தாண்டா
லொவ்வுறு தென்னுமோ வுலகம்
அடைதரு மொன்றே வுடையவான் சமழ்ப
வணிபொழில் பலகொடு திகழும்
மடைவயற் றுறைசை வைத்திய லிங்க
மாசிலாத் தேசிக மணியே. (உசு)

பிறர்தமக் கின்னா முற்பகற் செய்யிற்
பிற்பகற் றமக்கின்னா தாமே
உறனிச மென்ன வோதும்வள் ளுவர்த
முரையினைக் கடைப்பிடித் தொழுகுந்
திறனிலாச் சிறியோற் குய்வழி காட்டிச்
சேவடி மேவிட வருள்வாய்
மறமகல் துறைசை வைத்திய லிங்க
மாசிலாத் தேசிக மணியே. (உஎ)

மங்கையர் பாரக் கொங்கையங் குவட்டில்
வல்விரைந் தேறியன் னவர்தம்
பொங்கர வல்குற் குழியிடை வீழ்ந்து
புலம்புமென் புந்தியன் னினைதொண்
செங்கழற் பாதஞ் சேருதற் கஞ்சஞ்
சேருநர் செனனவாரிதிக்கோர்
வங்கமாந் துறைசை வைத்திய லிங்க
மாசிலாத் தேசிக மணியே. (உஅ)

புலம்புரி துயர மகன்றநின் னன்பர்
புகல்பணிக் கொல்கிடா துஞற்றிச்
சலம்புரி பிறவிச் சாகரங் கடக்கத்
தமியனுக் கருளுநா ளுளதோ
தலம்புரி தவத்திற் கிதற்கிணை வேறு
சாற்றுதற் கிலையென விமையோர்
வலம்புரி துறைசை வைத்திய லிங்க
மாசிலாத் தேசிக மணியே. (உகூ)

எத்துணை யின்றென் னறிவினை விரித்தீ
தியம்புமா றியக்கினை கொல்லோ
வத்துணை யேநின் னடிமலர்க் கணிய
லடியனே னணிந்தன னல்லாற்
பித்துடை மனத்துச் சுதந்தர மில்லேன்
பேசிய தொன்றிலை யருட்கண்
வைத்தருள் துறைசை வைத்திய லிங்க
மாசிலாத் தேசிக மணியே. (ஙய)

ஸ்ரீ மெய்கண்ட தேசிகர் மென்பதம் வாழ்க.

சுபம்!

உறந்தைப் பெருந்தேவனூர் என்னும்
"சித்தாந்த சைவப் பிரசாரகர்"
தே. பெரியசாமி பிள்ளை
இயற்றிய
ஸ்ரீலஸ்ரீ வைத்தியலிங்க தேசிகர் மாலை
முற்றும்.

உ

கணபதி துணை.

ஸ்ரீஜ்ஞானஸம்பந்தஸ்வாமிநேநம:

# சற்குருமணிமாலை.

திராவிடசித்தாந்தசைவவியவஸ்தாபக

ஸ்ரீமதாறுமுகநாவலபகவத்பாதபாதாரவிந்தரேணுசேகரரும்

யாழ்ப்பாணத்துவட்டுக்கோட்டைச்

சைவப்பிரகாசவித்தியாசாலை

திருநெல்வேலி ஸ்ரீஜ்ஞானஸம்பந்தஸ்வாமி மடாலயம்

இவ்விரண்டனது பிரதிஷ்டாபகருமாகிய

## அம்பலவாணநாவலர்ஸ்வாமிகள்

செய்தது.

இஃது

ஷை சைவப்பிரகாசவித்தியாசாலைத் தலைமை உபாத்தியாயர்

வே. சின்னத்துரைப்பிள்ளையால்

சென்னபட்டணம்

ஸ்டார் ஆப் இந்தியா பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

கலியப்தம் ௫௦௧௨-சாதாரண௵ ஆவணிமீ ௧௭௨.

சிவமயம்.

# முகவுரை.

நமது குருமூர்த்திகள் ஸ்ரீமத் ஆறுமுகநாவலர் ஸ்வாமிகள் வடக்கே பிங்கலை நாடியாகிய இமயமும் நடுவே சுழுமுனை நாடியாகிய தில்லைவனமும் தெற்கே இடைநாடியாகிய இலங்கையுமாக "மூன்று மிவை சிவ பூமியே" எனத் திருமூலநாயனார் திருமந்திரத்தில் தெளிவெடுத்தெண்ணிய அச்சிவபூமிகள் மூன்றனுள் ஒன்றாய் இடை நாடியாகிய இலங்கையெனப்படும் ஈழ மண்டலத்திலே வடசாரதாகிய யாழ்ப்பாணத்திலே நல்லூரிலே கார்காத்த வேளாளவருணத்திலே முடி தொட்டவேளாளராகிய பாண்டிமழவர்குடியிலே ஞானப்பிரகாசஸ்வாமிகள்மரபிலே வந்து திருவவதாரஞ் செய்து தாம் அவதரித்த தமிழ்நாட்டின் நிலைமைக் கேற்ப நமது தெய்வத்தமிழ்நூற்கல்வியறிவின் முற்றுணர்வு பெற்ற பாரங்கதராயும், அதற்கங்கமாக ஆரியமாகிய வடமொழியையும் உலகநிலைக்கேற்ப ராஜிகமாகிய ஆங்கிலத்தையும் கைவரப்பெற்றும், தாம் அவதரித்த சைவசமயமரபிற்கேற்பக் கர்மகாண்டம் ஞானகாண்டம் என இருவகைப்பட்டு வடமொழி தென்மொழியின்கண்ணுள்ள சைவசமயசாஸ்திரங்க

ளின் முற்றுணர்வு பெற்ற பாரங்கதராயும், இவ்விரு பிரகாரத்தாலும் தமது பிள்ளைமைப் பருவந் தொடங்கிச் சாமான்ய விசேஷாபய வித்தியா விநோதராய் வளர்ந்து வருவாராயினர்.

இப்படி வரும் நாளில், தமிழ்மொழி காலகதியால் ஆரியமாகிய வடமொழி அநாரியமாகிய ஆங்கிலம் முதலிய ஏனை மொழிகளின் மெலிவு படைத்து லோபித்தலும், அதனைத் தமிழறிஞர்கள் பார்த்தும் அதனை வளர்த்தற்கண் முயலாது வாளா போதலும் கண்டு எம்மொழியினு மினிய நமது தமிழ்மொழியை வளர்த்தற்கண் இச்சையும், சைவசமயம் காலகதியால் ஆரியமாய் அகத்ததாகிய வைதிகத்தின்மட்டோ, அநாரியமாய்ப் புறத்ததாகிய ஜைனமதம் முதலிய ஏனைச்சமயங்களின் மெலிவு படைத்து லோபித்தலும், சைவசமயிகள் அதனைப் பார்த்தும் அவ்வேனைச்சமயங்களைக் கண்டித்துச் சைவசமயத்தை வளர்த்தற்கண் முயலாது வாளா போதலும் கண்டு அதனை வளர்த்தற்கண் இச்சையும் தமக்குக் கருவிலமைந்தகுணமாய் அடங்கிநின்றது பையப்பைய விச்சிரும்பித்துத் தமது பிள்ளைமைப்பருவத்திற்றானே தம்மைக்கொண்டெழுப்ப அதனைத் திருவருளே துணையாக அங்ஙனம் முடிக்குதும் என்னும் அதுவே துணிவாகக் கொண்டெழுந்தனர்.

எழுந்த அவர் அதற்கு உபாயம் யாது என்னும் தமது ஆராய்ச்சியில் சம்சாரவாழ்க்கையைத் துறந்து நைட்டிகப்பிரமசரியவிரதம்பூண்டு தமிழிற் பழையனவாகிய நூல்களையும் உரைகளையும் பலபிரதிகளை வைத்

துப் பரிசோதித்து அச்சிற்பதிப்பித்து வெளியிடுதலும், அவற்றிற் பொதுநூற்பொருள்களைச் சைவர் வைஷ்ணவர் முதலிய எச்சமயிகளுக்கு மொப்பப் பொதுவாகவும், சைவசமயச் சிறப்புநூற்பொருள்களைச் சைவசமயிகளுக்கு ஒப்பச் சிறப்பாகவும் தமக்குப் பாலலீலைகளோடொன்றுபமைந்த பத்தியரசனத்தை விட்டு எல்லார்க்கும் புலப்படக் கருணையினால் கத்தியரூபமாகிய நூல்களைத் தாம் புதிதிற்செய்து அங்ஙனம் வெளியிடுதலும், அந்நூற்பொருள்கள் எவர்க்கும் இனிது விளங்க ஆங்காங்குச் சபைகளைக்கூட்டி உபந்நியாசங்களைச் செய்தலும், அந்நூல்களை மாணாக்கர்கள் கற்றற்குபயோகமாகத் தமிழ்ச்சைவப்பிரகாசவித்தியாசாலைகளை ஆங்காங்கு ஸ்தாபித்தலும், தாம் நேரே சன்மாணாக்கர்களுக்கு உறுதிநூல்களைக் கற்பித்தலும், தத்துவங்களை உபதேசித்தலுமே அதற்குபாயமென்னும் ஞானம் திருவருளால் தமதுள்ளத்துதிப்ப, அதன்கண் உறுதி பெற்று நின்று, அவ்வண்ணமே தமிழிற் பொதுவும் சிறப்புமாய்ப் பத்தியமும் கத்தியமுமாய்ப் பழையனவும் புதியனவுமாகிய நூல்களையும் உரைகளையும் திருத்தியும் தாமே செய்தும் வெளியிடுதலும், உபந்நியசித்தலும், வித்தியாசாலைகளை ஸ்தாபித்தலும், கற்பித்தலும், உபதேசித்தலுமாகிய கிரியை தமக்குக் கைவந்ததாக அதன்கண்ணே தளராது சரித்தும், இந்த இச்சை ஞானம் கிரியை மூன்றும் தமக்குச் சிவப்பிரசாதத்தையும் சிவகீர்த்தியையும் தரும் உத்தம சாதனங்களாகிய சக்திகளாய் நின்றுதவத் தாமோர் சக்திமானாய் இம்

மூன்று பிரகாரத்தாலும் இத்தமிழுலகத்தை வாழ்வி த்து இத்தமிழுலகம் வாழவந்த திராவிடசைவவாசஸ் பதி என்றும் மகோபகாரக மகாபுருஷரென்றும் தம்மை யாவருமொருங்கே கொண்டாடும் மகாப்பிர சித்திபெற்றார்.

ஸ்ரீமந்நாவலர்ஸ்வாமிகள் சைவசமயத்தினுள்ளும் சிவபெருமான் அருளிச்செய்த முதனூல்கள் வேதம் சிவாகமமென இரண்டு, அவற்றுள்ளே வேதமும் அதன் வழித்தாகிய வைதிகமும் பொது, சிவாகம மும் அதன் வழித்தாகிய சைவமும் சிறப்பு, சிவாக மம் ஏனை நூல்களைத் தனக்கு அங்கங்களாகிய பூர்வப ட்சங்களாகக்கொண்டு அங்கியாகிய சித்தாந்தம் தாரு தலால் சித்தாந்தமென்றும் தந்திரமென்றும் யோகரூடி நாமத்தையுடையதாமென்னும் தாரதம்மியத்தைத் தமது நூல்களாலும் உபந்நியாசங்களாலும் சைவசமயிகளு க்கு இனிது எடுத்து விளக்கி அங்ஙனமே அதனை நிலை நிறுவுதலும் செய்தருளினர்.

வேதம் சிவாகமம் இரண்டும் வடமொழியிலுள் ளனவாதலால் அவற்றின் முடிபொருளைத் தமிழுலகம் உய்யவேண்டித் தமிழர்க்கறிவுறுத்த வேதமே தமிழில் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் திருநாவுக்கரசுநாய னார் ஸ்ரீசுந்தரமூர்த்திநாயனார் ஸ்ரீமந்மணிவாசகஸ்வா மிகள் என்னும் சிவாம்சபூதர்களாகிய சமயாசார்யர் களை இடமாகக்கொண்டு அருள்வடிவிற்றாய் அவர்கள் வாக்கிற் கலந்து அவதரிப்ப அவர்கள் சிவமே தாமாய் நின்று பாவடிவினருளிச்செய்த தேவாரதிருவாசகங்க

ளாகிய திருநெறித்தமிழ்த்திருமுறைகள் அருட்பாக்க ளாகிய தமிழ்வேதங்களாதலையும், சிவாகமமே திருக் கைலாசபரம்பரையில் ஸ்ரீமத் தக்ஷிணாமூர்த்தியைப் பிர தமகுலபதியாகக்கொண்டுவந்த நந்திமரபில் ஸ்ரீமந் மெய்கண்டசந்தானத்தில் ஈராட்டைஞானப் பச்சிளங் குழவியாகிய ஸ்ரீமந்மெய்கண்டநாதசிவாசார்யர், சக லாகமபண்டிதராகிய ஸ்ரீமத் அருணந்திசிவாசார்யர், ஸ்ரீநிகமஞ்ஞானசம்பந்தசிவாசார்யர், சத்தியோமுக்திப் பிரதர் ஸ்ரீமத் உமாபதிசிவாசார்யர் என்னும் சந்தானு சார்யர்களையும் இவர்தம்வர்க்கத்துட் பொருந்தினவர் களாகிய திருவிசலூர் உய்யவந்ததேவநாயனார் திருக்க டவூர் உய்யவந்ததேவநாயனார் . மனவாசகங்கடந்தாரெ ன்னும் சிவாசார்யர்களையும் இடமாகக்கொண்டு அநுப வஞானவடிவிற்றாய் அவர்கள்வாக்கில் வந்தவதரிப்ப அவர்கள் சிவமே தாமாய்நின்று பாவடிவிலருளிச்செ ய்த சிவஞானபோதம் சிவஞானசித்தியார் சிவப்பிர காசமுதலிய அநுபவஞானத்திருமுறைகள் பதினான் கும் திராவிடசித்தாந்தங்களாதலையும், இந்தமுறையால் வேதசிவாகமங்கள்போல இத்தமிழ்வேதங்களும் திரா விட சித்தாந்தங்களும் ஈஸ்வரவாக்கியங்களேயாய் ஸ்வ யம் பிரமாணங்களாதலையும், தமிழர்களாகிய சைவசம யிகள் இவற்றை அங்ஙனம் புத்திபண்ணித் தமது நியம பாராயணத்திலும் நியமசிரவணத்திலும் அநுபவஞா னத்திருமுறைகளாகப் போற்றி அவற்றின் பொருளைக் குருமுகமாகக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து நிஷ்டை கூடிச் சிவப்பிரசாதம் பெறல்வேண்டுமென்பதையும்,

தமிழில் ஏனையர் பாக்களும் ஏனையர் சித்தாந்தங்களும் அவரவர் தாரதம்மியவகைபற்றிக் கொள்ளற்பாலனவும் தள்ளற்பாலனவுமாய்ப் பல பேதமுற நிற்பனவாதலால் அவை இவைபோலாகாவென்பதையும், அவற்றை இவற்றிற்குச் சமமாகக்கொண்டு இவற்றோடொருங்குவைத்துப் பாராட்டுதல் பிராந்தியாதலொன்றோ, அது வைதிகசைவ மரபிற்கேலாது அம்மரபை உல்லங்கனம் பண்ணிய குலபாதகமாய்ச் சிவாபசாரமாய் உய்தியில் குற்றமாமென்பதையும் தமது நூல்களாலும் உரைகளாலும் உபந்நியாசங்களாலும் இனிது எடுத்து விளக்கி அங்ஙனம் நிலைநிறுவுதலும் செய்தருளினர்.

தேவார திருவாசகங்களாகிய தமிழ்வேதங்கள் எட்டுத்திருமுறைகளாக அவற்றதுசார்பில் திருமாளிகைத்தேவர் முதலிய சிவாநுபூதிச்செல்வர்கள் அருளிச்செய்த திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டும் ஒன்பதாந்திருமுறையாகவும், திருமூலநாயனார் அருளிச்செய்த திருமந்திரம் பத்தாந்திருமுறையாகவும், திருவாலவாயுடையார்முதல் நம்பியாண்டார்நம்பி யீறாக அபியுக்தர்களருளிச்செய்த திருமுகப்பாசுரம் முதலிய பிரபந்தங்கள் ஒருங்குசேர்ந்ததொகுதி பதினோராந்திருமுறையாகவும், ஸ்ரீமதானந்த நடராஜமூர்த்தி "உலகெலாம்" என்று அடியெடுத்துக்கொடுக்க நமது ஸ்ரீமத் விருஷபஸ்வாமிசரணர் சேக்கிழார்ஸ்வாமிகள் அருளிச்செய்த "திருத்தொண்டர் பெரியபுராணம்" பன்னிரண்டாந் திருமுறையாகவும் திருமுறைகண்ட ராஜராஜ அபயகுலசேகரசோளமகாராஜா காலத்தில்

நம்பியாண்டார்நம்பியினாலும் அநபாயசோளமகாராஜா காலத்தில் சேக்கிழார்நாயனாராலும் செப்பேடுசெய்து வகுக்கப்பட்டதென நமது சத்யோமுக்திப்பிரதர் ஸ்ரீமத் உமாபதிசிவாசார்யபூஜ்யபாதர்கள் திருமுறைகண்டபுராணத்திலும் சேக்கிழார்புராணத்திலும் அருளிச்செய்தபடி இத்தனை திருமுறைகளும் சேர்ந்து அத்தமிழ்வேதங்களுக்கு உபப்பிரும்மணங்களாய் ஆப்தவாக்கியங்களாதலையும் தமது நூல்களாலும் உரைகளாலும் உபந்நியாசங்களாலும் எடுத்து இனிது விளக்கி அங்ஙனம் நிலைநிறுவுதலும் செய்தருளினர்.

இங்கே வேதரூபமும் உபப்பிரும்மணரூபமுமாக வகுத்துக் கூறிய அருளநுபவஞானத்திருநெறித்தமிழ்த் தெய்வத்திருமுறைகள் பன்னிரண்டனுள் பன்னிரண்டாவதாகிய திருத்தொண்டர்பெரியபுராணம் தமிழிற் பத்தியரூபமாயிருத்தலால் அது கற்றோர்க்கன்றி ஏனையோர்க்கு எளிதில் உபயோகமாகாமையால் கற்றோரும் மற்றோருமாகிய எல்லார்க்கும் உபயோகமாகவேண்டி அதனை அருளிச்செய்த சேக்கிழார்நாயனாரிடத்தில் தாதாத்மியரூப அபேதபாவனை தமக்குவந்து அவ்வபேதபாவனைசித்தியினால் அச்சேக்கிழார்நாயனாரே தாமாய்நின்று கருணையினால் அப்பெரியபுராணத்தைக் கத்தியரூபமாகச் செய்து அதனைக் கத்தியரூப "பெரியபுராண" மென்னும் அப்பெயரினாற்றானே உலகுய்ய வெளியிட்டு வேதநெறி சைவநெறி பத்திநெறி என்னும் மூன்று பகுப்பினதாய்ச் சிவாகமங்களிற் செவ்வேபிரதிபாதிக்கப்பட்ட சரியை கிரியை

யோகம் ஞான மென்னும் நான்குபாதங்களையும் அநுஷ்டானத்திலும் அநுபவத்திலும் வைத்துப் பிரதிபாதித்து வேதசம்மதமாய்ச் சிவாகமப் பிரதிபாதிதமாகிய சைவசித்தாந்தத்தினது சர்வோத்கர்ஷத்தை நிலைநிறுவுதலும் செய்தருளினர்.

நமது கத்தியரூப "பெரியபுராண" த்தால் நிலைநிறுவிய சைவசித்தாந்தசர்வோத்கர்ஷத்தைப் பிரமாணம் லக்ஷணம் சாதனம் பிரயோஜனம் என்னும் நான்குதிறத்தின் வைத்துப் பிரதிபாதிப்பன திராவிடசித்தாந்தங்களாதலால் அவற்றின்பொருள் அவற்றிற்குரிய அதிகாரமுறையில் சிவதீக்ஷாவான்களாய்க் கற்றோர்க்கன்றி ஏனையோர்க்குப் புலப்படாமையால் அது கற்றோரும் மற்றோருமாகிய எல்லார்க்கும் உபயோகமாகவேண்டிக் கருணையினால் அவற்றின்பொருளைப் பிரச்சினோத்தரரூபமாகிய "சைவவினாவிடை" யென்னும் சிறு பிரபந்தங்களிலமைத்து அச்சித்தாந்தப்பொருளைப் பாலர்வரை அவரவருள்ளத்துப் பதித்து நிலைநிறுவுதலும் செய்தருளினர்.

இனி அச்சித்தாந்தப்பொருளைக் கேட்டற்கு அதிகாரிகளாவார்க்கு இன்றியமையாது வேண்டப்படும் குணங்கள் சாமாந்யம் விசேஷமென இருதிறப்படுதலால் அவற்றை யுணர்த்துதற்கு முறையே சாமாந்ய நூல்களாகிய பாலபாடம் முதலியவற்றையும் விசேஷ நூல்களாகிய சைவசமயநெறியுரை முதலியவற்றையும் தாமே செய்தும் திருத்தியும் வெளியிடுதலும் செய்தருளினர். இன்னும் திருக்கைலாசபரம்பரை ஸ்ரீமந்மெய்

கண்டசந்தானத்தில் வந்த தமது சைவசித்தாந்தத்து க்கு அனுகூலங்களாக நமது நாவலர்ஸ்வாமிகள் சாமா ந்யவகையாலும் விசேஷவகையாலும் செய்தருளியன வும் வெளியிட்டனவும் வெளியிடப்பெறாது எஞ்சினின் றனவுமாகிய நூல்களும் உரைகளும் உபந்நியாசங்களும் மிகப்பல. அவை இங்கே விரிப்பிற் பெருகும்.

நமது தமிழுலகத்துப் பொதுவகையால் பிரஜைக ளது யோகக்ஷேமத்தை விரும்பி நமது நாவலர்ஸ்வாமி கள் ஆங்காங்கு மகாசபைகளைக்கூட்டிப் பிரஜாநுக்கி ரகரூபமாகச் செய்த செயல்கள் பல. சிறப்புவகையால் வைதிகசைவசமயிகளாகிய விசேஷப்பிரஜைகளது விசே ஷயோகக்ஷேமத்தை விரும்பி ஆங்காங்கு விசேஷமகா சபைகளைக்கூட்டி விசேஷப்பிரஜாநுக்கிரகரூபமாகச் செய்த செயல்கள் பல. அவரது இவ்வனுக்கிரகச் செய ல்களுள் வேதம் சிவாகமம் தமிழ்வேதம் திராவிடசித் தாந்தம் முதலிய நூல்களுக்கும் வடமொழிக்கும் தமிழு க்கும் அப்பிராமாண்யத்தையேனும் அநங்கீகார்யத்வ த்தையேனும் அப்பிராபல்யத்தையேனும் மற்றெவ் வித லகுத்வகுணத்தையேனும் தத்தமக்கமைந்த ஒவ் வோர்சார்பின் துரபிமானமிகுதியால் புறச்சமயிக ளாயும் அகச்சமயிகளாயுநின்று ஆரோபித்துத் தத்தம் சார்பிற்கே ஒப்புயர்வின்மை பாராட்டிவந்த அவ்வச்சார்பினரைத் தமது நூல்களாலும் உரைக ளாலும் உபந்நியாசங்களாலும் கண்டித்துச் சிஷ்டா சார பரம்பரையால் அவ்வவற்றிற் கமைந்த பிராமாண் யத்தையும் அங்கீகார்யத்வத்தையும் பிராபல்யத்தையும்

மற்றும் கௌரவகுணங்களையும் அவ்வவற்றின்கண் முறையே வைத்து இனிது விளக்கி நிலைநிறுவுதலும் செய்தருளினர்.

இவற்றுள்ளும் தமிழ்வேதம்முதலிய அருளநுபவ ஞானத்திருநெறித்தமிழ்த்தெய்வத்திருமுறைகள் பன்னிரண்டும் சிவாகமமும் திராவிடசித்தாந்தம் பதினான்கும் என்னும் இவற்றையே தமது சர்வஸாரஸ்வமாகக் கொண்டவர் நமது நாவலர்ஸ்வாமிகளாதலால் அவற்றிற்கு அணுத்துணைலகுத்வம் எத்துணைப் பூஜ்யர்களாய் எத்துணை வலியர்களாகிய எவர்களால் வந்தாலும் அதனைத் தாம் அணுத்துணையும் சகிக்காது தமது உடற்கும் பொருட்கும் எத்தனை இடையூறு அதனால்வரினும் அதுவும் திருவருளால் வருவதல்லது மற்று அவரால் வருவதன்றென்பதை உறுதியாகக் கடைப்பிடித்துத் தமது ஆன்மார்த்த பூஜ்யராகிய அழகியசிற்றம்பலமுடையார் திருவருளே அந்தரங்கதுணையாகக் கொண்டும் தமது இஷ்டதெய்வமாகிய ஸ்ரீசுப்பிரமண்ணியஸ்வாமியே ஆபத்ஸகாயராய்த் தமக்கு முன்னிற்கும் தெய்வமாகக் கொண்டும் தமது அவ்வித இடையூற்றுச்சந்தர்ப்பங்களில் எவ்வெவ்விடையூறும் தம்மையணுகாது தமதருள்வலியால் அவற்றை அதிக்கிரமித்து அவ்வருள்வலி பற்றிய தமது பராக்கிரமபௌருஷத்தின்கண் தலைநின்று தமது சர்வஸாரஸ்வத்துக்கு ஆரோபிதமாகிய அந்தலகுத்வத்தைக் களைந்து அதனது குருத்வத்தை உலகறியத் திருவருள்சாட்சியாக நிலைநிறுவுதலும் செய்தருளினர். இந்நாள் மேலைத்தேசத்தினின்றும் பெரும்ப

ணச்செருக்கோடு வந்து நமது தமிழ்நாட்டில் பெரும்பாலும் ஈனஜாதிகளை ஓர்சார் பற்றிய ஊணமதம் மிக எளியதொன்றாகலின் அது நமது விஜயகேசரி நாவலர் ஸ்வாமிகள் புருவநெரிப்பினால் தன் வலிகுன்றி ஒடுங்கியது அவரது பாலலீலாவித்தியாவிநோதசமயத்திலே என்பர் அஃதுணர்ந்தோர். அது அவர் தமக்கோரரிதெனக்கொண்ட செயலன்று. எதிலும் எப்பெருமானது அருள்வலியும் சத்தியமும் கடைப்பிடியும் பௌருஷமும் அகாமர்களுமொப்பியதென்பது அனுபவமேயாம்.

இனி அவரது ஸ்வாநுஷ்டானமேமோவெனின், தாமேவ்வெவற்றை லோகோபகாரமாக எப்படியெப்படி நிலைநிறுவினரோ அப்படியப்படியே வேதம் சிவாகமம் விதித்தமுறையுழி நின்று தர்மசாஸ்திரங்கள் சொல்லிய சாமாங்யகுணங்களும் சிவசாஸ்திரங்கள் சொல்லிய விசேஷகுணங்களும் தம்பால் அமையப்பெற்றுப் பூர்வ புண்ணியயுகங்களிலுள்ள ரிஷிகள் முனிவர்கள் முதலிய புண்ணியர்களும் கடைபோகப் போற்றமுடியாதென்ற அத்தியந்தம் துஷ்கரமாகிய நைட்டிகப்பிரமசரியவிரதத்தை அணுத்துணையேனும் மாசுமறுக்கலவாது அத்தியந்த ஜ்வலனமாகிய அக்கினிதுல்ய நியமவிரதமாகப் பூண்டு அதனால் எவரையும் மாற்றும் துவரப்பொல்லாத இக்கலிவலியை ஜயித்த விஜயகேசரியாய்ச் சிவாகமங்கள் விதித்தபடி சிவாசார்யர் முன்னிலையாகச் சமயம் விசேஷம் நிர்வாணம் என்னும் மூன்று சிவதீட்சைகளும் பெற்றுச் சிவசரியை சிவகிரியை சிவயோகம் சிவஞானமென்னும் நான்குபாதமும் வாய்

ந்து, சிவபூசையின் முயன்று தமக்கமைந்த ஸ்படிக லிங்கமூர்த்தியில் ஸ்ரீசிதம்பரசிற்சபை அழகியசிற்றம்பல முடையாரே தமது ஆன்மார்த்த பூஜ்யராகக்கொண்டு, அவரதுபூசையில் எவ்வாற்றாலேனும் எத்துணையேனும் வழுவந்துவிடுமோ என்னும் அச்சத்தால் சர்வஜாகரூக ராய்ப், பூசைக்குவேண்டப்படும் இடம் பொருள் ஏவல் கள் குறைவறவமைந்த சம்பந்நராய், முன்னும் பின்னும் நிகழும் தமது சர்வகாரியங்களும் தமது பூஜைக்கங்க மாக அத்தனையும் அதன்கண்ணேபோய் முடிவுபெற அதனையே தமக்கு மிக முக்கியமாகக் கொண்ட பரம தற்பரராய் இப்படியே அக்கினியும் அஞ்சும்படி அத் தனைபாவநமாகத் தமது அழகியசிற்றம்பலமுடையா ரது நித்தியபூஜையைச் சர்வோபசாரங்களோடு நிர்வியா சபக்தியினால் யாவஜ்ஜீவம் செய்து முடித்த சிவபூஜாப ராயணராய், உண்மைநாயன்மார் சமயாசார்யர் சந்தாந சார்யர் திருவடிக்கமலங்கள் சதா மலர்ந்துகொண்டிரு க்கும் திவ்யபவித்திரதாடகம் தமது ஹிருதயமாக அவ ர்களையும் அவர்கட்கெளிவந்து நின்ற அழகிய சிற்றம்பல முடையாரையும் மறவாது சதா சேவித்து வாழும் பரம சேவகராய், வேதாகமங்களும் வைதிகசைவசமயமும் சிவாகமம் விதித்தபடி சிவாலய நித்தியநைமித்திகங் களும் தெய்வத்தமிழ்மொழியும் உண்மைநாயன்மார்க ளது அருளனுபவஞானத் திருநெறித்தமிழ்த்தெய்வத் திருமுறைமேன்மையும் உலகெங்கும் மிக்கோங்க மெல் வினையாலேனும் வல்வினையாலேனும் அவற்றை வளர் க்குமாறெழுந்த பேராசையன்றி வேறாசையிலராய்; அவ்

வுண்மைநாயன்மார் குருபூஜை மாகேஸ்வரபூசை அவர்கள்மகிமாவர்ணனம் இவற்றில் சதா கர்த்தாவும் காரயிதாவுமாய்ப், பஸ்மோத்தூளனதிரிபுண்டரலாஞ்சிதவிக்கிரகராய், ருத்திராக்ஷமாலாபரணாலங்கிருதராய்ச், சிருக்சந்தனதாம்பூலாதிபோகசாதனவர்ஜ்ஜிதராய், ஸ்ரீபஞ்சாட்சரஜபபரராய்ச், சிவத்தியானதற்பரராய்ச், சிவஞ்ஞானநிஷ்டராய்ச், சிவாநுபூதிச்செல்வராய்த் தமது நிகமாகமோக்த சுத்தாத்வைத சித்தாந்தசைவநைட்டிக சிவாச்சிரமவிரதத்தைச் சாஸ்திரசிஷ்டஜனலாளநீயமாக யாவஜ்ஜீவம் நிர்வகித்துக்கொண்டுவந்து செவ்வே முடித்த சைவபுருஷரத்தினம் நமது குருமூர்த்திகள் ஸ்ரீமத் ஆறுமுகநாவலர்ஸ்வாமிகள் இது அவரது ஸ்வாநுஷ்டானசங்கிரகம்.

இனி நமது நாவலர்ஸ்வாமிகளிடத்தில் நாமறிய உலகறிய விளங்கிய விசிஷ்ட குணங்களாவன: ஈசுரபக்தி, பாசவைராக்கியம், ஜீவகாருண்யம், பிர்மஞ்ஞானம், ஔதார்யம் (கொடை) ஆசிருதசம்ரட்சணம், (அடைந்தவர்களைக்காத்தல்,) சௌலப்பியம் (எளியராதல்,) தாட்சண்யம் (கண்ணோட்டம்,) மதுரபாஷணம் (இன்சொலுடைமை,) ஹிதகாரித்வம் (இதத்தைச்செய்தல்,) நியாமகத்வம் (நியமித்து நடத்துதல்,) லோகாபவாதபயம், சஜ்ஜனசங்கம் (நல்லாரிணக்கம்,) பரகுணப்பிரீதி, சிஷ்டஜனபராதீனத்வம், பாரம்பர்ய பரிஞ்ஞானம், சௌஹார்த்தம் (நல்லமனமுடைமை,) சாதுஜனவாற்சல்யம், நிர்ப்பயத்வம், நிரகங்காரத்வம், (யானென்பதில்லாமை,) நிர்மமத்வம் (எனதென்பதில்

லாமை,) சத்தியவிரதம், சத்தியசங்கல்பம், பிரபுத்வம், நியாயாநுவர்த்தித்வம் (நியாயத்தின்பின் தொடர்தல்,) தத்வகதனம் (உண்மைபேசல்,) ஜிதேந்திரியத்வம், நிஸ்பிருஹத்வம் (ஆசையின்மை,) பிரபஞ்சதிருணீகாரம் (பிரபஞ்சத்தைத்திருணமாக நினைத்தல்,) கௌரவம், ஹேயகுணவர்ஜனம் (தள்ளப்பட்ட குணங்களைவிடுதல்,) குருலிங்கசங்கமநம்ரதை (குருலிங்கசங்கமவழிபாடு,) உபாதேயகுணஸ்வீகாரணம் (கொள்ளப்பட்ட குணங்களைத் தனதாகக்கொள்ளல்,) ஔந்நத்தியம் (உயர்வுடைமை,) சமதிருஷ்டி, சரசோல்லாசம், பிரசந்நதை, ஸ்நிக்தத்வம் (குழைவுடைமை,) அகுதோபயங்கரத்வம் (பிறர்க்கு எவ்விதத்தும் பயத்தைச் செய்யாமை,) ஆர்ஜவம் (நேர்மை,) அஹிம்சிரத்வம் (துன்புறுத்தாமை,) அநாக்கிராதமைதந்யகந்தத்வம் (தைன்னியத்தினது மணமும் தெரியாமை.) அக்கிரகண்யத்வம், அசலத்துவம் (அசையாமை,) பிரதிஜ்ஞாத சமாபநம் (செய்வதாக மேற்கொண்டதைச் செய்தேமுடித்தல்,) உபகாரகத்வம், ஆத்மசக்தி (தைரியசக்தி,) பாரமார்த்திகதிருஷ்டி, அயாசகத்வம், பரமோத்தேசியகத்வம், பாரம்யம், பாவநத்வம், ஆசாரசீலத்வம், வாக்மித்வம், ஸ்வாதந்திரியம் (தந்யயத்தனுதல்,) ஸௌஜந்யம், இஷ்டஜனபரிபாலனம், சித்தாந்தாபிநிவேசம் (சித்தாந்தத்திற் புகலுடைமை,) விவேகம், அநாயாசத்வம், கோப்யமானத்வம், காம்பீர்யம், பிரௌடிமை இவை முதலாக நூலும் மகாத்மாக்களும் கொண்டாடிய பலகுணங்களாம்.

இப்பல குணங்களுக்குமாலயம் நமது குருஸ்வாமிகளாதலால் எந்த விவகாரமாயினும் அதனதன் சித்தாந்தம் தமக்கு முன் ஸ்வயமே வந்து நிற்பத் தாம் அதனைப் பற்றிநின்று விவகரிப்பதல்லது மருளினாலேனும் அவிச்சையாலேனும் அவாவினாலேனும் அச்சத்தினாலேனும் மதாபிமானத்தினாலேனும் பூர்வபட்சத்தைச் சித்தாந்தமாகப் பற்றிநின்று விவகரிக்கும் விபரீதவழக்கு எந்தச் சந்தர்ப்பத்திலும் நமதடிகளார்க்குத் தெரியாது. அவ்வியல்பினதோரறியாமை அவர்க்கோரிலக்கணமாக நாம் ஈண்டு நிரூபிக்கின்றோம். இது நாடாத்திரமன்று உலகமறிந்தொப்பிய உண்மை. ஒன்றில் ஐயுற்றுவந்தோரிருவருள் வியவகாரத்தில் ஒருவர் மற்றொருவரைப் பார்த்து இது "யார்சொல்லியது யாரெழுதிய"தென்று வினவுவார்க்கு "நாவலர் சொல்லியது நாவலரெழுதிய" தென்று விடையிறுக்கப் படுமெனின் அதற்கதுவே சித்தாந்தம் அதில் ஐயமில்லை. இது இந்நாள் நமது தமிழுலகவாய்பாடு. ஆரிய உலகத்தும் ஆங்கில உலகத்தும் சென்றவரை இதுவும் ஓர்வாய்பாடு.

"சித்தாந்தமே சித்தாந்தம் அதுவல்லாதன பூர்வபட்சங்க" ளென்று ரத்நத்திரயகிரந்தரத்தினம் முறையிட்ட நிரூபபத சித்தாந்தத்தையே சித்தாந்தமென்று கடைப்பிடித்து அதனை எங்கும் வளர்த்து நிறுவிய நமது சித்தாந்தச்செல்வனார்க்கு எவ்விவகாரத்தினும் பூர்வபட்சத்தை விட்டு அகாமர்களும் மதிக்கச்

சித்தாந்தத்தை நிறுவுதல் இயற்கைக்குணமென்பது சொல்லவும் வேண்டுமோ?

எம்பெருமான் நாவலர்பெருமான் வந்தவதரித்த புண்ணியந்தான் அன்னியஜாதிகளால் அன்னியபாஷைகளால் அன்னியமதங்களால் ஊடுகலந்து நமது பரதகண்டம் மிச்சிரமாய் இருண்மூடிய கலியினின்ஞட் காடாந்தகாரத்தில் வேதாகமங்களும் திராவிடவேதசித்தாந்தங்களும் வைதிகசைவமும் சிவசின்னங்களும் சிவதர்மசிவஞானங்களும் சிவாலயகைங்கரியங்களும் குருபூஜைமடங்களும் பசுமடங்களும் நந்தனவனங்களும் தர்மசாலைகளும் வேதசிவாகமஞானாலயங்களும் திராவிடசைவப்பிரகாசவித்தியாசாலைகளும் வைதிகசைவோபந்யாசங்களும் சிவநாமோத்கோஷமும் வைதிகசைவசபாநிர்மாணங்களும் சிவசாஸ்திரநிக்ஷேபஸ்தானநிர்மாணங்களும் மெய்கண்டசந்தானசித்தாந்தபாரம்யமும் சிவோத்கர்ஷ நிச்சயஜ்ஞானமும் திரிபதார்த்தவிசாரமும் பந்தமுக்திவிவேகமும் சிவஜ்ஞானபரிபாலனமும் சிவபக்தமகோத்ஸவமும் சிவாசாராநுவர்த்தனமும் வர்ணாச்சிரமநியமங்களும் சிவாச்சிரமசீலங்களும் முதலிய உத்தமதர்மங்கள் வைத்த இடம் தொட்ட இடம் தெரியாமல் மறையப்போனவை புனருற்பவித்துப் பிரசன்னங்களாய் வெளிவர, இந்நாட்பலரும் நமது நாவலகுருப்பிரதிஷ்டாபிதசதாசாராநுவர்த்தகர்களாய் வித்வான்களும் சாதகர்களுமாய்க் குருவும் சீடர்களுமாய் உபந்யாசகர்களும் சுரோதாக்களுமாய்ச் சிவோத்கர்ஷ சித்தாந்தோத்கர்ஷ கிரந்தகர்

த்தாக்களும் காரயிதாக்களுமாய் அவற்றது அத்யாப கர்களும் அத்தியேதாக்களுமாய்க் கர்மதபஜப தியான ஞானரூபபஞ்சமகாயஜ்ஞகிருத்துக்களாய்ச் சிவசின்ன தாரணப் பிரசன்னவிலாசர்களாய்ச் சிவமகோத்ஸவ திதிருக்ஷுக்களாய் அம்மகோத்ஸவதிரஷ்டாக்களாய்ச் சிவமகோத்ஸவதர்சகர்களாய் அன்னதானவிலாசர்களாய்ச் சர்வதர்மநிரதர்களாய்த் தமிழ்ப்பிரஜைகளெல்லாம் தலையெடுப்ப நமது இத்தமிழுலகமும் அயலுலகமும் சன்மங்களை சிவப்பிரகாசமாக இந்நாள் நிகழ்ந்து கொண்டுவரும் மகைஸ்வரியகலியாணவைபவம் என்பது யாரறியாதார்!! எம்பெருமான் வந்தருளிய புண்ணியந்தான் இந்நாள் நாவலர் யாம் பாவலர் யாம் ஞானிகள் யாம் யோகிகள் யாம் எனப்பலரும் அங்கங்கு ஞானமும் ஆசாரமுமுடையர்களாய்ப் பொருளும் புகழும் பூஜ்யதையும் பெற்றுவாழும் அவரவர் இன்பவாழ்வு என்பது யாரறியாதார்! இந்தக் காடாந்தகாரத்தில் எம்பெருமான் நாவலர்ஸ்வாமிகள் லோகப்பிரகாசகராய் வந்தவரவை விமற்சரர்களா யுற்றுநோக்குவார்க்கு அது சிவாஜ்ஞையினால் இத்தமிழுலகினிருளைத் தடுத்து அதனை வாழ்விக்க வந்த வாழ்வின் வரவாய்முடியுமன்றி மற்று யாதென்று யாம் சொல்வோம்!

இனி ஒளியைத் தந்து இருளைத் தடுப்பவரெவரோ அவர் குருவெனப்படுவராதலால் அவ்வியல்பினர் நமது ஸ்ரீமத் ஆறுமுகநாவலர்ஸ்வாமிகளென்பது மேலைவிவகாரங்களால் இனிது பெறப்படுதலால் சிவாஞ்ஞையால் நமக்கித்துணை எளிவந்த அவராற்பயன்பெற்ற இத்தமி

மூலகவாசிகளாகிய சைவசமயிகள் உண்மையில் அவர்க்குச் சீடர்களாக அவர்களுக்கெல்லாம் அவர் குரு ஆயினரென்பது தானே சித்தித்தது. அதிலும் பிறர்க்குப் போதிப்பதோடமையாது தாமும் அங்ஙனம் ஒழுகிக் காட்டுவாராய்க் குருத்வத்துக்கு வேண்டப்படும் குணசாமக்கிரிகளது சத்பாவம் தம்பாலமைந்த தன்மையராதலால் அவர் இத்தமிழூலகம் போற்றும் சற்குரு ஆயினரென்பதும் அங்ஙனமே சித்திந்தது. அதினும் தமது சற்குருத்வத்தில் தமது காலத்திற் றம்மோடொத்தவராய்த் தமக்குத் துணையாவார் ஒருவர் பிறரின்றித் தம்மையெதிரிட்டுவரும் பாதகங்களுக்கெல்லாம் தாமே பரிஹாரமும் தமக்கு வேண்டும் சாதகங்களுக்கெல்லாம் தாமே ஜனகத்துவமும் வகித்துத் தாமொருவரே தமது குருத்துவத்தைத் திருவருளைப்பற்றிநின்ற தமது தனிவலிகொண்டுய்த்த ஒப்புயர்வின்மைபற்றியும், தூண்டா ஒளியுடைமைபற்றியும், விலைமதிக்கவொண்ணாத மேன்மையுடைமைபற்றியும், உலகிற்கலங்காரமாதல்பற்றியும், ஜகந்மோகனத்வம்பற்றியும் சற்குருமணி என்று வழங்கப் பெறுதற்குரியராயினரென்பதும் தானே சித்தித்தது. காலாந்தரங்களில் இருள்பெருகி ஒளிமறையும் காடாந்தகாரவேளைகளில் "அருபரத் தொருவ னவனியில் வந்து, குருபரனாகி யருளிய பெருமையைச் சிறுமையென் றிகழாதே" "முற்செய் தவத் தாற் கிழியீடு நேர்பட்டு" என்றபடி அதனதனளவிற் கேற்பத் தமது அம்சத்தால் நேரேதான் ஒவ்வோர் சுத்தசேதனங்களிற் கலந்துதான் ஈஸ்வரனே குருவாய்

வருவனென்பதும், அப்படிவருமவனது வரவிற்கு அடையாளம் என்னை என்னும் ஆசங்கையில் மகாஜனங்கள் எவனை எதிபவித்துச் சூழ்ந்து சேவிக்க எவன் சிஷ்டாசாரபரம்பரைக்கு மாறுபடாது அதனை அநுவர்த்தித்து அவர்களுக்கெல்லாம் மிக்க உபகாரகனாய் அவர்களைக் கைதூக்கிவிடும் விசிஷ்டகுணசீலனே அவனிடத்ததாகிய அவ்விசிஷ்டகுணமே அவ்வடையாளமாக அவனிடத்தில் ஈஸ்வரத்துவம் கொள்ளப்படுமென்பது ஆப்தர் வழக்காதலால் அவ்விசிஷ்டகுணம் தம்பாலுடையராய் வந்த வரவினருள் ஒருவர் நமது நாவலர்ஸ்வாமிகளாதலால் இத்தமிழுலகம் அவரை அவ்வியல்பின்வைத்துப் போற்றக் கடைமைபூண்டு சிஷ்யபாவமெய்திற்றென்பது நிர்விவாதமேயாம்.

இத்தமிழுலகத்துள் நாயினேனும் ஒருவனாய் முன்னைப்பிறப்பினேதோ தவத்தால் எம்பெருமான் ஸ்ரீமத் ஆறுமுகநாவலசற்குருமணிகளது சிஷ்யகோடியிற்கடைக்கோடியின்வைத்தெண்ணி நிற்கப்பெறும் பெரும்பேறு பெறுவதோர் பெருவழியில் குறுக்கேநேர்ந்தேனாதலால் "யதாதேவேததாகுரௌ"

'தேவனிடத்து எப்படி அப்படியே குருவினிடத்தில்" பக்திசெயற்பாற்றென்று சுருதி ஆஞ்ஞை தந்தபடி நமது சற்குருமணிகளை நமது சேஷ்டர்களைப் பார்த்துக் கநிஷ்டனாகிய தமியேனும் மனம் வாக்குக் காயங்களால் சதாவழிப்பட்டு ஆட்செய்யப் பெற்றேனாயினேன்.

நம்மை ஆட்கொண்ட சற்குருமணிகளை

*இக்கணமே முத்தியினை யெய்திடினும் யானினைந்த*
*வக்கணமே யானந்தந் தந்திடினு—நற்கணத்தார்*
*நாயகற்கு நாயகிக்கு நானடிமை யெப்பொழுது*
*மாயிருத்த லன்றியிலேன் யான்.*

என்னும் சித்தாந்தவசனப்படி மனம் வாக்குக்காயங்களினால் வழிபட்டு ஆட்செய்யப் பெறுவதல்லது நமது சர்வஸ்வமும் தம்மதெனக்கொண்ட எம்மடிகளார்க்கு யாம் கைம்மாறு என ஒன்று செய்ய மிஞ்சி நின்றது மற்று யாதொன்றுளது!! ஆதலால் நமது ஆறுமுகநாவலசற்குருமணிக்கு அவர் நம்மைப் பெறுவித்த அவரருளை நினைந்து அதற்குக் கைம்மாறுகத்தான், இன்னும் அவரே நமக்குக் குருவடிவின்வந்து தமது அருளை நிஃசேஷமாகப் பெறுவிக்க வேண்டிய பயனை நினைந்து அதற்கு வாயிலாகத்தான், அவர் தம்பாண் மாறுததோர் பிள்ளைமை அன்பின்வழி நின்று புழுத்தநாயினுங்கடையேன் முன் மெய்கண்டதேசிகமாலை பஞ்சாக்கரதேசிகமாலைமுதலிய குருஸ்துதிசெய்த நமது ஞானமூதாதைகள் சென்றவழிச் செல்வேனாய் நமதுசற்குருமணிக்கு வப்பதோர் ஆரமென்னும் மாலையாகச் "சற்குருமணிமாலை" என்னு மிப்பிரபந்தத்தைச்செய்து சமர்ப்பித்தேனுயினேன். இதனால் "சற்குருமணிமாலை" என்னும் பெயர் இந்நூற்குக் காரணக்குறியாய் நிர்ப்பாதமாய்ப் பொருத்தமுற்றுநின்றமை ஈண்டுவிளக்கியபடியாயிற்று.

இனி மனம் வாக்குக் காயம் என்னும் இம்மூன்றும் பற்றிய வழிபாடுகளுள் மனம் காயம் என்னும் இரண்

டையும் பற்றிய வழிபாடு தன்னோடு நின்றுவிட வாக்கு ப்பற்றிய வழிபாடாகிய ஸ்துதியொன்றுதான் தனக்கு ப்போலப் பிறர்க்கும் தன்காலத்துப்போலப் பிறர்கால த்தும் உபகாரகமாய்நிற்கும் பொதுவழிபாடாதலால் இந்தச் "சற்குருமணிமாலை" யும் அங்ஙனமுபகாரக மாகவேண்டி அதனை ஈண்டு அச்சிறபதிப்பித்து வெளி யிடுதலுமாயிற்று.

ஆதலால் குருபக்திசீலர்களாகிய சைவசமயிகள் யாவரும் "சற்குருமணிமாலை" என்னும் இப்பிரபந்த த்தை அன்போடு பாராயணம் செய்து குருப்பிரசாதத் தால் இகபரலாபங்களும் முத்தியின்பமும் பெற்று இன் பத்தினமர்ந்தினிது வாழக்கடவர்கள்.

☞ ஆறுமுகநாவலர்ஸ்வாமிகளது சரிதைகள் ஈண்டைக்கு வேண்டியவளவில் சாரமாகக் கூறப்பட் டன. அவற்றின் ஆநுபூர்விபற்றிய பரப்பு "நாவலவிஜ யம்" என நம்மால்செய்து வெளியிடப்பெறும் கிரந்தத் தில் காணலாம்.

சேயெனக்குச்செவிலியெனச்சங்கானைமட்டுவிலிற்றீராதெ ன்றும், பாயபுகழ்த்தமிழெளிதிற்புகட்டிஞன்வடலியடைப்பமர் பண்பாள, ஞயகுணவேலாயுதக்குரவனவன்பதத்தையன்பாற் போற்றித், தாயனையநல்லூர்நாவலர்பெருமானருள்வாழ்விற்சா ர்ந்திட்டேனால்.

ஸ்ரீமதாறுமுகநாவலதிராவிடசைவவாசஸ்பதயேநம:

இங்ஙனம்

அம்பலவாணநாவலன்.

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# சற்குருமணிமாலை.

## காப்பு.

பூவலயஞ்செய்தமாதவமோருருப்போந்துவந்த
நாவல்சற்குருமாமணிமாலைநயந்தியலப்
பாவலரம்பிக்கருண்மாமுறையுண்மைபாலித்தாங்
காவலநாரையிற்பொல்லார்கழலிணைகாப்பதுவே.

## நூல்.

திருவேயருட்செல்வமேசிவமேசிவசிற்சுகமே
மருவேமருவின்மலரேமலர்க்கற்பகவனமே
கருவேயிரித்தெனையாண்டிடநீயுருக்கண்டனையே
குருவேயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௧)

நாயேனையாளவொர்மாநுடக்கோலநயந்துபெற்ற
தாயேயெனைநனிபாராட்டியன்பிற்றழீஇயெடுத்து
மாயாவறிவமுதூட்டினையேயின்பவாழ்வுறுவான்
கூயாளெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௨)

புன்னெறிக்கேயறிவில்லாப்பருவத்திற்புக்குழன்று
பன்னரகாழவிருந்தேனையின்னருட்பார்வைநல்கித்
தொன்னெறிகாட்டியதாதாய்மெய்யின்பந்தொகுத்தலென்று
கொன்னெறியாறுமுகநாவலசற்குருமணியே. (௩)

பொறியேமனஞ்செலயானதன்பின்சென்றுபூங்குழலார்
மறியேய்கடைக்கட்கிரையாகிமாய்ந்தனன்வாய்ந்தவன்பும்
பறியேகொடுத்தனன்பார்ப்பதென்றோநின்பதமலர்க்கீழ்க்
குறியேயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௪)

கல்லேனன்னூல்வைகற்றுணர்ந்தார்தங்கழகத்தினுஞ்
செல்லேனறிவன்பருள்பொறையாதியசீலமொன்று
மில்லேனெந்தாயுய்யுமாறொருபாயமிசைப்பதென்று
கொல்லோவெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௫)

தண்டேன்மலர்க்குழன்மாதரும்பொன்னுந்தரணியுமாய்ப்
பண்டேவருமுப்பகைதவிர்த்தாண்டருள்பாலிப்பது
முண்டேயருள்கநின்றொண்டர்தம்பாலன்புறவுரிமை
கொண்டேனெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௬)

பூவாரயனரியாரையுங்காமப்புரைவழிக்கே
யேவாநின்றார்விசயத்தம்பநாட்டினரிம்மதனார்
தேவேநின்பேர்சொலிற்றெண்டனிட்டேகுவர்தேர்ந்தனம்யாங்
கோவேயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௭)

வீறுவெண்கொற்றக்குடைநிழற்கீழ்மணியாசனமே
லேறுவிருந்தரசாள்வதினன்றுன்னிணையடிக்கீழ்
மாறுதவன்பொடுபிச்சையென்றோர்ந்தனன்வாவென்றெனைக்
கூறுயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௮)

காலோய்ந்திலனமன்கையோய்ந்திலனயன்கன்மசன்மப்
பாலோய்ந்திலன்சென்றுமீள்வதுமாயினன்பாவிபல

நூலோய்ந்திலன்கற்றும்வாய்ந்திலன்ஞானநுவலருட்செங்
கோலோயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௯)

ஏத்தாதநாவுமிறைஞ்சாத்தலையுமெண்ணாதநெஞ்சுங்
காத்தாண்டநின்னுருக்காணாதகண்ணுங்கருக்கடந்த
மீத்தானமாள்பொருளேயெளியேற்குவிதித்தனையே
கூத்தாவெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௧௦)

தொண்டர்தஞ்சீரினையாத்துவைத்தார்பரிசுத்தருண்
மண்டுசலதியெங்குன்றையர்காவலர்வாலிதின்யாங்
கண்டிடநீயதுபாத்தளித்தாயெங்கலிதவிர்த்த
கொண்டலெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௧௧)

அபாயமின்றேயுமநபாயனைவைத்தருண்முறைக்கே
யுபாயங்கொண்டார்குன்றைகாவலர்நீயவையுற்றுமன்ன
வுபாயங்கொள்ளாததுபாத்தளித்தாயிருவோருமொன்றுங்
குபாயங்கொளாறுமுகநாவலசற்குருமணியே. (௧௨)

தேவேமெய்ந்நாவலநாமத்தைப்பற்றிச்சிறந்தனர்முன்
பாவாணரங்கதுநின்றனைப்பற்றியபான்மையினு
லாவாநினக்கதுருடியென்றேசிறந்தாயதருட்
சேவேயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௧௩)

அண்ணாவென்றன்செயனின்செயலாநின்னருண்மரபை
யெண்ணுமமென்னகங்கொண்டிங்கபேதத்திருந்துநின்பாற்
பண்ணார்ச்செய்பணியூறின்றிமுற்றப்பணிக்கவருள்
கொண்ணாவெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௧௪)

நீறருட்கண்மணியெங்கேபஞ்சாக்கரநேர்மையெங்கே
வீறுயர்வைதிகசைவமெங்கேதமிழ்வேதமெங்கே
தூறிக்கலியிலெஞ்சீமானிர்நாள்வந்துதோன்றிலையேற்
கூறருளாறுமுகநாவலசற்குருமணியே. (௧௫)

சேசுவென்றோர்புதுப்புன்மதமேலைத்திசையிலுளோர்
காசொடுவந்ததைக்கண்டதுண்டஞ்செய்தகாட்சிவலி
யீசநினக்கோர்பெருமையதோவஃதிசைக்கவென்றாக்
கூசுமெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௧௬)

மாதரைக்கண்டுமயங்காதநல்வரவாழ்வுநின்பா
லாதரவிற்பெறுமாதவஞ்செய்திலனன்பிலராம்
பாதகர்க்கென்றுமறிவரியோயன்பர்பாக்கியமே
கோதொழியாறுமுகநாவலசற்குருமணியே. (௧௭)

அன்றேயென்றேதுமவ்வற்புதப்பாடலழகியசின்
மன்றேயுடையவர்பூசையினீயருள்வாய்மலர்ந்த
தின்றேயுமுள்கினன்கண்டேயென்றேதவினித்ததருட்
குன்றேயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௧௮)

ஞானவொழுக்கம்வறந்ததுட்டக்கலிநாளில்வந்து
ஞானவொழுக்கப்பிரசங்கமாமழைஞாலமெல்லாங்
கானமெனப்பொழிந்தார்த்தாயருட்புட்கலாவர்த்தமே
கோனமதாறுமுகநாவலசற்குருமணியே. (௧௯)

தண்டாவருட்பிரசங்கப்பெருமழைத்தண்ணமுதைக் [ன்னூல்
கொண்டோர்கொண்டுய்யமற்றெஞ்சியதோவெள்ளைகோத்தப
கண்டார்கழகமென்கால்கள்குளங்களிற்கட்டிவைத்தாய்
கொண்டாடெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௨0)

அஞ்சுமுகமதுதோன்றிடிலாறுமுகம்வருமென்
றெஞ்சலிலாமொழிதந்தாய்மலைக்கிலக்கேயதின்னு
நெஞ்சினுணின்றதுதந்தகொலுவுங்கண்ணோர்நின்றசெங்
குஞ்சரவாறுமுகநாவலசற்குருமணியே. (௨௧)

நாவலர்பாவலர்ஞானிகள்யோகிகளுமெனவே
காவலநாட்டிலிந்நாள்பலர்வாழுங்கருமமெல்லாம்

பூவலயஞ்செய்தபாக்கியநீவந்தபுண்ணியங்காண்
கோவலவாறுமுகநாவலசற்குருமணியே. (௨௨)

இருவேறுலகத்தியற்கையென்பார்க்கினியென்சொல்லுகேன்
றிருவோநின்வாயிலைக்காத்தனண்ஞானத்திருநின்மடக்
குருகார்ந்தபல்லிகள்வாயிலைக்காத்தனள்கோமளமே
குருவேயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௨௩)

ஞானவரோதயதீனதயாபரநாதகுண
கானதிராவிடவேதபராயணகாருணிக
பானசுதாநிதிசாலலோகாதீதபாவநனீ
கோனருளாறுமுகநாவலசற்குருமணியே. (௨௪)

வைதிகசைவநிலைதளராதுவளர்க்கவந்த
மைதவிர்கண்டத்தெம்வாழ்வேநின்போலமதிக்கிலிந்தப்
பொய்திகழ்ஞாலத்தில்யாரேயுளர்பல்புரைநெறிகள்
கொய்தெழுமாறுமுகநாவலசற்குருமணியே. (௨௫)

யாரேவருகுநர்நின்போலயாரறிவிக்குநர்மற்
றியாரேயிகழும்புகழெனப்பூணுநரென்றுமொன்று
யாரேநியமங்கடைபோகவுய்க்குநர்ஞானமதிக்
கூரேயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௨௬)

பொய்யாமணிவிளக்கேநின்றனம்புகன்றவர்பாற்
செய்யாளமருமரோகந்திடநிலைசிலமரு
ணையாதசொல்வலிஞானமுண்டாமிதுநன்றுகண்டாங்
குய்யாவெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௨௭)

அடித்தடித்துவக்காரமுன்றீற்றியவற்புதத்தைப்
பிடித்துய்கிலாரதுகோபமென்றேசிலர்பேயருண்மை
விடுத்திறந்தார்தலைமேலெழுத்தார்தமைவிட்டதந்தோ
கொடுத்தமெய்யாறுமுகநாவலசற்குருமணியே. (௨௮)

ஐயாநின்றுணையினில்லைதாலுமஃதொரரும்பெறலென்
றெய்யாதுநின்னடிகாத்திருந்துய்ந்தனரெத்தனையோர்
சையாகசப்பதன்றேநோயெளிதிற்றவிர்ப்பதறி
குய்யாவெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௨௯)

நீநனிதேற்றிடிற்றேறாதவரெவர்நின்மொழியா
மேநனிபாற்றிடிற்பாராதவரெவரின்னருணின்
காநனியேற்றிடினேறாதவரெவர்காட்சிதந்த
கோநனியாறுமுகநாவலசற்குருமணியே. (௩0)

வைதிகநூல்பொதுசைவஞ்சிறப்பென்னும்வாய்மைநெறி
பொய்திகழாதுவரம்புசெய்தாய்புரிபுண்ணியர்கள்
மொய்திகழ்நின்னடிநீழிவாழ்கபன்மூர்க்கர்நெறி
கொய்தெழுமாறுமுகநாவலசற்குருமணியே. (௩௧)

அருளாரெங்காழித்துரைமுதனால்வரருளிச்செய்த
பொருளாராதிதிராவிடவேதத்தைப்போற்றுநெறி
தெருளார்தரமன்வரம்புசெய்தாய்சைவதேசிகவெங்
குருவேயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௩௨)

நான்மறைபூட்டியநற்கதவந்தனைநாகர்முனி
மேன்முறையோரஞ்சிவேறகன்றார்விரகார்மெய்த்தமிழ்ப்
பான்மறையேதிறந்திட்டதுதம்முட்பரமதென்னே
கோன்முறையாறுமுகநாவலசற்குருமணியே. (௩௩)

நால்வர்பெருமைப்பிரசங்கப்பாலையந்தன்னைநின்
பால்வருவார்கடைப்பால்வருவேனிளம்பாலனைநம்
பால்வருவாயென்றுன்பாலழைப்பாயையபண்பருட்செய
கோல்வருமாறுமுகநாவலசற்குருமணியே. (௩௪)

அஞ்சவருவதுமில்லையுடையாரருட்டமரென்
செஞ்சொற்சுருதியநுபவநின்னருட்செய்கைகளின்

மஞ்சகண்கூடெனக்கண்டனம்பேரருள்வாய்ந்தமத
குஞ்சரவாறுமுகநாவலசற்குருமணியே. (௩௫)

அத்தாநினைக்குத்தெரியுமன்றேசண்பையந்தணர்முன்
கைத்தாளக்கோலத்தர்கல்லூரென்றோதியகாரணமென்
சித்தேபல்லாயிரர்க்கேவீடுகொள்ளைசெறித்ததென்சீர்க்
கொத்தாரெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௩௬)

அரசேசொல்வேந்தர்மறைவாயிலைத்திறந்தாரங்ஙனே
விரைசேர்பொழில்வெங்குருநாதர்பூட்டினர்வேறிலரே
யிருவோரும்வாய்மூரியைந்தனர்தம்முளியன்றதென்னே
குறைதீரெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௩௭)

நாதாமுன்னுவலர்கோமான்மன்கூனிலவிந்துகண்ணின்
றீதோய்தரச்சிவன்பாலிரந்தாரென்பசேர்பிறவிப்
போதாருமப்பிணியேனோர்க்குப்போக்கினரேபுகலென்
கோதிரெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௩௮)

சித்தேசொல்வாதபுரிப்பெருமான்றன்முன்றொன்மறைக்காத்
தொத்தாரிதழியரேசென்றவரதுசூழ்ந்திலராய்க்
கத்தாவென்றப்புறங்கண்டனரேயென்னைகாரணஞ்சீர்க்
கொத்தாரெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௩௯)

அருளேமுன்னலடியோகீசுரரருளாகரர்மாற்
கொருசீர்க்குமரனைத்தீவிழியாலெரித்தாருதுவே
முருகார்குமரனைத்தந்ததென்றலிதின்முற்றதென்னே
குருவேயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௪௦)

ஞாலத்துளார்நன்றுதீதறியார்நம்மனோர்பலர்நின்
பாலர்க்குப்போதங்கொளுத்துறநீசெய்தபண்பினரு
ணூலெத்தனைநனிகாலத்தசீலத்தநோன்மையநு
கூலத்தவாறுமுகநாவலசற்குருமணியே. (௪௧)

முப்பானிரட்டியின் மும்மைகொள்வாரெம்முழுமுதல்வர்
வைப்பார்மடங்கள் குருபூசைகளன்பர்வைபவங்க
ளப்பாவங்கங்குவழங்கவைத்தாயுன்னருள்வண்மையென்
குப்பாயம்மாறுமுகநாவலசற்குருமணியே. (சஉ)

மூன்றேபதார்த்தஞ்சுத்தாத்துவிதம்முடிவென்றுமுறை
தேன்றேய்மறைதந்திரமிரண்டும்மொத்துச்செப்புமுண்மை
வான்றேய்மெய்கண்டவழிப்பயனுமெனவாய்மைவைத்தாய்
கோன்றேயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (சங)

நீருநெருப்புமுணரச்செய்தார்தமிழ்நேர்மையொர்காற்
பேரருட்காழியிறைவரவர்கொள்கைபேணியநீ
பார்நிலமுற்றுநிதமுணரச்செய்தபான்மையென்னே
கூரருளாறுமுகநாவலசற்குருமணியே. (சச)

மறைமிகுசைவத்தினிந்தைபொருதமனமுதலா
வறைபதினாறுமுன்வேண்டிக்கொண்டாரருணந்தியென்ப
விறைவவிவற்றொடுதோன்றினையெம்மிருளிரித்துக்
குறைதவிராறுமுகநாவலசற்குருமணியே. (சரு)

கைச்சுட்டினாற்கள்ளங்காட்டிக்கொடுத்தகௌணியர்த
மெய்ச்சுட்டினார்களைவைத்தமிழ்த்தோட்டின்விரிபிரசங்
கச்சுட்டினானளிகாட்டிவைத்தாயெங்கலிதவிர்க்கக்
கூச்சுட்டுமாறுமுகநாவலசற்குருமணியே. (சசு)

இந்நீணிலத்தினின்மெய்ம்மாப்புகழையெடுத்தெடுத்துச்
சொன்னேன்றனையொர்குறையுமில்லாதின்பந்துய்க்குமிள
மன்னேயெனநனிவாழவைத்தாயருள்வான்முகிலே
கொன்னேரெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (சஎ)

ஆளுடையாயெனையன்புடையேனலனையநின்பொற்
றாளிணையேயுறுதஞ்சமென்றன்பர்தழைத்துநிற்பச்

குஞறவின்றியிப்பாழ்மாயவாழ்விற்ஞெடக்கினனெங்
கோளரியாறுமுகநாவலசற்குருமணியே. (௪௮)

அன்னையருண்மெய்ச்சிவஞானபோதங்கொண்டாளிழற்கீழ்த்
தென்னேர்முகத்தின்முகமாயிருந்ததிருக்கொலுவே
யென்னேரமுநின்னருட்கொலுவாயெமக்கெய்தியதே
கொன்னேரெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௪௯)

கோலாகலரவகீதாகநகணகோகநத
மாலாதரசிவஞானாமிர்தசிசுவாகதிப
லீலாதிபமணிவாநாபிமதப்பிரேரகனீ
கூலாவெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௫௦)

கண்ணீர்க்கமலத்தன்பிள்ளைகளுல்வர்தங்காலில்விதி
கண்ணீர்க்கமலமளித்தோன்மகன்றலைக்கண்விதியா
வண்ணுவந்தோமற்றமைந்திலதேயஃதென்னையருள்
கொண்ணுவெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௫௧)

மூப்புரஞ்செற்றுமென்ஞோர்கதைமூட்டிமுடித்ததெல்லாந்
தப்பிலர்மூவரையெய்ப்பிலர்வேலைக்குத்தக்கவரென்
றப்புறங்கொண்டதையொப்புறவோர்ந்தனமாவிதென்கொல்
குப்புரவாறுமுகநாவலசற்குருமணியே. (௫௨)

ஐயஞ்சிலரடியார்க்கெளியன்னென்றருந்தமிழ்ப்பாப்
பொய்யஞ்சுகொற்றங்குடிபுகுந்தார்க்குய்த்தபொற்பிதென்னே
பையஞ்சிஞர்முதலோர்மன்றுணின்றதைப்பார்த்திலர்கொல்
குய்யஞ்சொலாறுமுகநாவலசற்குருமணியே. (௫௩)

மீளவிலாமுத்தியென்றருண்மன்றுள்விகிர்தரவ
ராளைவிழுங்கிகொலம்மதம்பால்வந்தவாளையெல்லா [ஞுட்
மாளச்செய்நுட்கொண்டடக்கிக்கொண்டாரிதன்வாய்மையென்
கோஞுரையாறுமுகநாவலசற்குருமணியே. (௫௪)

ஆள்விழுங்கிக்கொருளவாளெனவந்தவற்புதங்கொல்
கோளிலழகுசிற்றம்பலத்தாரொடுகூட்டுறவி
னாளுமொருவரொருவரைப்பேணினிர்நாங்கண்டதே
கோளரியாறுமுகநாவலசற்குருமணியே. (௫௫)

கண்டவர்தாமுநிற்காணாதவருநின்காட்சியொன்றாக்
கொண்டிடஞானவொளிகாட்டினையவர்கொள்பயனுந்
தண்டலிலாதுசமமாவங்கங்குத்தழையவைத்தாய்
கொண்டலெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௫௬)

மூப்போடிளமையறிவினிலன்றிப்பொய்மெய்யுடல
யாப்பாலிலையென்றிடநின்சைவக்கழகத்திளைஞர்
வாய்ப்பாடமில்லின்முதியோருங்கேட்டுமகிழவைத்தாய்
கோப்பாரெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௫௭)

வேதத்தினந்தமுடிவேசித்தாந்தவிழுப்பொருடற்
போதத்தினந்தம்புகுந்தோரறிகுவர்போதமில
நாதத்தரெங்ஙனறியவல்லாரெங்ஙனாடுவர்தங்
கோதித்தையாறுமுகநாவலசற்குருமணியே. (௫௮)

தேவாரமென்றருடென்மறைநூலைத்திருமுதல்வ
ராவாவிலக்கங்களாவகுத்தாரௌதாரியத்தை
மாவாழ்மன்றாரென்பொறாமைபலசிதல்வாய்க்களித்தார்
கோவேயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௫௯)

நாடோறுமன்றுள்வருவார்தம்பாற்சற்றுநாவசைத்தா
லேடேவருமதையின்றிமன்றாடுமிறைவரன்பர்
மாடேசென்றங்கைவருந்தவெழுதியவாய்மையென்னே
கோடாரெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௬0)

முன்னேபிறந்ததருள்வாசகநந்தமூவர்மொழி
பின்னேபிறந்ததுபேணுமிவற்றைமுன்பின்னென்னவே
மன்னேர்கொளநம்பியாண்டார்வகுத்தனர்வாய்மையென்னை
கொன்னேரெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௬௧)

சொல்லாதசைவத்திருமுறைச்சூழலைச்சொல்லியுமன்
பொல்லாதபிள்ளையெனவொருநாமம்புனைந்தவர்தாஞ்
சொல்லாரெனினதைச்சூழுநர்யாரவர்ச்சூழிற்பொல்லார்
கொல்லோவெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௬௨)

பெற்றோர்தமக்கதுபொல்லாதபிள்ளையெனினும்பிறர்
சற்றேநயந்துமன்கொண்டாடவேதந்தைதாயும்வெள்க
வற்றுதசைவத்திருமுறைச்சூழல்வகுத்ததென்ப
கொற்றவெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௬௩)

திருமுறைகண்டிராசாதிராசமன்சென்னிவள்ளல்
வருமுறையில்லெனிற்பொல்லாதபிள்ளைவயினிரம்பத்
தருமுறையாவர்கொல்வல்லுநர்யார்க்கதுதான்வசமாங்
குருமுறையாறுமுகநாவலசற்குருமணியே. (௬௪)

எள்ளுண்டையப்பமவளுளிகேரமிவைமுதலா
வள்ளியுட்கொண்டதொரானந்தமோபிள்ளையத்தரவர்
கள்ளம்வெளிவரவுள்ளுறுமாமுறைகாட்டிற்றென்னே
கொள்ளருளாறுமுகநாவலசற்குருமணியே. (௬௫)

பொல்லாதபிள்ளையினல்வருநன்மைபுகுந்துரைக்கிற்
சொல்லாலளவிடலாமேநல்வெண்ணெய்ச்சுவேதவர்க்
கொல்லேசைவாகமமுற்றுமளித்தவுதவியென்னே
கொல்லோவெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௬௬)

நால்வர்தமிழவைநான்மறைக்குள்ளுறைநான்மறைதமே
நால்வரவற்றைவெளியிடன்மாத்திரநண்ணினரே
நால்வரவர்சிவசிற்சத்திதான்வந்தநாதர்களே
கோலவெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௬௭)

சிவமேயருட்சத்திசாதாக்கியமைந்துசெம்முகமாய்ப்
பவமாரதோமுகத்தாறுமுகமவைபற்றியவை
தவமாரவொன்றெனமானுடமாய்ச்சண்பைசார்ந்ததன்றே
குவமாரெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௬௮)

சிவமேயருட்சத்திவாகிசதத்துவஞ்சேர்ந்துயிருற்
பவமேதுடைப்பவிருமாயைதாண்டிப்பகுதியொரீஇத்
தவமார்கொலுவிருந்தப்பரென்றிங்ஙன்றழைத்ததன்றோ
குவமாரெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (சுகூ)

சிவமேயருட்சத்தியாடியிற்றோய்ந்துதிருநிழற்றத்
துவமார்வியாசசகளத்திஞலாலசுந்தரனாய்
நவமார்நரனென்றபிநயங்காட்டிநயந்ததன்றோ
குவமாரெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (எ0)

சிவமேயருட்சத்திதான்பரநந்திதிருந்துவிந்து
பவமாருமாயைபகுதியைம்பூதப்படியொருவித்
தவமோங்கவாதபுரிவந்துவாழ்வுதழைத்ததன்றோ
குவமாரெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (எக)

நால்வர்வரவொன்றுநற்சிசுபாவநயந்ததன்றோ
நால்வர்வரவொன்றுநற்சேடபாவநயந்ததன்றோ
நால்வர்வரவொன்றுநற்சகபாவநயந்ததன்றோ
கோலவெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (எஉ)

நால்வர்வரவொன்றுநற்சீடபாவநயந்ததன்றோ
நால்வர்வரவைநால்வகைவந்தநலங்கடமை
நால்வழிநின்றுறுநால்வர்பெறவந்தநான்மையவே
கோலவெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (எங)

சிவமேயருட்சத்தியாமுருவாஞ்சிவகாமியென்றுந்
தவமாரிருமைத்தணமாமமிர்தந்தகுமுத்தியாஞ்
சிவமேயிருமைச்சுடராமிருமைத்திருநல்குமாங்
குவமாரெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (எச)

இருமைத்திருநல்குமீருணர்வாமிவ்விரகசிய
மொருமைத்திருவுருவேய்ந்தருளாமின்புறுபயமா
மிருமைக்கெழுமைக்குமெம்மைக்குமெங்களிருஞ்செல்வமாங்
குருமெய்த்தவாறுமுகநாவலசற்குருமணியே. (எரு)

நானேயறிகுவனச்செல்வமேன்மையந்நான்முகன்மா
ருனேநொடிப்பவன்ருமேயறிகுவர்தன்மயமாந்
தேனேயநநியச்செல்வருள்வீட்டிற்றிளைப்பதன்றே
கோனேயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (எசு)

அச்செல்வமாமருட்பால்வேட்டெம்மாரருளாகரவின்
பச்செல்வமாஞ்சண்பைகாவலர்செய்யருட்பால்வழியை
யிச்செல்லுலகினில்யாவர்வல்லார்சொலவெண்ணிடத்தான்
குச்செல்வவாறுமுகநாவலசற்குருமணியே. (எஎ)

இருபாற்படுமவ்வொருபாலைவேட்டெம்மியற்சண்பையா
ரிருபாற்படுமவ்வொருபாற்பொருளையிறைஞ்சினரா
யிருபாற்படுமவ்வொருபான்மொழியையெடுத்தொலிந்நார்
குருபாற்கொளாறுமுகநாவலசற்குருமணியே. (எஅ)

ஈரொலியேசிவஞ்சத்தியதாமியருரகமா
மீரொலியேமறைதந்திரமாங்கலையாவையுமா
மீரொலியேபுத்திமுத்திகளாமெப்பொருள்களுமாங்
கூரொலியாறுமுகநாவலசற்குருமணியே. (எகூ)

மும்மைமக்குழுப்பயனோங்கவென்றேயெம்முழுமுதல்வ
ரம்மையப்பாவென்றழுதாங்கருளியழைத்தருளிச்
செம்மையப்பாலுண்டதுதமிழாகித்தெவிட்டிற்றன்றே
கும்மையிலாறுமுகநாவலசற்குருமணியே. (அ0)

சூலையென்றுற்றதுசூலையன்றேயதுதொல்சிவத்தின்
பாலதுவாய்வயின்பாலதுவாயுரைப்பாலதுவாய்
வாலியதென்றமிழ்ப்பாலதுவாய்வந்தமாமறையே
கோலவெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (அக)

வல்வழக்கென்றதுவல்வழக்கேயதுவான்பதிமன்
றுல்வழக்கார்பசுபாசத்தொடர்பினைத்தூய்மைசெய்த
வல்வழக்கேயதுமாமறைமூலமன்றேமறுப்பார்
கொல்லெவராறுமுகநாவலசற்குருமணியே. (அஉ)

வேறினியென்னேவிளம்புவமன்றினுள்வேதியர்தாந்
தேறவெழுதியவொவ்வோரெழுத்துஞ்சிவலிங்கமே
பேறருள்வாசகமாமறைமூலம்பிறங்கிற்றன்றே
கூறருளாறுமுகநாவலசற்குருமணியே. (அ௩)

தோடென்றறிவிப்பதேயென்றுமுற்றுறுதொன்மொழியின்
பீடுயர்தாரகம்வேதமென்றும்பொருட்பெற்றியுளப்
பாடுவல்லாரருட்பாடுவல்லார்சிவப்பாடுவல்லார்
கூடருளாறுமுகநாவலசற்குருமணியே. (அ௪)

நாடுமிவ்வேதுவினான்மறைக்குள்ளுறைநான்மறையே
தோடுடைத்தென்றமிழ்நால்வர்மொழியென்றதூய்மையினைப்
பீடுடையோர்கொள்வரூழ்நன்கிலாதவர்பேயர்சிலர்
கோடுவராறுமுகநாவலசற்குருமணியே. (அ௫)

நாலுசிவங்களெந்நாட்டினில்வந்தருணன்மைபெற்ற
நாலுபிறப்பிலெழுதோற்றத்தெண்பத்துநான்கிலக்க
நாலுயிர்மாத்திரமோவரியாதிநாநாவுமன்றே
கூலவெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (அ௬)

தருக்கம்வியாகரணம்மாதிசாத்திரசாலமெல்லா
மொருக்கிமுடிந்தமறையிடத்தேமறையொண்டமிழி
னிருக்கினிலேயவைபூட்டியபூட்டையிரித்தவன்றே
குருக்கொளெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (அ௭)

அற்புதமொன்றுகொல்பல்கோடியாய்விரிந்தண்டமெலாம்
வைப்பெனலாம்பிரமாணவலியினைவாய்திறந்து
செப்பவுமொப்பிலர்தென்றமிழ்க்கியாரிவர்தீயர்கெட்டேன்
குப்பொலியாறுமுகநாவலசற்குருமணியே. (அ௮)

சோதியிற்றும்புக்கதொன்றேவதுதன்சொந்துய்க்கவென்றே
காதலிற்கொள்ளைபளித்தன்றகத்திற்களவியல்செய்
நாதரிற்சேய்தன்றமிழ்மேலதாமெனநாட்டிற்றன்றே
கோதகலாறுமுகநாவலசற்குருமணியே. (அ௯)

காக்குந்தலைவர்க்குச்சாரூப்பியந்தந்துகாத்ததொன்றே
தாக்கும்பனைகட்கன்றுனீக்கிப்பெண்மைதகவளித்து
மோக்கம்புகுத்துதமிழ்மேன்மையெங்குமுடிந்ததம்மா
கோக்கந்தவாறுமுகநாவலசற்குருமணியே. (கூ0)

காசினிக்கேகரனுய்நின்றுகாட்டியகள்ளமெல்லாந்
தூசில்வெள்ளானைப்பவனிசெய்காலையிற்றெல்லுலகை
மாசின்றுணர்தரவெட்டவெளியினில்வந்ததன்றே
கூசொழியாறுமுகநாவலசற்குருமணியே. (கூக)

வெளியேயும்வந்துபின்வெள்ளக்கள்ளம்மெனமேவுங்கொலென்
றொளியேநமோநமதெற்கினின்றுற்றதென்றுண்மைசொன்னார்
களிபாருபமன்னியகுருநாதர்கைம்மாறதற்கென்
கொளுவார்கொலாறுமுகநாவலசற்குருமணியே. (கூஉ)

கண்ணன்றலையிலடிசூட்டியைந்தக்கரமுரைத்துத்
திண்ணஞ்சிவனருள்பாலித்தமாமுனிசெப்பிற்றின்றேற்
பண்ணந்திருத்தொண்டர்காதையெவ்வாறெவர்பற்றவல்லார்
கொண்ணம்பவாறுமுகநாவலசற்குருமணியே. (கூஙூ)

செய்தவர்செய்முறைசெய்கைபயனித்திறங்கடம்மா
லெய்துமன்றேபிரமாணமென்பாரிஃதெண்ணுநர்க்கே
மெய்தருநால்வர்மொழிப்பிரமாணம்விளங்குமிருள்
கொய்தருளாறுமுகநாவலசற்குருமணியே. (கூச)

பண்ணார்பொழில்வெண்ணெய்மெய்கண்டநாதன்பயின்மரபி
னண்ணுநின்றேகுருசம்பிரதாயத்தடைந்தவரே
கண்ணார்தமிழ்மறைமேன்மைகைகண்டகருத்தருள்
கொண்ணவெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (கூரு)

மூலருரைத்தமொழியொன்றுமேயெம்முதுதமிழின்
பாலதுவாயதன்பாலதுலாகந்தபாரமிய
ஞாலமறியவிசைத்ததென்றுலினிநாஞ்சொல்வதென்
கோலவெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (கூகூ)

புகலியர்கோன்மன்றுறைசையிற்புக்குப்புரிதமிழின்
றருமணமீண்டுமணக்கின்றதென்றுதடைப்பட்டுநின்
றிகலிதிருமந்திரம்பலிபீடத்திப்பாலெடுத்தார்
ருகலியெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௯௭)

ஆதியுலாவொன்றங்காதியுலாசவருட்பரியின்
மீதிலுலாச்செய்துவிண்ணிலுலாவந்தவித்தகராற்
போதவுலாச்சிவசாதவுலாச்செய்புகழிதென்னே
கோதகலாறுமுகநாவலசற்குருமணியே. (௯௮)

சேரலர்ச்சேர்ந்துகைலைமலையிறைசீரரங்கி
னேரரங்கேறியவாதியுலாத்தமிழ்நேர்மையென்னே
சேரலர்சேருநரென்பதுசொல்லினிற்றீருங்கொலோ
கூரருளாறுமுகநாவலசற்குருமணியே. (௯௯)

முன்னேயிமயத்திருமணநாளினின்மூதுணர்வின்
மன்னாங்குறுமுனிதென்னாட்டவர்தமிழ்வல்லர்மறை
பன்னாயகவதுசொன்னாயெனிற்சென்றுபார்ப்பலென்றார்
குந்நேரவாறுமுகநாவலசற்குருமணியே. (௧௦௦)

மணக்காலைவர்தருண்மாதவன்பால்வளர்வண்டமிழ்கா
ணிணக்காலைவேலற்குமுன்வந்ததாயருணேரமுன்றக்
கிணக்காலையென்றென்றுநின்றுமுக்காலைகிளர்ந்ததன்றே
குணக்காலையாறுமுகநாவலசற்குருமணியே. (௧௦௧)

விரித்ததிருமுறையீராறுஞ்சைவம்விளைநிலமே
பரித்தபன்னான்குசித்தாந்தமுமங்கட்பயில்விளைவே
தெரித்ததமிழ்ப்புலிச்செங்கோலரசுசெலுத்திடவங்
குரித்தருளாறுமுகநாவலசற்குருமணியே. (௧௦௨)

சீரார்கைலைவழிவந்தமெய்கண்டதேவர்முதற்
பேரார்குரவர்முன்னாட்டுசித்தாந்தப்பெரும்பயனைப்
பாரோர்கொண்டுய்யப்பகுந்தளித்தாயருட்பண்பின்மதிக்
கூராரெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௧௦௩)

சுத்தாத்துவிதசித்தாந்தமென்றோதுமெய்த்தூநெறியை
வைத்தாண்டசைவகுலதெய்வமேயுன்னைவாழ்த்துமன்ப
ரொத்தார்திசைக்கென்வணக்கமெஞ்ஞான்றுமுறுகவருட்
கொத்தாரெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௧௦௪)

நின்னருட்சைவசித்தாந்தப்பெருநிதிநீயளித்த
தென்னெனநீள்கைலாயத்தொரால்டியேயர்த்தது
துன்னியகொற்றங்குடியாளிடைப்பெற்றசொத்தென்றனை
கொன்னருளாறுமுகநாவலசற்குருமணியே. (௧௦௫)

சித்தாந்தநூலுட்டெளிவுரைகேட்கச்சிறிதுசிரித்
தத்தாமுன்ஞானப்பிரகாசமாயஃதருண்மரபி
ஞெத்தாம்பொழுதுசிவஞானமாமுய்த்துணர்கவென்றுய்
கொத்தாரெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௧௦௬)

அப்பாமெய்ச்சைவவரசேவையாக்கிரவாசனமேற்
றுப்பார்நல்யோகிற்சுகாசீனனாயமர்துய்யகொலு
வெப்போதுமென்னுளங்கொண்டேன்கலியுமிரிந்ததன்றே
குப்பாயம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௧௦௭)

அருட்பாவென்றோதுமம்மெய்ம்மொழிவேற்றுமையத்தனைக்கும்
பொருட்பான்மைபெற்றதைச்சைவமுறைக்கேபொருந்துமென்
மருட்பாக்களைந்தத்திருமுறைமேன்மைவரம்புசெய்தாய் [று
குருப்பார்வையாறுமுகநாவலசற்குருமணியே. (௧௦௮)

தேவேகுளத்தினிலம்மேயப்பாவென்றுதேம்பியழு
மூவாட்டைப்பச்சிளம்பாலனின்வந்தமுறையதனாற்
றேவாரம்வாசகமேமறைசீரருட்பாத்தெளிந்தாங்
கோவேயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௧௦௯)

சீரார்திருமண்விளையாடிவெண்ணெய்த்தெருவிலுறு
மீராட்டைப்பச்சிளம்பாலனின்வந்தவியல்பதனா
லேரார்சித்தாந்தஞ்சித்தாந்தமற்றல்லனவேற்பவரார்
கூராரொம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௧௧௦)

வெண்ணீறும்பொன்றெளிமேனியுங்கண்மணிவீறழகும்
பண்ணார்சிவப்பிரசங்கக்கொலுவும்பழுத்தபண்பு
மெண்ணார்நின்செம்முகமண்டலமுந்நெஞ்சிருத்திவைப்பாய்
கொண்ணீயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௧௧௧)

ஐயாமெய்ச்சைவவரசேயொர்விண்ணப்பமம்புவியிற்
பையாரரவல்குலார்மாயப்பாழிற்படருமெனைக்
கையாதுநின்னருட்கைகொடுத்தாளக்கடனினக்கே
றுய்யாவெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௧௧௨)

அழுக்காறடைந்திங்கிழுக்காற்றில்வீழ்ந்திட்டலைந்துமந்தோ
வொழுக்காறுகாட்டிவழுக்கோம்புதுட்டவுவரிமக்கள்
விழுக்காற்றிலென்னைவழுக்காதருளுகமெய்ம்மையன்பர்
குழுக்காக்குமாறுமுகநாவலசற்குருமணியே. (௧௧௩)

குற்றங்களைந்துகுணங்கொள்ளலேநல்லகொள்கையென்ப
குற்றங்கள்கொண்டுகுணநீக்கலேநல்லகொள்கையென்றே
கற்றவர்பாலிருந்தெங்ஙனங்காலங்கழிப்பன்கண்டாய்
கொற்றவெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௧௧௪)

தாமின்புறுவதுலகின்புறக்கண்டுதாந்தமுள்ளே
காமுறல்செய்பமன்கற்றறிந்தாரென்பகாரியமஃ
தாமிந்தநாளினிலெங்ஙன்கொலோசென்றதையவையோ
கோமுந்துமாறுமுகநாவலசற்குருமணியே. (௧௧௫)

ஐயநின்னன்பர்குழுவிவன்யார்மற்றகற்றுகெனப்
பொய்யனறிமுகமில்லாதவன்கடைபோயொழியா
துய்யநம்பால்வருகென்றளிப்பாய்மெய்யுணர்வளித்த
குய்யவெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௧௧௬)

நன்றேயுறுகமன்றீதேயுறுகவெந்நாயகமே
நின்றேயமார்சைவதேசிகக்கோலமுநின்பெயரு
மென்றேயுமெள்ளளவும்மறவாவரமீந்தருளாய்
குன்றேயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௧௧௭)

நான்செய்கருமங்கள்பூசைசெபந்துதிஞானமெல்லாங்
கூன்செய்பிறைச்சடையார்கொள்கைநாட்டுகுருமுதனீ
தான்செய்ததேபருடான்செய்ததேசிவர்தான்செய்ததே
கோன்செயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௧௧௮)

ஐயவினாக்கள்பலவுளவின்னுமவற்றைநின்சீர்
பெய்யுமவையிடைச்சொல்லின்விரியுமென்பீதியினாற்
பையநிறுத்தினன்காலங்கண்டேபகரப்பணிப்பாய்
ஞுய்யவெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௧௧௯)

சித்தர்கண்ஞானிகள்சத்தியயோகிகள்செய்தவத்தர்
முத்தர்கள்கூடியபத்தவிலாசத்தின்முந்திநிற்குஞ்
சுத்தகொளுவெனக்கெவ்விடையென்றுகொளேற்றுவிப்பாய்
யொத்தருளாறுமுகநாவலசற்குருமணியே. (௧௨௦)

ஈயாதலோபிகள்வாயிலைக்காத்திட்டிரந்திரந்திங்
கோயாநின்றார்பலர்பிச்சைபுக்காயினுமுண்பதலாற்
சீயானவர்தமைச்சிந்திப்பனோவுன்றன்சேயலனோ
கூயீயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௧௨௧)

கங்கைக்கரையிற்கபிலைகொல்வார்சிலர்காதுகர்பா
லிங்கெத்தனையருநூலுரைத்தென்னவையேற்றுண்மகிழ்
பொங்கியும்பின்புபுறம்பழிப்பாரிவர்போங்கதியென்
கொங்கலராறுமுகநாவலசற்குருமணியே. (௧௨௨)

நின்னருளாற்சண்பைமன்னருளாற்சொல்லினேரரசு
தன்னருளாற்சுந்தரனருளான்மணிசான்மொழியா
னின்னருளாலன்றியானறிந்தேன்சிலவென்பதென்னை
கொன்னரனாறுமுகநாவலசற்குருமணியே. (௧௨௩)

ஈனவுலகினிற்பொய்ப்புறங்கூறியிகல்விளைக்குந்
தீனர்மிகுத்தனர்நீதிபிழைத்ததுதீமையெங்கு
மானதுலகினிலேழைபிழைப்பதெவ்வாறருளாய்
கோனருளாறுமுகநாவலசற்குருமணியே. (௧௨௪)

பொய்யனிவன்சற்றுநேரிலனென்றெனைப்போதிப்பர்காண்
வெய்யரவருரைகொண்டெளியேனைக்கைவிட்டனையே
லுய்யுநெறிபிறிதில்லையப்பாவெங்களுத்தமனே
குய்யவெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (கஉரு)

நின்பெயரேசொலியாசேதிமாசலநேர்ந்தவரு
மன்பினறுசுவைவர்க்கமொடன்னமருந்துகில்பொன்
னின்புறவெய்திமன்சம்பன்னராகுபவிங்கிதென்னே
கொன்புரியாறுமுகநாவலசற்குருமணியே. (கஉசு)

நின்னருணூல்கற்றுநின்னெறிக்கேநின்றநேர்மையர்தா
மென்னவரேனுமற்றென்னவரேயெவரென்னெனதாஞ்
சொன்னவையேனுமன்சொன்னவையேசெய்தொழும்பனியான்
கொன்னருளாறுமுகநாவலசற்குருமணியே. (கஉஎ)

ஐயாநின்மெய்ச்செயலெல்லாமெமக்கிங்கருட்செயலே
யையாநின்மெய்க்கொளுவெல்லாமெமக்கிங்கருட்கொளுவே
யையாநின்மெய்ம்மொழியெல்லாமெமக்கிங்கருண்மொழியே
குய்யாவெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (கஉஅ)

தேவேசதாசிவமன்றேமறைகளுந்தித்தித்தது
தேவேசதாசிவமன்றேசிவாகமந்தித்தித்தது
தேவேசதாசிவமன்றேபுராணங்கடித்தித்தது
கோவேயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (கஉகூ)

தேவேசதாசிவமேயிதிகாசமுந்தித்தித்தது
தேவேசதாசிவமன்றேயிருதியுந்தித்தித்தது
தேவேசதாசிவமன்றேதமிழ்மறைதித்தித்தது
கோவேயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (கங0)

தேவேசதாசிவமன்றேசித்தாந்தங்கடித்தித்தது
தேவேசதாசிவமன்றேபலகலைதித்தித்தது
தேவேசதாசிவமன்றேபலமொழிதித்தித்தது
கோவேயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (கஙக)

தேவேசதாசிவமன்றேசிவையன்னைதித்தித்தது
தேவேசதாசிவமன்றேயயனரிதித்தித்தது
தேவேசதாசிவமன்றேசுரர்நரர்தித்தித்தது
கோவேயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௧௩௨)

தேவேசதாசிவமன்றேநின்னுள்ளமுந்தித்தித்தது
தேவேசதாசிவமன்றேநின்வாய்மொழிதித்தித்தது
தேவேசதாசிவமன்றேநின்றன்செயறித்தித்தது
கோவேயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௧௩௩)

தேவேசதாசிவமன்றேநின்செய்கைசிறக்குநெறி
யோவாதுஞற்றிமுன்பின்னையுடலுயிராயுறவாய்க்
காவேநினக்கொருகைத்துணையாய்க்கண்ணுமாயதென்ப
கோவேயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௧௩௪)

தேவேசதாசிவமன்றேமுத்தின்றிருச்சின்னத்துரை
யாவார்துறையிலருளியவாவெவ்வமயத்திலு
நீவாயழைக்குமுன்னேயென்றுநின்புடைநிற்பதுகாண்
கோவேயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௧௩௫)

தேவேசதாசிவமன்றேநீசென்றதிசைகளெல்லா
மாவாவிடமும்பொருளுந்தந்தேவலுமாங்கமைத்துத்
தாவாதுநின்பிரபுத்துவசீலத்தைத்தாங்கியது
கோவேயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௧௩௬)

தேசமெலாம்புகழ்தேவேநின்பாதத்திருப்பொடிதான்
வாசநன்கூட்டுறுமான்மதமேயெனுண்மான்மதத்தை
வீசிமற்றேருட்டுறுமாமருந்தேசிரமேற்கொண்டனன்
கூசொழியாறுமுகநாவலசற்குருமணியே. (௧௩௭)

நின்னடித்தொண்டர்தந்தொண்டர்தந்தொண்டர்தந்நின்மலப்பூம், பொன்னடிப்பொன்னடிப்பொன்னடிப்பாதுகைப்பூம்பொடியா, லின்னடிப்பாலகன்மண்விளையாட்டையியற்றினன்யான், கொன்னெடித்தாறுமுகநாவலசற்குருமணியே. (௧௩௮)

நீபோற்றுமெய்ப்பொருள்பொன்னம்பலமென்றுநின்னைவிடா
தாய்போற்றுமெய்ப்பொருள்பொன்னம்பலமிதினுந்தரமென்
சேய்போற்றுமுக்கட்கரும்பின்சுவைகண்டதீங்கரும்பே
கூய்போற்றுமாறுமுகநாவலசற்குருமணியே. (௧௩௯)

தேவேநினக்குமுன்னெல்லைபின்னெல்லைதிருந்துவண்ணை
மேவார்புகழ்த்தில்லைநான்குநின்சீர்ப்படைவீடுகொண்டு
பாவாரழகுசிற்றம்பலத்தாரருள்பார்க்களித்தாய்
கோவேயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௧௪௦)

எந்நாட்டினுமுயர்தென்னாடுசெய்தவிருந்தவத்தாற்
பொன்னாட்டினுமுயரீழநன்னாட்டிற்புரியுநல்லூ
ரிந்நாட்டிருப்படைவீடியைந்தோயெனையேன்றுகொள்வை
கொன்னாட்டுமாறுமுகநாவலசற்குருமணியே. (௧௪௧)

தேவேயருளுகசெல்வாவருளுகதெய்வவருட்
காவேயருளுககண்ணேயருளுககண்மணியுட்
பாவாயருளுகபாலனையாண்டருள்பாலித்திடுங்
கோவேயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௧௪௨)

மாலார்பிறவியின்மாய்ந்தேனடைக்கலமங்கையர்தம்
பாலேதிரிந்தலைந்தெய்த்தேனடைக்கலம்பாழ்மலமாந்
தோலாவிடமொழித்தாள்வாயடைக்கலந்துய்யவரு
கூலாவெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௧௪௩)

எப்பொருணூலையுமொப்பவொட்டாதிங்கிரும்பகைசெய்
தப்பழுக்காறுகொன்றெப்புரவாண்மைகொள்சாதுக்கடந்
துப்பினிம்மாலைசமர்ப்பணஞ்செய்தனன்சோதிநின்பாற்
றுப்புரவாறுமுகநாவலசற்குருமணியே. (௧௪௪)

புண்ணியநின்னருண்மேன்மையெங்கேயென்றன்புன்மை யெங்
பண்ணியனுந்துதிமாலையென்றோர்குற்றம்பண்ணினனு [கே
லெண்ணனின்சேயன்பினாலமைத்தேன்பொறுத்தாண்டருள்சாட்
குண்ணியவாறுமுகநாவலசற்குருமணியே. (௧௪௫)

திருவுமெய்ச்செல்வமுஞ்சீர்த்தியுமாயுளூர்தேசுமருள்
வருமுறைமுத்தியுஞ்சித்தியுநின்சைவமாமரபின்
மருவினர்க்கென்றும்வழங்குவிப்பாயருள்வான்முகிலே
குருமரபாறுமுகநாவலசற்குருமணியே. (௧௪௬)

முத்துச்சிவிகைத்தமிழ்த்துறைவாய்மூர்முனிகள்வெள்ளை
மத்தத்தந்திப்பவனிப்பெருமான்மணிவாசகஞ்சொல்
சித்தக்குலபதிதந்திருப்பாதஞ்சிறந்துவெல்க
கொத்தொத்தவாறுமுகநாவலசற்குருமணியே. (௧௪௭)

மங்கையர்தம்முளரசிகுலச்சிறைமாவழுதி
துங்கமன்சேரர்திருமூலரம்மைநந்தூயசண்டி
சிங்கர்குழுத்தனித்தொண்டர்தஞ்சீர்வெல்கதேனிதழிக்
கொங்கலராறுமுகநாவலசற்குருசிகாமணியே. (௧௪௮)

திருத்தொண்டர்தந்திருவந்தாதிபாடியசீர்கொணம்பி
திருத்தொண்டர்மாக்கதைசேவித்தருண்மைநகர்ச்செல்வனூர்
பெருத்தொண்டபயரநபாயர்சீர்வெல்கபேசுபுகழ்க்
குருத்தொண்டவாறுமுகநாவலசற்குருமணியே. (௧௪௯)

மெய்கண்டநாதசித்தாந்தசைவத்துறைமேலையருள்
கைகண்டநந்திமறைஞானசம்பந்தர்சார்முகிலின்
மைகண்டகொற்றங்குடியார்புகழ்வெல்கவல்வினையைக்
கொய்கண்டவாறுமுகநாவலசற்குருமணியே. (௧௫௦)

பிணக்குப்புறமதநூல்களொரீஇச்சிவம்பேணியதி
ணிணக்குசித்தாந்தமரீஇச்சிவசாதனமேன்றுகொண்டு
தணப்பிலதீதப்பெருவாழ்விற்றொண்டர்தஞ்சார்புவெல்க
குணக்குலவாறுமுகநாவலசற்குருமணியே. (௧௫௧

பூதலம்வாழ்கதண்பொன்முகில்வாழ்கபுவியரசர்
வேதசிவாகமமெய்த்தமிழ்வேதம்விளங்குசிவ
போதசித்தாந்தமன்னீழிவாழ்கமெய்ப்பூரணவெங்
கோதகலாறுமுகநாவலசற்குருமணியே. (௧௫௨)

## நூற்பயன்.

பத்தியினாற்சற்குருமணிமாலைபடிப்பவர்க்குச்
சித்தியுமுத்தியுமீவாரழகுசிற்றம்பலத்தா
கொத்தருளாறுமுகநாவலசற்குருமணியா
லித்தலங்காத்துக்கடப்பாடுபூண்டவியையினன்றே

நாவலசற்குருமாமணிமாலைநயந்துட்கொள்வார்
நாவலராயப்புவிகாவலராயப்பொன்னாட்டினெழிம
காவலராயருட்கண்வலராயின்பக்கட்டமுதார
தேவலராவாசிற்றம்பலத்தாரடிசேர்ந்திருந்தே.

## சற்குருமணிமாலை முற்றிற்று.

மெய்கண்டதேவன்றிருவடிவாழ்க.

ஆறுமுகநாவல னடியிணைபரவுதந்த
தேறுமுகவின்பர் திகழ்தரற்பொருட்டே.

ஸ்ரீஞானஸம்பந்தபரமாசார்யபரப்பிரம்மணே நம:
ஸ்ரீமெய்கண்டநாததீர்த்தானந்ததேசிகேந்த்ரேப்யோநம:
ஸ்ரீவிருஷபஸ்வாமிசரணகாருண்யவாகீசேப்யோநம:
ஸ்ரீமதாறுமுகநாவலத்ராவிடசைவவாசஸ்பதிப்யோநம

திருச்சிற்றம்பலம்.